Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 20
மே.07-13,1995
ரூபா 10/00

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 100




## மூண்டுள்ள போரின் முக்கிய இலக்குகள்!

## நீலக்கடலில் சூழும் அபாயம்



முரசு 100

ரசிகன் தரும் இலக்கியநயம்

## முரசின் வெற்றி உங்களின் வெற்றி

## சேலை கட்டும் முறையில் ஒரு அழகு உண்டு

படத்தோடு விளக்கும் லேடீஸ் ஸ்பெசல்



கிரைம் ஸ்பெசல்

## அமெரிக்காவில் அதிர்ச்சிக் கொலை

# முரசம்

## இனியது நூறு

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

இது-
நூறாவது 'முரசு'!

ஒவ்வொரு படிக்கட்டுகளாய்
நிதானமாக-ஆனால்
நிலையான உறுதியுடன்,
நியாயமான நம்பிக்கைகளுடன்
உயர்ந்து-வளர்ந்து
நூறாவது படிக்கட்டைத்
தொட்டிருக்கிறது உங்கள் முரசு!

முதலாவது முரசில் இருந்து
நூறாவது முரசுவரை
வியாபார இலாபத்தை விட
வாசகர் நெஞ்சங்களை வசீகரிக்கும்
வேகமும், விருப்பமும், வீச்சுமே
முரசின்
இலட்சியமாக தொடர்ந்துகொண்டிருக்கிறது.

விளம்பரங்களின் விதம்
உயர்வதற்கேற்பவே-
பத்திரிகைகளைப் பொறுத்தவரை
வியாபார இலாபம் சாத்தியமாகும்.

ஆனால்-விளம்பரங்கள்
ஆக்கங்களின் களத்தை ஆக்கிரமித்து
விஷய கனத்தை குறைத்துவிடும்.

சர்வதேச ரீதியாக
அச்சடிக்கும் காகிதத்தின் விலை
வாரா வாரம் ஏறிக்கொண்டிருக்கிறது.

இவ்வாறான ஒரு போராட்டத்தை
சந்தித்தபடியே-
முரசு தனது இலட்சியத்தில்
உறுதியாக இருந்து
நூறாவது படிக்கட்டில் ஏறியுள்ளது.

40 பக்கங்களில் கூட
அடக்க முடியாத விஷய கனத்தை
சிறிய எழுத்துக்கள் மூலமும்
பக்க அமைப்பு முறை ஊடாகவும்
20 பக்கங்களில் சுமந்து
வாசகர் திருப்தியையே
நோக்கமாகக் கொண்டுள்ள
'முரசு'க்கு விளம்பரங்களால்
பக்கம் நிரப்ப விருப்பமில்லை.

எனினும் இது ஒரு
கடினமான போராட்டம்தான்.
முரசின் பணியாளர்கள்-நிர்வாகம்,
ஆக்கங்களைப் படைப்பவர்கள்,
அச்சக ஊழியர்கள்
மற்றும் தோள் கொடுத்து
துணை நிற்கும்-அனைவரதும்
பங்களிப்போடு-முரசு-
காகிதத்தாள் விலை ஏற்றம்,
வியாபார நிர்ப்பந்தங்கள்
யாவற்றையும் எதிர்த்து
தனது பயணத்தைத் தொடர்கிறது.

முரசின் வாசகர் பலம்
வியப்பாக விரிந்து உறுதியாக உள்ளது.
அதனால்தான்-உறுதி தளராமல்
உற்சாக முகம் காட்ட
முரசால் முடிகிறது.

முரசையும், அதன் பாணியையும்
இனி எந்த 'ஜாம்பவான்'களாலும்
புறக்கணித்துவிட முடியாது-
அலட்சியம் செய்யவும் இயலாது.

இலங்கையின் பத்திரிகைத் துறையில்
'முரசுக்குப் பின்'
என்றொரு தடத்தை
ஏற்படுத்தியிருக்கிறோம் என்பதை
சொல்லிக்கொள்ள முடிகிறதென்றால்
அது 'தற்பெருமை' ஆகாது!

செய்திகளின் நம்பகத்தன்மை,
விமர்சனங்களின் துல்லிய கணிப்புக்கள்,
சுருக்கமாய் ஆனால்
சுவையாக தரப்படும் படைப்புக்கள்
முரசு பதித்துள்ள முத்திரைகள்.

அரசியல்,சமூக, மத, இலக்கிய
தளங்களில்-
தவறானவர்களை முகஸ்துதி செய்வது,
தூக்கி நிறுத்த முயல்வது,
போலிச் சாமிகளது
பொன் மொழிகளை போடுவது
என்ற வரைமுறைகளை
முரசு உடைத்தெறிந்திருக்கிறது.


உங்கள் இமாலய ஆதரவோடு
தொடர்ந்தும் முரசு முத்திரை பதிக்கும்.

கரங்களை இறுக்கிக்கொள்வோம்!
தடைகளைக் கடந்துசெல்வோம்!
பூரிப்புக்களை பகிர்ந்துகொள்வோம்!
மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை,

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## ஆன்மீகம்

### எம் நாவினை அடக்கிட....



இயேசுவானவர் முப்பத்து மூன்றரை ஆண்டுகள் வாழ்ந்தார். அவரது வாழ்க்கை முழுவதிலும் எவரையும் குறை சொன்னதுமில்லை, யாரோடும் கடினமாகப் பேசினதும் இல்லை. யாருடைய மனதையும் புண்படுத்தியதும் இல்லை.

இன்று நம்முடைய நிலைமை என்ன? கொடூரமான-குத்தலான பேச்சுக்களால் எத்தனை உள்ளங்களை வேதனைப்படுத்துகிறோம். வேதனைப் படுத்தியது மட்டுமன்றி அதனைக் கூறி பெருமைப்பட்டும் கொள்கிறோம். அன்பு மொழிகளைப் பேசிட மறக்கும் நாம் மௌனியாய் வாழ்கிறோமா? இல்லை.... தீமையான மொழிகளைப் பேசித் திரிகின்றோம். அது மட்டுமன்றி பொய் பேசுவதற்கு அஞ்சுவதேயில்லை. நீங்கள் எனக்கு கூறவே இல்லை என பொய்க்கூறி காரியங்களை சாதித்துக் கொள்கிறோம்.

"நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது. அது சாவுக்கேதுவான விஷம் நிறைந்ததாய் இருக்கிறது." என்று சாலமோன் ஞானி அழகுற எடுத்துக் கூறியுள்ளார். சில வேளைகளில் குத்தல் வார்த்தை கேட்டு ஆத்திரத்தில் நாமும் வார்த்தைகளால் மற்றவர்களை புண்படுத்திவிடுகின்றோம். நேரங்கழித்து சிந்தித்துப் பார்த்தால் ஏன், எதற்கு? என்றறியாமலே கோபப்பட்டுவிட்டதை உணருவோம். எமது நாவை அடக்க விரும்பினால் அது இயலாத காரியம். அப்படியாயின் நாவை அடக்க என்னதான் செய்யவேண்டும்? நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்துவிடம் செல்லவேண்டும். எம்மை அவரிடம் ஒப்படைக்க வேண்டும். சங் 141:3ல் கூறியுள்ளபடி "கர்த்தாவே என் வாய்க்கு காவல் வையும். என் உதடுகளின் வாசலைக் காத்துக் கொள்ளும்." என இறைஞ்சி மன்றாடுவோமாக. அவர் ஒருவரால்தான் எமக்கு உதவ முடியும்.

ஜே.புளோரன்ஸ்-கெங்கல்ல.

### கல்வி பற்றி நபி(ஸல்) அவர்கள்

ஒரு முஸ்லிம் மாணவனின் நோக்கம், வெறுமனே தகவல்களை மூளையில் திணிக்கும் கல்வியைப் பெறுவதன்று. தான் பெற்ற கல்வியை இஸ்லாமிய சிந்தனைக் கட்டுக் கோப்பில் இணைத்து, அதனை நடைமுறைப் படுத்தும் ஒரு பூரணமான, இஸ்லாமிய ஆளுமையை உருவாக்குவதாகும். இந்த வகையில் ஒரு முஸ்லிம் மாணவன் சீரிய வாழ்க்கைக்கு "அல்-குர் ஆன், அல்-ஹதீஸ்" பற்றிய தெளிவான அறிவு பெறுவது அவசியமாகின்றது.

காலங்காலமாக முதியோர்களே சித்தாந்தங்களையும் தீர்மானங்களையும் உருவாக்கும் தகுதியுடையவர்கள் எனக் கருதப்படுகின்றது. அதாவது நீண்டகால அனுபவங்கள் மூலம் அவர்கள் பெற்ற அறிவு, தீர்மானங்களை மாற்றியமைக்கும் திறமை, அறிவாற்றல் ஆகியவை கொண்ட இளைஞர் அணியினை உருவாக்குவதே இந்தக் கால கட்டத்துக்கு பொருத்தமாகும்.

நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள். "நீ ஒரு அறிஞராக இரு; அல்லது ஒரு மாணவனாக இரு; அல்லது அறிவை செவிமடுப்பவனாக இரு. முடியாவிட்டால் கல்வியை விரும்புபவனாக இரு. ஐந்தாம் ஆளாக இராதே. அப்படியாயின் உனக்கு அழிவுதான்" என எச்சரிக்கையும் விடுத்துள்ளார்கள்.

மேலும் நவின்றார்கள்-"ஒவ்வொரு ஆண், பெண்மீதும் மார்க்கக் கல்வியை தேடிப்பெறுவது கட்டாயக் கடமையாகும்." என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

புத்தளம்-இர்சாத் ரஹுமத்துல்லா

## கவிதைப்போட்டி இல-97

### வியக்கவைத்த கவிதைகள்

**பயம்**

ஆணழகனாக
அண்ணாவுக்கு ஆசை.....
ஆமி பிடிக்குமென்று
அம்மாவுக்கு பயம்!

பாலசுந்தரம் பானுசந்தர்
அக்கரைப்பற்று.

**காதல் சின்னம்!**

காதலி!
உனக்காக
நான் கட்டிய
தாஜ்மஹால் இது!

பி.சி.அன்ரன்-மட். கூளாவடி.

**சோம்பலை ஒழிப்போம்**

முதுமையிலும்,
சோம்பலுடன்
முடங்கிக்கிடக்காமல்,
மண்ணைமுத்தமிடும்
மரணத்தின் நாள்வரை
திண்ணமுறவாழ்ந்திட
தினமும் அரைமணி
தேகப்பயிற்சி.

பூ.இதயரத்தினம்- ஆரையம்பதி-03.

**முறுக்கேறும்!**

சமாதானம்
நிலையாக
தேசம் முன்னேறும்!
சத்தான
உணவுண்ண
தேகம் முறுக்கேறும்!


ரேனுகா றிபாய்தீன் ஏறாவூர்-02.

**பூக்களென மலரட்டும்**

காளையரின் கைகளிலே
வீரமுண்டு என்றாலும்
புத்தாண்டு, சமாதானம்
பூக்களென மலரட்டும்

திருமதி.எஸ்.சர்வலோகநாதன்
திருகோணமலை.

## கவிதைப் போட்டி இல-100



**கவனியுங்கள்**

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 13.05.1995

-முகவரி-

கவிதைப் போட்டி இல: 100
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772,
கொழும்பு.



**பாடம்**

தேகம் செய்யும்
யோகமிது
தீயே இல்லாத
யாகமிது
நோயும் போகும்
பாதையிது
நூறாண்டு வாழ்வின்
பாடமிது.

வை.சித்திக்கிருஷ்ணா
பாண்டிருப்பு-02.

**வான்புகழை நீ அடைவாய்**

மண்ணுக்கே இரையாகும்
மானிடத்தின் ஊனுடலை
இறுமாப்பே இல்லாமல்
இரும்பாக்கும் திறன் செய்தால்,
இந்நிலையே சிலையாகி
உன்புகழின் கதை கூற!
வான்புகழை நீ அடைவாய்.

சி.பத்மினி
மட்டக்களப்பு.

**பரிசுக்குரிய கவிதை**

### குணம் வேண்டும்

தோளில் வலிமை கொண்டென்ன?-உயர்
தோழமை கொள்ளும் மனம் வேண்டும்!
போரில் வெற்றி குவித்தென்ன?-துயர்
போக்கிட துணியும் குணம் வேண்டும்!

கே.சத்தியேந்திரா-மட்டக்களப்பு.

**மனவலிமை காட்டு**

புய வலிமை காட்டுவதால்
கொடிய துயர் தீர்க்கலாமோ?
மனவலிமை காட்டியன்றோ
அகதிகளைக் கரை சேர்த்திடலாம்!

ஏ.அஹ்மது ஜுனைது-ஏறாவூர்-06.

**ஒத்திகை?**

ஆணழகன் போட்டிக்கு
அச்சாரமா?
இல்லை....
உழைக்கும் கரங்களுக்கு
உரமேற்றும்
ஒத்திகையா?

திருமதி.பிரேமராணி
பேரின்பராஜ்
கொழும்பு-13.

**தேக ஆரோக்கியம்**

தேகப் பயிற்சி செய்து
தினந்தோறும் வாழ்வதற்கு
இதமான இந்த இடம்
எல்லோர்க்கும் கிடையாதே

முஸம்மிலா முஸ்தபா-ஏறாவூர்-01.

**ஜாக்கிரதை**

வெற்றுடம்பைக் காட்டியிங்கு
வீற்றிருக்கும் வீர மாமா
கண்டவர் கண் பட்டிடுமேயுன்
கட்டுடம்பு ஜாக்கிரதை!

எஸ்.எம்.மாலா-மகுலுஸ்ஸ.

**காக்கை அதன் புத்தியுண்டோ?**

வெள்ளை யானை பலமிருக்கு!
தேக்குமர உடலிருக்கு
எல்லாம் இருந்துமென்ன!
எத்திப் பிழைப்பதற்கு
காக்கை அதன் புத்தியுண்டோ?
இல்லை எனில் வாழ்வில்
எல்லாமே இல்லையப்பா!

நிஜந்திகா கனகலிங்கம்
மட்டக்களப்பு.

**சுமை**

உடல் சுமையை குறைப்பதற்கு
உடற் பயிற்சி செய்கிறேன்
மனச் சுமையை குறைப்பதற்கு
வழிதான் என்னவோ?

எஸ்.மதிவாணி-துறைநீலாவணை-08.

**'தம்'**

இருபது வயதில்
'தம்' அடிக்காமல்
இருந்தால்
அறுபது வயதில்
'தம்' பிடிக்க முடியும்!'

பானுரமீஸ்-இராகம.

**ஆளுமைக்கு அத்திவாரம்**

ஆளுமைக்கு அத்திவாரம்
ஆணாக நீ போடுகின்றாய்
அரிதாரம் பூசி இங்கு
வாய்ப் பந்தல் போட்டிடு நீ
அமர்ந்திருக்கும் தரைமாறி
அரியணையாய் அது கிடைக்கும்!

சிவசுப்பிரமணியம் முருகதாஸ்
கொழும்பு-11.

**வித்தை**

16இல் கற்றுக்கொண்ட வித்தை
இது 60 இலும் கெடாத சொத்து.

மொஹமட்டீன்-ஹுனுபிட்டி.

**தோல்வி கண்டால்**

என்ன பயந்து விட்டீர்களா?
சமாதான முயற்சி தோல்வி
கண்டால்...(?)
புரிகிறதா? அதற்குத்தான்!

சி.ஸ்ரீரவி-இரத்தினபுரி.

**தரமாகக் கொடுத்திடுவேன்!**

வெற்றியும் தோல்வியும் விளையாட்டில்
சகஜம்தான்!
எட்டுமுறை ஆடியும் ஏற்றம் பெறவில்லை
ஆவி பிரியுமுன் ஆஜானு பாகுவாகி
தாவி இம்முறை தரமாகக் கொடுத்திடுவேன்!

விநாயகமூர்த்தி சுவர்ணா- ஆரையம்பதி-01.

வளர்ந்து வரும் உனக்கு வயதோ நூறு! இந்நேரம் தருகின்றேன் என்னவளின் வாழ்த்துக்கள் பலநூறு. தருணம் பார்த்து சொன்னேன் தயவாக ஏற்றுக்கொள் வாழ்த்தினை!!

உள்ளம் உருக்கி கொள்ளை கொள்ளும் தாயினைத் தொடர்ந்து வரும் மர்ம மகாசூலத்தையும் தேன் நடை ஒப்ப சொல்நடை வழங்கும் ரசிகனையும் இவ்வேளை சொல்லி விடுவாயா? எதிர்பார்ப்போடு ஏங்கும் நெஞ்சம்

எஸ்.ஏ.பாத்திமா நிஹாசா-ஏத்தாலை.

இராஜதந்திரி அரசியலை அலசுவது மாதிரி தெரியவில்லை! கலக்குகிறார் போலிருக்கிறது: வேண்டாம் தலைவா! குட்டையை நீங்கள் குழப்பிவிட்டால் பின் (ஊறிய) மட்டைகள் என்னாவது?

து.சர்மிளாதேவி-கலஹா.

அன்பின் முரசே!

உனது ஆக்கங்கள் அனைத்தும் இனிதிலும் இனிது. 'தாய்' நாவல் சுப்பர். எக்ஸ்ரே ரிப்போட்டும் அதிரடி அய்யாத்துரையின் அலசலும், அற்புதனின் அற்புதமான அரசியல் கட்டுரையும் தினமுரசுக்கு இன்னும் மெருகூட்டுகிறது.

வே.சிதம்பரக்குமார்-திருமலை.

சாதனைச் சிகரத்தில் நூறாவது முத்தை பதிக்கும் அன்பு முரசே! சாதனை போதும் என்று திருப்தி பட்டுவிடக் கூடாது. திருப்திதான் சாதனைகளுக்குப் பகை-மறந்து விடாதே!

ஏ. தமாசேகர்-திருகோணமலை.

□□

முரசுக்கு 'நூறு' வயதல்ல. அப்பிடிச் சொன்னால் என்றும் இளமை என்னாவது? எனவே இது வயதல்ல, சாதனைச் சுவடுகள்தான்.

கே.புவனேஸ்வரி-மட்டக்களப்பு

□□

மார்க்கண்டேயத்தனத்தோடு நூறைக் கடக்கும் முரசு 'ஆயிரத்தை எட்டும்போதும், நான் இருந்து வாழ்த்த வேண்டும். வாழ்க முரசு.

மு.பரமதேவா-கனடா.

□□

அரசியல் வானை அலசி அவதானிப்பு நிலையமாக இருக்கும் தினமுரசே! தொடரட்டும் பணி. நூறு. நூறு முத்தங்கள்.

என்.எம்.றஹீம்-சவுதி அரேபியா.




எங்கள் இதயங்களில் குடிகொண்ட ஒரேயொரு பத்திரிகை நீதான். நீ சுமந்துவரும் கவிதை, சிறுகதை, அரசியல் அலசல், மற்றும் சினி செய்திகள் பிரமாதம்.

தியாகேஸ்வரி, பரமேஸ்வரி, பங்கேஸ்வரி,மங்கேஸ்வரன்
முறக்கொட்டாஞ்சேனை.

அன்பின் முரசே!

நீ வாரா வாரம் சுமந்து வரும் உன் பாப்பா முரசு. சிறுகதை, தாய், மகாபாரதம், ரசிகன் தரும் இலக்கிய நயம் ஆகியன என்னைக் கவர்ந்து விட்டன. உன் சேவை என்றென்றும் நீடிக்க எனது இதயங்கனிந்த வாழ்த்துக்கள்.

இராஜலிங்கம் விஜயா-லெவலன்.



உன் அனைத்து அம்சங்களும் சூப்பர். பாப்பா முரசு, சிறுகதை, மகாபாரதம், சினிவிசிட் அத்தனை அம்சங்களும் அருமையிலும் அருமை.

எஸ்.சுப்பிரமணியம் சந்திரவதனி
பீற்று எஸ்டேட்.

அன்பின் முரசே

உலகில் நடந்த கொலைகள் குற்றச் செயல்கள் வாராவாரம் தொகுத்துத் தரும் எங்கள் ரசிகனுக்கு எப்படி நன்றி சொல்வதென்றே தெரியவில்லை.

செல்வி டி.புஸ்பலதா-புத்தளம்.

# ஒரு வருடத்தின் பின்னரே உள்ளூராட்சித் தேர்தல்!

# ஜனாதிபதி ஆட்சி முறை தொடரும்?

## யுத்த சூழ்நிலை காரணமாக புதிய யோசனைகள்!

(அரசியல் நிருபர்)

**ஜனாதிபதி ஆட்சிமுறையை உடனடியாக மாற்றும் யோசனையை அரசாங்கம் பின்போடக் கூடும் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. யுத்த சூழ்நிலை உருவாகியுள்ளதால் அதிகாரமுடைய ஜனாதிபதிப் பதவியை சில காலம் வைத்திருக்க சந்திரிக்கா குமாரதுங்கா விரும்பக்கூடும் என்று அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.**

எதிர்வரும் ஜுன்-ஜுலை மாதத்திற்கு முன்னர் ஜனாதிபதி ஆட்சி முறை மாற்றப்படும் என்று ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டிருந்தது.

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையை மாற்றுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியும் ஆதரவு தெரிவிக்கத் தயாராகியது.

ஜனாதிபதி சந்திரிக்கா பிரதமரானால் பாராளுமன்றத்தில் அவரை சந்திக்கலாம் என்றும், நேரடியாகவே அவரை நோக்கி கேள்விகள் தொடுக்கலாம் என்றும் ஐக்கிய தேசியக் கட்சி கருதுகிறது.

எப்படியாவது சந்திரிக்கா குமாரதுங்காவை பாராளுமன்றத்திற்கு வரவைத்து விடவேண்டும் என்பது ஐக்கிய தேசியக் கட்சி தலைவர்களது எண்ணமாக இருக்கிறது.

அதனால் ஜனாதிபதி ஆட்சி முறையை மாற்றுவதற்கு பாராளுமன்றத்தில் ஆதரவளிக்க அக்கட்சி முன்வந்துள்ளது. இதேவேளையில் நாட்டில் தற்போது யுத்த சூழல் ஏற்பட்டுள்ளதால் ஜனாதிபதி முறையை உடனடியாக மாற்றுவது அவசியம் தானா என்று ஆளும் கட்சியினர் யோசித்து வருகின்றனர்.

யுத்தத்தை நடத்திச் செல்ல வசதியாக நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறை மேலும் சில காலம் இருப்பது நல்லது என்று அவர்கள் கருதுவதாகத் தெரிகிறது.

இதேவேளை உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களையும் குறைந்தது மேலும் ஒரு வருடத்திற்கு பின்போடும் யோசனையும் அரச தரப்பிடம் இருப்பதாகத் தெரிகிறது.

அவ்வாறு ஒரு வருடத்திற்கு உள்ளூராட்சி தேர்தல்களை பின்போடும் நிலையில், தற்போதுள்ள உள்ளூராட்சி சபைகளது பதவிக்காலத்தை நீடிப்பதா? அல்லது கலைத்துவிடுவதா? என்று யோசிக்கப்படுகிறது.

அநேகமாக உள்ளூராட்சி சபைகளது பதவிக்காலத்தை நீடிக்கலாம் என்றே நம்பப்படுகிறது.

---

# புலிகளது வானொலிச் செய்தியால் குழப்பம்!

## தாமத உரிமை கோரல் புலிகளின் தந்திரமா?

## முடிவெடுப்பதில் படை அதிகாரிகள் திணறல்!

(வர்மா)

கடந்த 28-29ம் திகதிகளில் நொறுங்கிய இரண்டு 'அவ்ரோ' விமானங்கள் தொடர்பாக முன்னுக்குப் பின் முரணான செய்திகள் வெளியாகிவருகின்றன.

28.04.95 அன்று முதலில் நொறுங்கிய விமானம் புலிகளால் தாக்கப்பட்டதா இல்லையா என்று விமானப்படை அதிகாரிகளினால் ஒரு முடிவுக்கு வரமுடியாமல் இருக்கிறது.

28ம் திகதி மாலையும், 29ம் திகதி காலையும் 'புலிகளின் குரல்' வானொலி வெளியிட்ட செய்திகள்தான் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிகிறது.

### புலிகளின் குரல் செய்தி

29ம் திகதி காலை 'புலிகளின் குரல்' வானொலி வெளியிட்ட செய்தியை கீழே தருகிறோம்.

''நேற்று மாலை சிறீலங்கா வான்படைப்பிரிவு விமானம் ஒன்று தீப்பற்றி எரிந்து பலாலிக் கடல் அருகே விழுந்தது.

இவ் விமானம் 78 அடி நீளமும், 30 அடி, 01 அங்குல அகலமும் கொண்டது.

இவ்விமானம் உள் இயந்திரக் கோளாறு காரணமாகவே தீப்பிடித்தது."

இவ்வாறு 'புலிகளின் குரல்' வானொலி யாழ்ப்பாணத்தில் அறிவித்திருந்தது.

புலிகள் தாக்கியதாக அச் செய்தியில் தெரிவிக்கப்படவில்லை.

### தவறான நம்பிக்கை?

படையினரும் புலிகள் தாக்குதல் நடத்தவில்லை என்றே நம்பினார்கள்.

புலிகள் தாக்கியிருக்கக் கூடும் என்று சந்தேகித்திருந்தால் இரண்டாவது விமானத் தாக்குதலில் இருந்து காப்பாற்றியிருக்க முடியும்.

பலாலி விமானத் தளத்துக்கு சென்று இறங்குவதற்கு கடலுக்கு மேலாக சென்றிருந்தால் இரண்டாவது விமானம் தாக்குதலில் இருந்து தப்பியிருக்கும் என்று நம்பப்படுகிறது.

ஆனால், புலிகள் தாக்குதல் நடத்தவில்லை என்ற நம்பிக்கையில் 29ம் திகதி காலையில் சென்ற விமானம் தரைப்பக்க வழியாக தாழப் பறந்து பலாலி விமானத் தளத்தில் இறங்க முற்பட்டது.

அப்போதுதான் புலிகள் தாக்கியிருக்கிறார்கள். இதனால் புலிகளது கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் விமானம் விழுந்து நொறுங்கியது.

திசைதிருப்பலா?

படையினரை ஏமாற்றுவதற்காகவே 28ம் திகதி விமானத்தை தாக்கிய செய்தியை புலிகள் உடனடியாக உரிமை கோரவில்லை என்று கருதப்படுகிறது.

முதல் தாக்குதலுக்கு உரிமை கோராமல் இரண்டாவது தாக்குதலுக்கு புலிகள் வலை விரித்துக் காத்திருந்ததாக நம்பப்படுகிறது.

இதனால்தான் இரண்டாவது 'அவ்ரோ' விமானம் புலிகளது குறியில் சுலபமாகச் சிக்கியதாகச் சொல்லப்படுகிறது.

29.04.95 அன்று இரவு புலிகளின் குரல் வானொலி வெளியிட்ட செய்தியில், "இரண்டு விமானங்களும் புலிகளின் விமான எதிர்ப்புப் படைப் பிரிவினரால் சுட்டு வீழ்த்தப்பட்டதாக" உரிமை கோரப்பட்டது.

இதே வேளை படைத்தரப்பும் இரண்டு விமானங்களும் புலிகளால் தாக்கப்பட்டதாகவே 29ம் திகதி தெரிவித் திருந்தது.

எனினும், தற்போது 28ம் திகதி 'அவ்ரோ' விமானம் புலிகளால் தாக்கப்படவில்லை. இயந்திரக் கோளாறு காரணமாகவே அது விழுந்திருக்கலாம் என்று படைத்தரப்பு சந்தேகிக்கிறது.

29ம் திகதி 'அவ்ரோ' விமானத்தை தாக்கியது மட்டுமே புலிகளது வேலை என்று படைத் தரப்பில் ஒரு சில அதிகாரிகள் நம்புகின்றனர்.

ஆனால் புலிகள் தரப்பு இரண்டு விமானங்களும் தம்மால் தாக்கி அழிக்கப்பட்டதாக உறுதியாகத் தெரிவித்துள்ளது.

### புலிகளின் தந்திரம்

இராணுவ ஆய்வாளர்களது கருத்துப்படி புலிகள் தமது வானொலிச் செய்தி மூலமும், தொலைத் தொடர்பு சாதனங்களில் தமக்கிடையே நடத்திய திசை திருப்பும் உரையாடல்கள் மூலமும் படையினரை ஏமாற்றி உள்ளனர்.

அதனால் தான் இரண்டாவது விமானத்தையும் வீழ்த்தும்வரை தாமதித்து விட்டு புலிகள் உரிமை கோரியிருக்கலாம் என்று அந்த ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

### இரண்டும் கோளாறாம்

இதேவேளை முன்னாள் விமானப்படை தளபதி ஹரி குணத்திலக்க கருத்துத் தெரிவிக்கும்போது, இரண்டு அவ்ரோ விமானங்களும் இயந்திரக் கோளாறு காரணமாகவே விழுந்து நொறுங்கியுள்ளன என்று கூறியுள்ளார்.

"ஏவுகணைத் தாக்குதல்" என்பது பொய்யான தகவல் என்றும் கூறியுள்ளார்.

முரசுக்கு கிடைத்துள்ள நம்பகமான தகவலின்படி புலிகளிடம் விமான எதிர்ப்பு ஏவுகணைகள் இருப்பது உண்மை என்று தெரியவந்துள்ளது.

---

# "கையில் விடுதலை கிட்டும் வரை கடற்புலி இடிக்கும். காலில் விடுதலை கிட்டும் வரை கரும்புலி அடிக்கும்"

## புலிகளின் ஆஸ்தான கவிஞர் எழுதியுள்ள கவிதை.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் 'ஈழநாதம்' தினசரியில் 28.04.95 அன்று ஒரு கவிதை பிரசுரமாகியிருந்தது.

புலிகளது ஆஸ்தான கவிஞர் என்றழைக்கப்படும் புதுவை இரத்தினதுரை அக் கவிதையை எழுதியுள்ளார். இவர் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனுக்கு நெருக்கமானவர்.

அக்கவிதையில் இங்கு வெளியிடக்கூடிய சில பகுதிகள் மட்டுமே தரப்படுகின்றன. (ஏனையவை காரசாரம் அதிகம்.)

அனுருத்த ரத்தவத்தை மேற்பார்த்து
அலரி மாளிகை அக்காவுக்கு!
வடக்கில் இருந்து வாலிபன் ஒருவன்,
இங்கு எல்லோரும் நல்ல சுகம்
உங்கள் சுக சேமம் எப்படி?
இரண்டு கப்பலுமா
கடற்கரும்புலிகளின் கற்பூரத்துக்கு பலி.

அரோகரா.
தொடர்ந்தும் கடற்புலிகள்
அடித்துச் கொண்டுதான் இருப்பார்கள்.
காலத்துக்காலம் ஏமார்ந்த கதை
இனியும் தொடரும் என்று
எப்படி எதிர்பார்த்தீர்கள்?
கால அவகாசம் முடியும் போது
அரசின் சார்பில் யாரை அனுப்பினீர்கள்?
மரியாதைக் கென்றாலும்
ஒரு மந்திரியை அனுப்பியிருக்கலாம்.
மதகுருவை ஏன் அனுப்பினீர்கள்?
பூசை வைக்கவா?
இந்தாபார் நீங்கள் இறங்கிவராவிட்டால்
என்ன நடக்கும் தெரியுமா
என்பது போல
இந்தியாவுக்கு ஓடினீர்கள்....?
கையில் விடுதலை கிட்டும்வரை
கடற்புலி இடிக்கும்
காலில் விடுதலை கிட்டும்வரை
கரும்புலி அடிக்கும்!
'சார்க் நாட்டு படைகளா?'
சந்தோசம் அவையும் வரட்டும்.

பாறை உடையுமே தவிர
ஒருபோதும் வளையாது.

இவ்வாறு அந்தக் கவிதையில் புதுவை இரத்தினதுரை எழுதியுள்ளார்.

---

# திருமலையில் ஊர்காவல் படை?

(திருமலை)

திருக்கோணமலையில் ஊர்காவல் படைகளை அமைக்கும் பணிகளில் பொலிசார் ஈடுபட்டு வருகின்றனர். ஆயுதங்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

திருமலை நகர், படையினரது பூரண கட்டுப்பாட்டில் இருக்கிறது. அவ்வாறு இருக்கும்போது பெரும்பான்மை இனத்தவர்களை ஆயுதபாணிகளாக்குவது ஏன் என்று அங்குள்ள தமிழ் மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

ஊர்காவல் படையில் சேர தமிழ் இளைஞர்களிடமும் கேட்கப்பட்டதாம். பலர் மறுத்து விட்டதாகத் தெரிகிறது.

தமிழ் இளைஞர்கள் சிலருக்கு ஆயுதங்களை வழங்கிவிட்டு ஊர்காவல் படை அமைப்பதை நியாயப்படுத்த பொலிசார் நினைக்கின்றனர் என்று விஷயமறிந்த சிலர் தெரிவிக்கின்றனர்.

திடீரென்று திருமலையில் ஊர்காவல் படையை உருவாக்கும் அவசியம் ஏன் வந்தது? என்றே பலரும் கேள்வி எழுப்புகின்றனர்.

---

# ஆயுதப் பரிசோதனை! மக்கள் அச்சம்!

(வவுனியா)

மே முதலாம் திகதி இரவு வவுனியா விமானப்படை முகாமில் இருந்து வேட்டோசைகள் கேட்டன. இதனால் வவுனியா நகரில் உள்ள மக்கள் கலக்கமடைந்தனர்.

நீண்ட தூரம் சென்று தாக்கக்கூடிய ஆயுதங்களை விமானப்படையினர் பரிசீலித்துப் பார்த்துள்ளனர். வானத்தை நோக்கி வெளிச்சத்தோடு சென்று தோட்டாக்கள் வெடித்தன.

விமானங்களைத் தாக்கும் ஆயுதங்களை புலிகள் பெற்றுள்ளதால் உயரத்தில் இருந்து தாக்கும் ஆயுதங்களை விமானப் படையினர் பரிசீலித்துப் பார்த்திருக்கலாம் என்று மக்கள் பேசிக்கொண்டனர்.

---

# "விமான எதிர்ப்புப் படைப் பிரிவு–புதிய சகாப்தம்" புலிகளின் மேதின விழாவில் தெரிவிப்பு!

## "விடுதலைப் போரை நசுக்கவே சமாதானம்-பேச்சுவார்த்தை"

புலிகள் அமைப்பினரின் மேதின ஊர்வலம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. யாழ்ப்பாணம் மருதனாமடம் சந்தியில் இருந்து புறப்பட்ட ஊர்வலம் யாழ் பல் கலைக்கழக மைதானத்தில் முடிவடைந்தது.

ஊர்வலத்தில் புலிகளது விமான எதிர்ப்பு படைப்பிரிவு கனரக வாகனங்களில் வந்து பாதுகாப்பு வழங்கியது.

தகர்க்கப்பட்ட 'அவ்ரோ' விமானங்கள், கடற்புலிகளால் தாக்கப்பட்ட கடற்படைக் கப்பல்கள் போன்றவற்றின் மாதிரி வடிவிலான ஊர்திகளும் ஊர்வலத்தில் கொண்டு வரப்பட்டன.

தமிழீழத்தை குறித்துக் காட்டும் பெரியளவிலான வரைபடம், பிரபாகரனின் பெரியளவான உருவப்படம், புலிக்கொடி ஆகியனவும் ஊர்வலத்தில் காணப்பட்டன.

ஊர்வலத்தின் முடிவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் புலிகளது பிரமுகர் தமிழ்ச் செல்வன் உரையாற்றினார்.

அவர் தனது உரையில் தெரிவித்ததாவது,

"இன்றைய மே நாள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் எழுச்சியையும், தேசியத் தலைவரின் கரத்தையும் பலப்படுத்தும் நாளாக உள்ளது.

போராட்டத்தில் புதிய சகாப்தத்துக்குள் நாம் காலடி எடுத்து வைத்துள்ளோம். தேசியத் தலைவரால் உருவாக்கப்பட்டுள்ள விமான எதிர்ப்பு படைப்பிரிவு சிறீலங்கா அரசின் படைப் பலத்தை கேள்விக்குள்ளாக் கியுள்ளது.

உரிமைக்காவும், உண்மைக்காவும் போராடும் இயக்கத்தின் வெற்றி நிச்சயமானது. உரிமைப்போர் தீவிரமாக உச்சமடையும்போது பேச்சுவார்த்தை, சமாதானம் என்று கூறி உரிமைப் போரை நசுக்க முற்படுவது புதுமையல்ல.

சந்திரிக்கா அரசின் வருகையை புதிய மாற்றம் என்று கருதினோம். வரலாற்றில் இனவாதம் எவ்வாறு தென்பட்டதோ அதை விட சற்று வித்தியாசமானவராக, ஆபத்தானவராக அவர் தோற்றம் காட்டினார்.

நீண்ட நோக்கில் சந்திரிக்கா ஆபத்தான நிலைக்கு தள்ளப்படுவார். சமாதானம் என்ற பெயரில் விடுதலைப் போரை நசுக்குவதே சந்திரிக்காவின் திட்டமாகும்.

பேச்சுவார்த்தை, சமாதானம் என்பவை புலிகள் பலவீனம் காரணமாக எடுக்கப்பட்ட தீர்மானங்கள் என்று சந்திரிக்கா கருதியது துர்ப்பாக்கியமானது.

மீண்டும் எமது இனம் உறுதியாக நின்று போராடி உரிமைகளை மீட்க வேண்டிய நிலையில் இருக்கிறது.

பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருந்தபோது நிரந்தரமான போர் நிறுத்தத்தில் கைச்சாத்திட நாம் விரும்பினோம். ஆனால் சிறீலங்கா அரசாங்கம் தற்காலிகமான மோதல் தவிர்ப்பையே விரும்பியது.

போர் தவிர்ப்பு உடன்படிக்கையை அரசு பல தடவை மீறியது. சந்திரிக்கா அரசாங்கம் வெறும் சமாதானப் பிரசாரத்தை மட்டுமே மேற்கொண்டது.

இன்று அரசாங்கம் செய்துவரும் ஒரு தலைப்பட்சமான பிரசாரத்தை வெளிநாடுகள் நம்புகின்றன. ஆனால் என்றோ ஒருநாள் உண்மைகள் வெளிவரும்போது வெளிநாடுகள் தமது கொள்கைகளை மாற்றிக் கொள்ளும்.

நீதிக்காகவும், தர்மத்திற்காகவும் தமிழீழ தேசியத் தலைவரின் வழிகாட்டலில் நடைபெறும் போராட்டம் வெற்றியடையும்."

இவ்வாறு தமிழ் செல்வன் தனது உரையில் தெரிவித்தார்.

"தமிழீழ வரவை விரைவுபடுத்தும் நிகழ்வுகளை உணராமுடிவதாக!...." மேதினப் பேரணியில் கலந்துகொண்ட மக்கள் தெரிவித்தனர் என்று 'புலிகளின் குரல்' வானொலி தெரிவித்தது.

---

# படைகள்–புலிகள் பலப்பரீட்சை

## மட்டக்களப்பில் மக்கள் பீதி!

மோதல் தவிர்ப்பு முடிவடைந்து மட்டக்களப்பில் பதட்ட நிலை நீடித்துவருகிறது.

கிழக்கில் பரவலான தாக்குதல்களை மேற்கொள்வதற்கு புலிகளின் தாக்குதல் பிரிவுகள் திட்டமிட்டுள்ளதாக அறியப்படுகிறது.

கிழக்கில் பரவலான தாக்குதல்களை முடுக்கிவிட்டபடி வடக்கில் பாரிய தாக்குதல் ஒன்றுக்கு புலிகள் தயாராகி வருவதாக முரசுக்கு கிடைத்துள்ள தகவல்கள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பில் படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தினால் பொதுமக்களும் காயமடைந்துள்ளனர்.

02.05.95 அன்று ஏறாவூர் பகுதியில் புலிகளது மோட்டார் தாக்குதலால் ஒரு பொலிசார் கொல்லப்பட்டார். இதனையடுத்து பொலிசார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் முத்துலட்சுமி (வயது 27) என்னும் பெண் வயிற்றில் காயமடைந்தார்.

போர் தவிர்ப்பு நிறுத்தம் முடிவடைந்த பின்னர் கிழக்கில் மிதி வெடிகளில் சிக்கி இராணுவ வீரர்கள் பலர் கால்களை இழந்துள்ளனர்.

படைகள்-புலிகள் பலப்பரீட்சை காரணமாக மக்கள் பீதியடைந்துள்ளதோடு பல பகுதிகளில் மக்களின் நடமாட்டமும் குறைந்து காணப்படுகிறது.

02.05.95 அன்று மட்டக்களப்பு பொலிஸ் நிலையம் முன்பாக சைக்கிள் குண்டொன்று கண்டு பிடிக்கப்பட்டது. இதனையடுத்து மட்டக்களப்பு நகரில் பதட்டம் ஏற்பட்டது.

சைக்கிள் குண்டு கண்டெடுக்கப்பட்டதையடுத்து மட்டக்களப்பு நகருக்கு செல்லும் பிரதான பாதைகள் யாவும் மூடப்பட்டு பலத்த சோதனை நடத்தப்பட்டது.

சந்திவெளி, முறக்கொட்டாஞ்சேனை, கிரான் போன்ற பகுதிகள் வெறிச்சோடிக் காணப்படுகின்றன.

அம்பாறை மாவட்டத்திலும் படையினரது சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

# வீட்டுப் பொருட்களை எடுத்து ச் செல்வதா?

# சோலைவரி அறவீட்டாளர்கள்மீது புகார்

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு கல்லடியில் வாடகைக்கு குடியிருந்த ஒருவரின் வீட்டுக்குச் சென்ற மட்டு. மாநகர சபையின் சோலைவரி அறவீட்டுக்குழு அவரை சோலைவரி செலுத்தக் கூறி தர்க்கம் புரிந்து வீட்டு உபயோகப் பொருட்களை (இருக்கைகள்) பலாத்காரமாக எடுத்துச் சென்றதற்காக பொலிஸில் விசாரணை மேற் கொள்ளப்பட்டு 10 நாட்களின் பின்னரே அந்த இருக்கைகள் தன்னிடம் ஒப்படைக்கப்பட்டதாக முறைப்பாட்டாளரான வாடகைக்கு குடியிருக்கும் பெண்மணி தெரிவித்தார்.

சம்பவம் பற்றி அவர் தெரிவிக்கையில்; குறித்த வங்கியொன்றில் கடமையாற்றும் தான் அண்மையில் அவ்வீட்டை வாடகைக்குப் பெற்றிருந்ததாகவும் மேற்படி சோலை வரி அறவீட்டுக்குழு வந்து செலுத்தப்படாத வரியைச் செலுத்துமாறு தன்னிடம் கோரியதும் தான் ஒரு வாடகைக் குடியிருப்பாளர் என்றும் வீட்டுச் சொந்தக்காரர் பக்கத்தில் இருக்கிறார், அவரிடம் கதைத்துக் கொள்ளுங்கள் என்று கூறவே வரி அறவீட்டுக்குழு தர்க்கம் புரிந்து தனது பொருட்களை எடுத்துச் சென்றதாகத் தெரிவித்தார்.

இது போன்ற சம்பவங்கள் மேலும் பல அப்பகுதிகளில் இடம் பெற்றதாகத் தெரியவருகிறது.

இவ்வரி அறவிடும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட அந்தக் குழுவின் அதிகாரி தற்சமயம் அக்கரைப்பற்று ஆலையடி வேம்புக்கு இடம் மாற்றப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

# நிரந்தர நியமனம் எப்போது?

## 'மாகாண சுகாதார அமைச்சே கண் திறவாய்'

(நிந்தவூர் நிருபர்)

அம்பாறை மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் கடந்த பல வருட காலமாகத் தொண்டர்களாகச் சேவையாற்றிவரும் இளைஞர், யுவதிகள் பலர் தமக்கு என்றுதான் நிரந்தர நியமனங்கள் கிடைக்குமென அங்கலாய்த்தவண்ணமுள்ளனர்.

குறித்த வைத்தியசாலைகளில் நிலவும் சிற்றூழியர்கள் பற்றாக்குறை காரணமாக படித்து வேலையற்றிருந்த இளைஞர், யுவதிகள் தொண்டர்களாக சேர்க்கப்பட்டு, பல வருடகாலமாக இவர்கள் எவ்வித கொடுப்பனவுகளுமின்றி தொண்டர் சேவை யாற்றி வருகின்றனர்.

தமக்கு நிரந்தர நியமனங்கள் கிடைக்குமென்ற நம்பிக்கையுடன் பலவருடங்களை இவர்கள் தொண்டர் சேவையில் கடத்தியும் இன்னும் அவர்களுக்கு விமோசனங்கள் கிடைத்ததாக இல்லை!

21.08.1993, 16.11.1993, 31.05.1994, 13.02.1995 ஆகிய தினங்களில் சமயா சமய, அமைய தொழிலாளர், சுத்திகரிப்பு தொழிலாளர் நியமனங்களுக்கென விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகப்பரீட்சைகளுக்குத் தோற்றியும் நியமனங்கள் வழங்கப்படாது 'மௌனம்' சாதிக்கப்பட்டுவருவதாகத் தொண்டர் சேவையாளர்கள் பலர் கவலையுடன் தெரிவித்தனர்.

சுகாதார அமைச்சும், மாகாண சுகாதார அமைச்சும் இத்தொண்டர்கள் விடயத்தில் அக்கறை கொண்டு, முன்னுரிமை அடிப்படையில் அவர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம் வழங்க முன்வர வேண்டுமெனக் கோரப்படுகின்றது. கவனிக்குமா சுகாதார அமைச்சு?

# மாணவர் தொகை 1300- ஆசிரியர்கள் 16 பேர்

## ஊவா மாகாணத்தில் ஒடுங்கி நிற்கும் பாடசாலை

ஊவா மாகாணத்தில் பசறைத் தேர்தல் தொகுதியில் இருக்கும் கோணக்கலை தமிழ் வித்தியாலயத்தில் 1300 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். மாணவர் எண்ணிக்கைக் கேற்ப 49 ஆசிரியர்கள் தேவைப்படும் இப் பாடசாலையில் 16 பேர் மாத்திரமே உள்ளனர்.

சமுதாயப் பற்றும், தியாக சிந்தையுமுள்ள ஆசிரியர் சிலரின் அயராத முயற்சியின் காரணமாக சனி-ஞாயிற்றுக்கிழமைகளிலும், விடுமுறை தினங்களிலும் மேலதிக வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன.

இவ்வாறான செயற்பாடுகளின் காரணமாக இப்பாடசாலை மாணவர்கள் க.பொ.த. (சாதாரணம்) பரீட்சைகளிலும் 5ம் ஆண்டு புலமைப் பரீட்சைகளிலும் அதிகமாக சித்தியடைகின்றனர். மற்றும் விளையாட்டுப் போட்டி, தமிழ் மொழித் தினப் போட்டி முதலியவற்றிலும் இம் மாணவர்கள் அகில இலங்கை மட்டத்திலும் போட்டியிடும் அளவிற்கு முன்னேறியுள்ளனர்.

இப் பாடசாலையில் கடமையாற்றும் ஒவ்வொரு ஆசிரியரும் ஒரே நேரத்தில் அதாவது 40 நிமிட நேரத்தில் குறைந்தது 120 மாணவர்களுக்கு கற்பிக்க வேண்டிய நிலையில் உள்ளனர். 25 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்பதெல்லாம் இவர்களைப் பொறுத்தவரையில் உலக அதிசயங்களாக உள்ளன.

49 ஆசிரியர்களின் சேவையினை நிறைவேற்ற முனையும் இவ்வாசிரியர்கள் புதிய ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள் என எதிர்பார்த்த வண்ணம் நாட்களை எண்ணிக் கொண்டு வேதனையின் விளிம்பிற்கே வந்து விட்டனர். இவ்வாறு இருக்கையில் கடந்த ஒரு மாத காலத்துக்குள் மூன்று ஆசிரியர்கள் இப்பாடசாலையிலிருந்து எந்த விதமான பதில் ஆசிரியர்களும் நியமிக்காத வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதில் வேடிக்கை என்னவென்றால் ஊவா மாகாண கல்வி அமைச்சோடு, கல்வித் திணைக்களமும் சேர்ந்து அமைக்கப்பட்ட இடமாற்றச் சபைக்குத் தெரியாமலே இவ்விட மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. அத்தோடு, பசறையில் ஒரு கோட்டக்கல்வி நிலையம் இருந்தும் அங்குள்ள அதிகாரிகளின் ஆலோசனைகள் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# கம்பங்கள் உண்டு

## மின் குமிழ்கள் இல்லை

கல்முனைக்குடி நடராஜா வாய்க்கால் பெரும் பழமை வாய்ந்த கால்வாய்களில் ஒன்றாய் திகழ்கிறது.

இப்பகுதியில் மழைக்காலங்களில் பெருக்கெடுத்து ஓடும் பெருவெள்ளம் இக்கால்வாய் ஊடாக கடலுடன் சங்கமமாகிறது.

இக்கால்வாயின் இரு மருங்கிலும் குடிமக்கள் வாழ்வதோடு கால்வாயை ஓர் வீதியும் ஊடறுத்துச் செல்கிறது.

இவ்வீதியில் மின் விளக்குகள் இல்லாதது பெரும் குறையாகவே உள்ளது. சுமார் ஒரு வருடத்திற்கு முன் மின் கம்பங்கள் இவ்வீதியில் நடப்பட்டு இதுவரைக்கும் மின் கம்பிகள் இணைக்கப்படவுமில்லை. மின் பல்புகள் பொருத்தப்படவுமில்லை.

இதனால் இவ்வீதியால் செல்லும் பாதசாரிகள் சொல்லொணாத் துன்பங்களுக்கு உள்ளாவதோடு இரவு நேரங்களில் வாய்க்காலில் வழுக்கி விழுந்து உயிர் ஆபத்துக்களையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது. பாதசாரிகளை இரவு நேரங்களில் வாகனங்கள் முட்டி மோதிவிட்டு செல்கின்றன.

எனவே இத்தோடு சம்பந்தப்பட்டவர்கள் கால்வாய் வீதியில் காலம் தாழ்த்தாது இவ் வீதியில் நடப்பட்டுள்ள மின் கம்பங்களுக்கு மின் இணைப்புக்களை ஏற்படுத்தி மின் பல்புகளையும் பொருத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

எம்.சி.கலீல்-கல்முனை-05.

# கௌரவிக்கப்பட்ட இரு கலைஞர்கள்!

(நிந்தவூர் நிருபர்)

கல்முனை இந்து இளைஞர் மன்றம் கல்முனைப் பிரதேசத்தைச் சேர்ந்த இரு கலைஞர்களுக்குப் பொன்னாடை போர்த்தி கௌரவித்துள்ளது.

மேற்படி இந்து இளைஞர் மன்றம் கல்முனை இராமகிருஷ்ண மகாவித்தியாலயத்தில் நடத்திய சித்திரைக் கலைவிழா-பாராட்டு விழாவின்போது கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

கல்முனைப் பிரதேசத்தில் பரதநாட்டியக் கலைத் துறையில் பெரும் பங்காற்றிவரும் திருமதி.வசந்தி சபாநாதன், ஓவியக் கலைஞர் திரு.எஸ்.ருத்ரா ஆகிய இருவருமே பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

விழாவில், மட்டக்களப்பு சுவாமி விபுலாநந்த இசை-நடனக் கல்லூரி அதிபர் திருமதி. இ.தட்சணாமூர்த்தி அவர்கள் திருமதி. வசந்தி சபாநாதனுக்கும்,

வைத்திய கலாநிதி டாக்டர். எம். முருகேசபிள்ளை அவர்கள், ஓவியர் திரு.எஸ்.ருத்ராவுக்கும் பொன்னாடை போர்த்தினார்கள்.

# போக்குவரத்து இல்லாத பாதை

புத்தளம் மாவட்டத்தின் உடப்பிலிருந்து கட்டைக்காடு, கொத்தாந்தீவு, சமீரகம, கடையா மோட்டை, மதுரங்குளியின் ஊடாக புத்தளம் செல்வதற்கு பொதுத் தேர்தல்-1994 ஆண்டு முன்பாக (C.T.B) இ.போ.சபையால் போக்குவரத்துக்கு விடப்பட்ட பஸ்ஸை அண்மையில் நிறுத்தி விட்டார்கள்.

இதனால் புத்தளம் செல்வதற்கு இப்பகுதி மக்கள், பாடசாலை மாணவ மாணவிகள், வியாபாரிகள் பயணம் செய்ய முடியாத நிலையில் உள்ளார்கள்.

ஆகவே, இப்பகுதியால் பஸ் செல்வதற்கு (C.T.B) இலங்கை போக்குவரத்து சபை கவனிக்கும்படி தினமுரசு மூலம் கேட்டுக்கொள்கிறேன். எம்.ஏ.ஏ.யுனூத்- கொத்தாந்தீவு.

# மும்மொழிகளிலும் பெயர் பலகை

## மத்திய மாகாண முதல்வர் உறுதி

(கண்டி நிருபர்)

மத்திய மாகாணத்தில் இயங்கும் மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்து பஸ்களில் மும்மொழிகளிலும் பெயர்ப் பலகை இடம்பெறும்.

மத்திய மாகாணசபை உறுப்பினர் திரு. மதியுகராஜா (இ.தொ.கா) முதலமைச்சருக்கு தெரிவித்த புகாரையடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

"பேருந்துகளில் தனிச் சிங்களத்தில் மட்டுமே ஊர்ப் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. இதனை மாற்றி தமிழிலும் எழுதப்படவேண்டும்" என்று மாகாணசபை உறுப்பினர் மதியூகராஜா வலியுறுத்தினார்.

அதனை ஏற்றுக்கொண்ட மத்திய மாகாணசபை முதலமைச்சர் மும்மொழிகளிலும் ஊர்ப் பெயர்களை எழுதுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாக உறுதியளித்துள்ளார்.

## பிறந்த நாள் வாழ்த்து

எந்நாளும் நலம் வாழ
வாழ்த்தும் உள்ளங்கள்

பாணந்துறை-தொட்டவத்தை இலக்கம் 107ஐச் சேர்ந்த திரு-திருமதி முன்தஸிர் தம்பதிகளின் செல்வப் புதல்வன்,

முஹம்மது முபீஸ்

மே-8ம் திகதி தனது வாப்பும்மா இல்லத்தில் இரண்டாவது பிறந்த நாளை கொண்டாடுகிறார்.

பிறந்த நாள்காணும் முஹமது முபீஸ் என்றும் வாழ்வில் இனியது காணட்டும். வளத்தோடு சிறப்போடும் வாழ்க பல்லாண்டு.

அன்புடன் வாழ்த்துவது

பரீனா- மஷ்ஹீர் தம்பதியினர். குவைட்.


## BRIGHT ன் கல்வித்திட்டம்

**90 DAYS SPOKEN ENGLISH & SINHALA**

3 ஒலிப்பதிவு நாடாவுடன் கூடிய தபால் மூலக்கல்வி
POSTAL TUITION WITH THREE AUDIO CASSETTES

ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க மூன்றே மாத காலத்துள் இலகுவாக எளிய நடையில் மாணவர்களின் விருப்புக்கு ஏற்றமுறையில் நவீன உளவியல் முறையில் ஆங்கில/சிங்கள பேச்சு மொழி கற்றுத்தரப்படும்.

எமது பாடத்தொகுப்புடன் ஒவ்வொரு மாதமும் ஒரு கசெட் ஆக 3 ஒலிப்பதிவு நாடாவும் இணைவதனால் உங்களை ஓர் ஆங்கில/சிங்கள சூழலிலேயே இருப்பவர்கள் போன்ற இயல்பை உருவாக்கி, உங்களின் வெட்கம், பயப்பாடு ஆகியவற்றை அகற்றி ஒளிமயமான எதிர்காலத்திற்கு வழி காட்டுகின்றது.

**METHOD OF BOOK KEEPING**
கடைக் கணக்கு எழுதும் முறை

கடைக்கணக்கு முதல் கம்பனி கணக்குவரை எவ்வாறு பேணப்பட வேண்டும் என்பதை மிக இலகுவான முறையில் ஆரம்பத்திலிருந்து கற்றுத் தரப்படும். இது ஆறுமாத கால டிப்ளோமா பயிற்சியாகும். இப் பயிற்சிநெறியை மேற்கொள்வது மூலம் Book-Keepers, Accounts Clerk, Audit Clerks, Bank Clerks, Cost Clerks ஆகிய தொழில்களை பெற்றுக்கொள்ளக் கூடிய தொழில் நுட்பகல்வி நெறியாகும். இப்பயிற்சியை திறம்பட முடிப்பவர்கட்கு நற்சான்றிதழும் வழங்கப்படும்.

**G.C.E. (O/L) முன்னோடி பயிற்சி - 1000 வினாவிடை**
ஆண்டு 5 புலமைப்பரிசில் முன்னோடிப்பயிற்சி – புதியபாடத்திட்டம்

பரீட்சை எடுக்கும் மாணவர்கட்கு சிறப்பு சித்தியை (D) பெற்றுக்கொடுக்கும் பாடப்பொழிப்பு, விளக்கம் ஒவ்வொரு பாடத்திற்கும் 1000 வினாவிடை கொண்ட பாடத்திட்டம். ஆண்டு 5 மாணவர்களுக்கு புதிய பாடத்திட்டத்திற்கேற்ற முறையில் அதிக புள்ளியை பெற்றுத்தரும் முன்னோடிப் பயிற்சித் திட்டம். பரீட்சையில் சித்திபெறும் அனைத்து மாணவர்களுக்கும் BRIGHT ன் வெகுமதி வழங்கப்படும்.

**இத்தோடு வெளிவந்துவிட்டன**
**ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான**

ஆரம்ப பொதுவிவேகம் ஆண்டு 4.5 துரிய பாடநூல் 75/=

ஆரம்ப பொதுவிவேகம் ஆண்டு 5 செயல்முறைப் பயிற்சி 60/=

800 மாதிரி வினா, 500 பொது அறிவு கேள்வி பதில், 250 விவேக கணக்குகள் 9 பாடங்களை உள்ளடக்கிய கேள்வி களுடன் கூடிய மாதிரி வினா நூல் 100/=

(புத்தகங்களை 20/- பெறுமதியான முத்திரை அனுப்பி V.P.P யில் பெற்றுக்கொள்ளலாம்)
மேலதிக விபரங்களுக்கு முத்திரையொட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்க.

**BRIGHT TRAINING CENTRE**
S - 27, FIRST FLOOR, P. O. BOX - 162,
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX,
COLOMBO - 11. T.P 434770





## அற்புத மலையாள மாந்திரீகம்

மலையாள மாந்திரீக ஆவி உச்சாட்டங்களைக் கொண்டு வியாபாரத்தில் செல்வ விருத்தியா? அன்னியோர் நட்பா? வாழ்வில் நிந்திப்பா? வறுமையினால் கிலேச மனப்பான்மையா? பொன் பொருள் கையில் தங்கவில்லையா? பொறாமையினால் எதிர் நீச்சலா? சரியே வராது என முடிவெடுத்த தீரா ஆஸ்மாவா? தீரா நோயா, அல்லது தீரா மர்மநோயா, மனநோயா, பேயா, பில்லியா சூனியமா?

எவையென அச்சொட்டாக தெரிந்து அதற்கேற்ப நிவர்த்தி பெற்றவர்கள் எத்தனை எத்தனையோ?

இனி இல்லற வாழ்வு சிறப்பின்மையா?

கணவன் மனைவி பிணக்கா? காதல் தோல்வியா? காதலில் பிரச்சனையா? சவால் விடும் காதலா? விரும்பியவரை விரும்பியவாறு திருமணம் செய்விக்க வேண்டுமா? திருமணங்கள் கைகூடுவதில்லையா? அல்லது திருமணம் தடைக்கான திட்டவட்டமாக பரிகாரம் தேவையா? இனி கை கால் அசதியா? கையில் பணம் தங்கவில்லையா? கல்வி ஞான கவசமா, மகாலக்ஷமி வாசம் செய்வதற்கான வலம்புரி சங்கு, நவரத்தினம், இத்துடன் தங்கம் கலந்த பெரிய அளவிலான மகாலக்ஷமி இயந்திரம் தேவையா? ஞான திருஸ்டியில் ஜனன ஜன்ம கேள்வி பதில் தேவையா? காண்ட சாஸ்திர அடிப்படையில் ஆயுள் பூராகவும் புத்தக வடிவில் ஜாதகம் கணித்து அனுப்ப உள்நாட்டவரோ வெளிநாட்டவரோ ரூபா 700.00 அனுப்பினால் போதுமானது.

எம்மாதமும் என்னை 20 முதல் மாதக்கடைசிவரை கொழும்பு இல்லத்தில் சந்திக்கலாம். வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

தேவைகளுக்கு—
மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே.சாமி (J.D.G.A.N.)
P.K.SAAMY ASSOCIATE (PVT) LTD
162, கொட்டாஞ்சேனைவீதி- கொழும்பு 13
T.P. 342463, 342464
FAX 00941342463 EXT 25

தலைமையகம்
மளையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே. சாமி
(J.D.G.A.N.)
P.K. SAAMY ASSOCIATE (PVT)LTD
இல 31,32,33
தினச்சந்தை கூட்டிடம்
நு வெரலியா.
T.P. 052 2508 3093,
FAX 0094523093 EXT 28



## நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!

தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்:

ஒரு வருடத்திற்கு ரூபா 505/= (52 வாரங்கள்)
ஆறு மாதங்கள் ரூபா 258/= (26 வாரங்கள்)
மூன்று மாதங்கள் ரூபா 132/= (13 வாரங்கள்)

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுயமுகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

தினமுரசு வாரமலர் THINAMURASU VAARAMALAR
த.பெ.இல:1772 P.O.BOX: 1772
கொழும்பு COLOMBO

என்ற முகவரிக்கு கடிதங்களை அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.



## Ruka's School of Beauty Centre

**& Hair Dressing**

***DIPLOMA***

★ சிகையலங்காரம், அழகு சிகிச்சை, அழகுக்கலைக்கான பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
★ 3 மாத காலப்பயிற்சி.
★ ஆரம்பம் 07. மே,1995.
★ பூச்செய்கை (Bouquets) வகுப்புகள் ஆரம்பம் 01. மே,1995.

மேலதிக விபரங்கட்கு:-

Ruka's Beauty Centre.
9A. Macleod Road, Colombo-04.
(பம்பலப்பிட்டி தொடர்மாடிக்கு முன்னால்)
T.P : 583574, 501556.

# மூண்டுள்ள போரின் முக்கிய இலக்குகள்

முல்லைத்தீவில் புலிகளின் ஆயுதக் கப்பல்" எக்ஸ்ரே ரிப்போட்டில் நான் இந்தத் தகவலை எழுதியது நினைவிருக் கிறதா? பெப்ரவரி 5-11,1995 – 88 வது முரசில் அத்தகவலை எழுதி யிருந்தேன்.

'சமாதானப் பேச்சு அட்டகாசமாகநடந்து கொண்டிருக்கும் போது புலிகள் ஏன் ஆயுதக்கப்பலை தருவிக்கிறார்கள்; இது சமாதானப் பேச்சில், சந்தேகம் கிளப்பும் நாரதரின் 'டூப்' என்று யாரோ சிலர் நினைத் திருக்கலாம்.

ஆனால் மூன்றாம் கட்ட ஈழப்போர் மூண்டு 10 நாட்களுக்குள் புலிகள் புதிய ஆயுதங்களை தருவித்தமைக்கான சான்று கிடைத்திருக்கிறது.

இரண்டு விமானங்கள் வானில் வெடித்து, புலிகளிடம் விமான எதிர்ப்பு ஆயுதங்கள் வந்து சேர்ந்துள்ள செய்தியை தெரிவித்துள்ளன.

முன்னரே புலிகளிடம் விமான எதிர்ப்பு ஆயுதங்கள் இருந்திருந்தால் குண்டுவீச்சு விமானங்களுக்கு நிச்சயம் குறிவைத்திருப்பார்கள்.

ஆனையிறவு முகாம் மற்றும் பூநகரி முகாம் மீதான தாக்குதல்களில் விமானத் தாக்குதல்கள் காரணமாகவே பல நூற்றுக் கணக்கான புலிகள் பலியானார்கள்.

விமான எதிர்ப்பு ஏவுகணைகள் அப்போது புலிகளிடம் இருந்திருந்தால் நிலமை புலிகளுக்கு சாதகமாகக் கூட மாறியிருக்கலாம்.

ஆக, கடந்த ஆறுமாத காலத்திற் குள்தான் விமான எதிர்ப்பு ஆயுதங்கள் புலிகள் வசம் வந்து சேர்ந்துள்ளன என்பதில் ஐயமில்லை.

# புதிய குழப்பம் – துப்பாக்கியா? – ஏவுகணையா?

## நாரதர்

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

காமினி திசநாயக்கா கொழும்பில் கொல்லப்பட்ட மறுநாள்-24.09.94 அன்று முல்லைத்தீவு கடலுக்கு வந்து சேர்ந்தது புலிகளது ஆயுதக்கப்பல்.

19.09.94 அன்று சாகரவர்த்தனா கப்பல் கடற்கரும்புலிகளால் தாக்கப்பட்டு கடற்படை ரோந்து கட்டுப்படுத்தப்பட்டது.

தாக்குதல் மூலம் கடற்பாதையைச் சுத்தம் செய்துவிட்டு, அதற்கும் மேலாக படைகளது கவனத்தை தலைநகர் நோக்கி திருப்பிவிட்டு ஆயுதக்கப்பலை தருவித் தார்கள் புலிகள்.

வந்த கப்பலில் விமான எதிர்ப்பு ஆயுதங்களும் பத்திரமாக வந்து சேர்ந்திருக்கின்றன.

புலிகளிடம் தற்போதுள்ள விமான எதிர்ப்பு ஏவுகணைகள் 'சாம் 7' என்று அழைக்கப்படுபவை. அதில் பல ரகங்கள் இருக்கின்றன.

விமானத்தில் இருந்து வெளிவரும் வெப்பத்தை மோப்பம் பிடித்துச் சென்று தாக்கக்கூடியவை 'ஹீற் சீக்கிங்' என்று அழைக்கப்படுகின்றன.

சத்தத்தை குறிவைத்தும், உலோகத்தை மோப்பம்பிடித்தும் துரத்திச் செல்லும் ஏவுகணை ரகங்களும் இருக்கின்றன. புலிகளிடம் இருப்பது வெப்பத்தை மோப்பம் பிடிக்கும் ரகத்தவை என்று நம்பப்படுகின்றது.

இந்த ஏவுகணைகளைப் புலிகள் சோவியத் யூனியனாக இருந்து இன்று உடைந்து தனித் துண்டாக இருக்கும் நாடொன்றில் இருந்தே பணம் கொடுத்து வாங்கியிருக்கலாம் என்று ஒரு தகவல் கூறுகிறது.

சோவியத் தயாரிப்பு ஏவுகணைகள் தான் (சாம் 7 ) முன்னர் பிரபலமாக இருந்தன. வியட்நாம் போரின் வெற்றிக்கு அவை உதவின. அமெரிக்க போர் விமானங்கள் பலவற்றை அவை உருத் தெரியாமல் செய்தன.

பிரிட்டனின் ஏவுகணைக்கு புளோ பைப் என்றும், அமெரிக்க ஏவுகணைக்கு ஸ்ரிங்கர் என்றும் பெயர். சோவியத் ஏவுகணையின் பெயர் 'சாம்7'

சோவியத் யூனியன் உடைந்தபின் துண்டாகியுள்ள நாடுகள் தமது நிதித் தேவைகளுக்கு ஆயுதங்களை விற்பனை செய்துவருகின்றன.

புலிகள் பணம் கொடுத்துத்தான் ஏவுகணைகளைப் பெற்றுக் கொண்டார்கள். புலிகளது ஆயுதப் பலத்தில் இது ஒரு திருப்பம் தான்.

இப்போது புலிகளிடம் விமான எதிர்ப்பு ஏவுகணை வந்துவிட்டது.

இனி வானத்திலும் அபாயம்தான்! அரச படைகள் நினைத்துப் பார்க்காத அதிர்ச்சிதான் இது!

யாழ்குடாநாட்டில் புலிகளை முற்றுகையிட பிரதானமான இரு வழிகள் கடலும், ஆகாயமும்.

புலிகள் இராணுவ முகாம்களை முற்றுகையிட்டால் அதனை உடைக்கவும் படைகளுக்கு உள்ள வழிகளும் அதுதான்.

வடக்குப் போரில் தரைவழியை மட்டுமே நம்பியிருந்தால் படைகளுக்கு வெற்றி என்பது எட்டாக்கனிதான்.

தரைப்படை மற்றும் தரைவழியாக படைகள் முன்னேறுவதை தடுக்கக்கூடிய பலம் மட்டுமே புலிகளிடம் இருந்தால் பயனில்லை. பாரிய படைமுன்னேற்றம் புலிகளை பின்வாங்கச் செய்துவிடும்.

எனவே போரில் வெற்றி பெற விரும்பும் இரு தரப்புக்கும் போரின் வெற்றி தோல் வியைத் தீர்மானிக்கும் கடல், வான் வழிகள் மிகப் பிரதானமானவை.

புலிகளைவிட படைகளுக்கு வான்–கடல் வழிகள் மற்றொரு வகையிலும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக உள்ளன.

வடக்கில் குறிப்பாக யாழ் குடாநாட்டில் உள்ள முகாம்களுக்கு உணவு, மருந்து மற்றும் ஆயுததளவாடங்களை கொண்டு செல்லவும், காயப்பட்ட வீரர்களை எடுத்து வரவும் கடல் வழி அல்லது ஆகாய வழி தவிர வேறு மார்க்கம் இல்லை.

துப்பாக்கிகளால்தான் தாக்கி அழிக்க வேண்டும் என்றில்லை. உணவு, மருந்து விநியோகங்களை குறிப்பிட்ட காலம் தடுத்து வைத்தாலே போதும் எதிர்க்கும் ஆற்றலை அழித்துவிடலாம்.

இந்த உத்தி படைகளைவிட புலிகளுக்கே சாதகம். புலிகளுக்கு கிடைக்கும் உணவு-மருந்து வகைகளை படையினரின் முற்றுகை தடுக்க முடியாது.

புலிகள் பின்வாங்கிச் சென்றாலும் மக்களிடம் இருந்து உணவுத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வர்.

பொருளாதார தடை என்பது கூட புலிகளது எதிர்க்கும் ஆற்றலை அழிக்கும் நோக்கத்தோடு போடப்பட்டதுதான்.

அதனால் புலிகள் பாதிக்கப்படவில்லை. பொதுமக்களின் வயிறுகள் மட்டுமே பாதிக்கப்பட்டது.

பொருளாதார தடை புலிகளுக்கு ஒருவகையில் சாதகமே. வரி விதிப்புக்கள், சில பொருட்களை தாமே வாங்கி சந்தைப்படுத்தல் மூலம் புலிகளது நிதிப் பலத்தில் உயர்வுதான் ஏற்பட்டது.

அரசு போடும் ஒவ்வொரு தடையையும் தமக்கு சாதகமாகப் பயன்படுத்துவதில் புலிகள் வெற்றி பெற்று வருகிறார்கள்.

படையினரது நிலை நேர்மாறானது. வடக்கில் உள்ள முகாம்கள் முற்றுகை யிடப்பட்டால் வானத்தையும், கடலையும் அவர்கள் பார்த்தபடி உதவி வரும் என்று காத்திருக்க வேண்டும்.

தாக்கப்படும் அபாயம் இருப்பதால் விமானங்கள் சுலபமாக சென்று இறங்க முடியாது.

விமான எதிர்ப்பு ஏவுகணைகள் இருப்பதால் குண்டுவீச்சுக்கு பயன்படுத்தும் விமானங்கள் தப்பமுடியாது என்று அர்த்தமில்லை.

சண்டை விமானங்களால் வேகமாக சென்றோ, உயரமாகப் பறந்தோ ஏவுகணை களிடமிருந்து தப்பிக்க முடியும். சில சமயம் குறியில் சிக்கவும் நேரலாம்.

ஏவுகணைகளை திசை திருப்பக்கூடிய மற்றும் அழித்துவிடக்கூடிய வசதியுள்ள நவீன போர் விமானங்களும் இருக்கின்றன.

அவ்வாறான போர் விமானங்களை அரசு தனது விமானப்படைக்கு இனி அதிகளவில் வாங்க முற்படலாம்.

இதே நேரத்தில் அரசுக்கும், படைத் தரப்புக்கும் ஒரு புதுக்குழப்பம் வந்து சேர்ந்திருக்கிறது.

புலிகளிடம் இருப்பது விமான எதிர்ப்பு ஏவுகணையா? அல்லது நவீனரக தன்னியக்கத் துப்பாக்கியா? என்பதுதான் குழப்பம்.

புலிகள் 29.04.95 அன்று யாழ்ப்பாணத்தில் விமானத் தாக்குதலுக்கு உரிமை கோரியிருந்தார்கள்.



சோவியத் யூனியன் தயாரிப்பான 'சாம்-7'

தன்னியக்க நவீன ரக விமான எதிர்ப்பு துப்பாக்கி மூலமாகவே தாக்குதல் நடத்தியதாகப் புலிகள் கூறியிருக்கிறார்கள்.

இதனைத் கேட்டுவிட்டுத்தான் படை அதிகாரிகள் குழம்பிப் போனார்கள்.

விமான எதிர்ப்பு துப்பாக்கி என்றால் அதனுள் இருந்து தோட்டாதான் பறந்துவரும்.

தோட்டாவிடமிருந்து தப்புவது சுலபம்.

அதுதவிர மிக முக்கியமாக துப்பாக் கியின் குறி சரியாக அமைந்தால்தான் தோட்டா விமானத்தின் உடலைத் தொடும்.

ஏவுகணை என்றால் ஏவிவிட்டவுடன் விமானத்தை மோப்பம் பிடித்து தேடித் தாக்கும்.

புலிகளிடம் என்ன இருக்கிறது என்று தெரிந்தால்தான் அதற்கேற்ப விமானப் படையின் புதிய திட்டங்களை வகுக்க வசதியாக இருக்கும்.

இப்போது ஒரு கேள்வி, புலிகளிடம் ஏவுகணை இருந்தால் அதனை ஏன் அவர்கள் மறைக்க வேண்டும்?

காரணம் இல்லாமல் இல்லை. புலிகளிடம் ஏவுகணை இருப்பதாகத் தெரிந்தால் அரச படையினரும் அதனை எதிர்கொள்வதற்கு ஏற்ற உத்திகளை வகுப்பர்.

குறிப்பாக், விமானப்படை மேலும் நவீனமாகும். பலம் அதிகரிக்கப்படும். முகாம்கள், விமானத்தளம் என்பவை விஸ் தரிக்கப்பட்டு விமானம் பாதுகாப்பாக இறங்கும் வசதிகள் உருவாக்கப்படும்.

எந்த யுத்தத்திலும் தனது எதிரிகளை உஷார்ப்படுத்தவோ, பலத்தை அதிகரிக்கச் செய்யவோ மறு தரப்பு விரும்பாது.

பாகிஸ்தானிடம் அணுக்குண்டு இருந்தாலும் அது இந்தியாவுக்கு மறைக் கத்தான் செய்யும். இந்தியாவும் அவ் வாறுதான் செய்யும்.

புலிகளும் இராணுவ இரகசியங்களைக் காக்கும் பொருட்டும், படைத்தரப்பை உஷார் அடையாமல் சற்று அலட்சிய நிலையில் வைத்திருக்கவும் ஏவுகணை இரகசியங்களை மறைத்திருக்கலாம்.

இரண்டாவது விமானம் தாக்கப்படும் போது, விமானத்தை நோக்கி ஏவுகணை வருவதாக விமானி அலறியிருக்கிறார்.

துப்பாக்கியின் தோட்டா என்றால் விமானியின் கண்ணுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

ஆக, புலிகளிடம் இருப்பது விமான எதிர்ப்பு ஏவுகணைதான் என்று நூறு வீதம் நம்பித்தான் தீரவேண்டியுள்ளது.

"புலிகளிடம் தரைப்படை, கடற்படை, எல்லாம் இருக்கிறது விமானப்படை மட்டும்தான் இல்லை."

இப்படிக் கூறியவர் வேறு யாருமல்ல, முன்னாள் விமானப்படைத் தளபதி ஹரி குணதிலக்கா தான் சில மாதங்களுக்கு முன்னர் அப்படிக் கூறியிருந்தார்.

இதில் ஒரு சோகம் என்னவென்றால் விமானத்தாக்குதலில் சமீபத்தில் பலியான வர்களில் ஹரி குணத்திலக்காவின் மகனும் ஒருவர்.

புலிகளிடம் விமானப் படை இல்லாவிட்டாலும் விமானப்படையை அச்சுறுத்திக் கட்டுப்படுத்தும் ஆயுதபலம் தற்போது இருக்கிறது.

'மூன்றாம் கட்ட ஈழப்போரில்' ஏற்பட்டுள்ள திருப்பம் இது.

இரண்டாம் கட்ட ஈழப்போரில் கடலில் தாம் நினைத்ததை செய்யும் அளவுக்கு கடற்கரும்புலிகளை பிரபா உருவாக்கினார்.

கடற்படையினரை அச்சுறுத்தும் கடற்புலிகளது பலமான ஆயுதம் கடற்கரும்புலிகள்.

கடற்கரும்புலிகளிலும் தற்போது புதிய பிரிவு ஒன்று உருவாகியுள்ளது.

நீரடி மீட்புப்பிரிவு என்பது அதன் பெயர்.

படகுகளில் வெடி மருந்துகளை நிரப்பிக் கொண்டுவரும் கரும்புலிகளை கடற்படை விழிப்பாய் இருந்தால் கண்டுகொள்ள முடியும். தமது கப்பலை நெருங்குவதற்கு இடையில் கரும்புலிப் படகுகள் மீது தாக்குதல் நடத்த முடியும்.

ஆனால் நீரடி மீட்புப் பிரிவு கடற் கரும்புலிகள் வருவது கண்ணுக்குத் தெரியாது. நீரில் மூழ்கி வந்து கடற்படை கப்பல்களை தகர்த்துவிடமுடியும்.

கடற்படைக்கு, சவாலுக்கு மேல் சவால். நீலக்கடல், கடற்படைக்கு இனி நிம்மதியான இடமல்ல என்பது மட்டும் உறுதி.

ஆயுதமாக மனிதக் குண்டுகள் வரும்போது மாற்று நடவடிக்கை கண்டுபிடிப்பது கடற்படைக்கு கஷ்டமான காரியம்தான்.

மூன்றாம் கட்ட ஈழப்போரின் முக்கிய இலக்குகளாக வடக்கில் உள்ள பாரிய இராணுவ முகாம்கள் அமைந்துள்ளன.

மூன்றாம் கட்ட ஈழப்போரில் கிழக்கிலும் உக்கிரமான தாக்குதல்களை படையினர் எதிர்கொள்ள வேண்டி ஏற்படும்.

கிழக்கு தமது கட்டுப்பாட்டில் இருப்பதாக படைத்தரப்பு அடிக்கடி கூறிவருவதால் அங்கும் படையினரை தொல்லைப்படுத்த புலிகள் இம்முறை அதிக தீவிரம் காட்டுவர்.

வடக்கில் புலிகளை நோக்கி படையினர் முன்னேறிச் செல்வதை தடுக்க புலிகள் தாம் முந்திக் கொள்ளலாம்.

கடல், வான் வழிகளில் புலிகளது கொடி பறக்கத் தொடங்கினால் வடக்கில் உள்ள படை முகாம்களில் உள்ளவர்கள் தாக்குதலைவிட தற்காப்பில்தான் கவனம் செலுத்த வேண்டி ஏற்படும்.

தற்காப்பு என்பது முன்னேறித் தாக்குதல் இல்லாமல் நீண்டகால நோக்கில் வெற்றிகரமாக அமையாது.


யாழ் கோட்டை முகாமில் தற்காப்பு யுத்தத்தில் மட்டுமே ஈடுபட்ட படையினர் இறுதியில் பின்வாங்க வேண்டித்தான் ஏற்பட்டது.

வடக்கை மீட்பது எப்படி என்று படைகள் சிந்திப்பதெல்லாம் தற்போது சாத்தியமில்லை.

வடக்கில் உள்ள தமது முகாம்களை பாதுகாப்பது எப்படி என்பதற்கு படை உயர்மட்டம் முதலில் விடை கண்டாக வேண்டும்.

வடக்கில் தற்காப்பு நிலைக்குள் இராணுவத்தை முடக்குவது. கிழக்கில் படையினரை இழப்புக்குள்ளாக்கி இராணுவ சம பல நிலையை அங்கு உருவாக்குவது என்பவைதான் 'மூன்றாம் கட்ட ஈழப் போரில்' புலிகளது ஆரம்ப உத்திகளாக, இலக்குகளாக இருக்கும்.

## அதிரடி அய்யாத்துரை



விழுந்தது இரண்டே இரண்டு வான்பறவை. வதந்திகள் விழுத்தியவை அதை விட அதிகம். தினம் நூறு வதந்தி தலைநகரிலை பரவிக் கொண்டுதான் இருக்குது. அந்த முகாம் அடிச்சாச்சோ, இந்த முகாம் அடிச்சாச்சோ எண்டு போன் சுற்றியே நிருபர்களின் விரல்கள் தேய்ஞ்ச போச்சாம். ஆனால் ஒரு விசயம் கிளியர், ரெண்டு எழுத்தாரால் அடிக்க முடியும் எண்ட நம்பிக்கைதான் வதந்திகளின் அடிப்படை எண்டதை மறக்கக் கூடாது. மேலும் ஒரு சங்கதி, வதந்தியும் ஒரு ஏவுகணை மாதிரித்தான்.

கொழும்பில் மறைந்த விநோதமானவர் மேலிட ஆலோசகர் எண்டு வெளியான செய்தி மேலிட மட்டத்திலை பலத்த ஆச்சரியமாம். யார் அந்தச் செய்தியை வெளியிட்டது எண்டு விசாரிக்கினமாம். மேலிடப் பக்கமே அவரை அதிகமாய் அண்ட விடுறேல்லை. வருத்தம் தெரிவிப்பது நாகரீகம். இறந்தவரைப் புகழ, இல்லாத பதவிப் பெயர் சொல்லி வதந்தி பரப்புறது அநாகரீகம்.

வெளிநாட்டு வானொலி சேவையிலை ஆனந்தமான சோதரி ரெண்டு எழுத்துத் தலைவரின் பேட்டியை ஒலிபரப்பினவர். ஏற்கனவே வெளியான அறிக்கையைத்தான் தலைவர் திருப்பிச் சொல்லியிருந்தவர். கேள்வியும் அவர்களே பதில்களும் அவர்களே மாதிரிப்பட்டது. சோதரி அங்கை போனா இடக்கு முடக்கா வாயே திறக்கமாட்டா எண்டு தெரியும்தானே. சோதரிக்கு ஒரு சின்ன யோசனை இந்தியத்தமிழ், இலங்கைத்தமிழ் இரண்டில் ஏதாவது ஒண்டிலை பேசுறது பெட்டர். மசாலாப்பேச்சு சகிக்கல்லை.

வானத்திலையும் சத்தம் காட்டின கையோடை வெளிநாடுகளிலை ரெண்டு எழுத்தார் நிதி திரட்டலிலை குதிச்சிருக்கினமாம். திருப்பி அனுப்பப்படும் கட்டத்திலை இருந்த பலர் சந்தோசமான முகத்தோடை அள்ளிக் கொடுக்கிறதாயும் கேள்வி. எல்லாம் விசயத்தோடைதான் இலங்கைத் தமிழரா கொக்கா?

முதல் அடியிலேயே கண்ணைத் திறந்து, மூளையைக் குடைஞ்சு யோசிச்சிருந்தா இரண்டாவது அடி விழாமல் தப்பியிருக்கலாமாம். கடல் பக்கமாய் போய் இறங்கியிருந்தால் இரண்டாவது பறவை குறியில் பட்டிருக்காதாம்.

கிழக்கிலை சிறுபடையினர் நடத்திய தாக்குதல்கள், கைதுகள் தொடர்பாக கூட்டான கட்சி வெகுஜனப் பிரதிநிதிகளின் வேகம் காணாது எண்டு சனம் கதைக்குது. விழுத்தத் தயங்கோம் எண்டு பேசுறது சும்மா ஒரு 'கிக்' வரத்தானே. அதனை நம்பி பெரிசா எதிர் பார்க்கிற சனத்தை நினைச்சுச் சிரிக்கவோ, அழவோ? மிஞ்சிப்போனா வெகுஜன சபையிலை பேசுவினம். யார் காதிலை ஏறப்போகுதோ?

தமிழ் நாட்டு செல்வியும் ஒரு விமானம் வாங்கினவரெல்லோ. பாதுகாப்பாக பயணம் செய்ய விமானமே ஒரே வாகனம் எண்டுதான் பல கோடி கொடுத்து செல்வி வாங்கினவர். இப்ப கொஞ்சம் யோசிப்பார் எண்டு நினைக்கிறன். பிளேனை விட கார்தான் 'பெட்டர்' எண்டு நினைச்சாலும ஆச்சரியமில்லைத் தானே. ஏனெண்டா நிலமை அப்படி.

இரண்டாம் உலகப் போர் காலத்திலை ஜப்பான்காரன் யாழ்ப்பாணத்திலை குண்டு போட வந்திட்டு பயந்து ஓடிட்டானாம். ஏன் தெரியுமோ? யாழ்ப்பாணத்து கிணற்று துலாக்கள் இருக்கல்லோ அவை ஏவுகணைகள் எழும்பிறமாதிரித் தெரிஞ்சதாம். இது அந்தக் கால பகிடி பாருங்கோ.

மலை உள்ள மண்ணில் 'சந்திர'மான தலைவரின் முன்னணி நடத்திய மேதினம் தொண்டுத்தலைவர் வட்டாரத்தை யோசிக்க வைத்திருக்கிறதாம். சந்திரமானவரும் பாட்டுக்காரர்களைக் கொண்டு வந்து தனக்கும் கூட்டம் சேர்க்கும் வித்தை தெரியும் எண்டு காட்டிப் போட்டார்.

ரெண்டு எழுத்தாரைப் பிடிக்கிறது எண்டு சாதாரண ஆட்களையும் ரெண்டு எழுத்தாரின் ஆதரவாளர்களாக மாற்றி விடுகிற வேலைதான் நடக்குது. உது அவலை நினைச்சு உரலை இடிக்கிற கதைதான் எண்டு விபரமறிஞ்ச சிலர் முணுமுணுக்கினமாம்.

சமீபத்தில் படிச்ச புதுக்கவிதை. தமிழக சஞ்சிகையில் வெளிவந்தது. நம்நாட்டிற்கும் பொருந்தும். குறிப்பாக யாழ்ப்பாணத்திற்கு.

**இக்காலம்**

ஆபிரகாம் லிங்கன்
தெரு விளக்கில் படித்து
முன்னேறினாராம்
நான் படிக்க
ஒரு விளக்குக் கூட
எரியவேயில்லை

பி. சி. ரகு

25

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# ஆயுத உதவியும் பிரபாவின் அவதானமும்

## ஆயுத உதவி

இந்தியா தமிழ் போராளிகளுக்கு பயிற்சி கொடுத்த பின்னர் ஆயுதங்கள் வழங்க முன்வந்தது.

இந்தியா ஆயுதம் தரப்போகும் செய்தி அறிந்து இயக்கங்களின் தலைவர்களுக்கும் போராளிகளுக்கும் மகிழ்ச்சி.

புலிகளுக்கும் மகிழ்ச்சிதான். மகிழ்ச்சியடையாதவர் பிரபாகரன் ஒருவர் மட்டும்தான்.

இந்தியா ஆயுதம் தரப்போகிறது என்ற மகிழ்ச்சியில் தமது தலைவரை சந்திக்கச் சென்ற கிட்டு உட்பட முக்கிய உறுப்பினர்களிடம் பிரபா சொன்னது இது.

**"நாங்கள் உடனடியாக வெளியில் இருந்து ஆயுதம் வாங்க வேண்டும்".**

கேட்டவர்களுக்கு அதிர்ச்சி. இந்தியா ஆயுதம் தரப்போகிறது. பின்னர் ஏன் வெளியே ஆயுதம் வாங்க வேண்டும்?

அவர்களின் மனதில் ஓடிய எண்ணங்களைப் புரிந்துகொண்ட பிரபாகரன் சொன்னது இது.

**இந்தியா ஆயுதம் தருகிறது என்றால் எம்மை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் விதமாகவே ஆயுதம் தரும். நாம் எமது சொந்தக் காலில் நிற்க வேண்டுமானால் சொந்தமாகவும் ஆயுதங்கள் தேடிக்கொள்ள வேண்டும்".**

சொன்னது மட்டுமல்ல திட்டமிட்டு அதற்கான வாய்ப்புக்களையும் உருவாக்கினார் பிரபாகரன்.

புலிகள் தவிர புளொட் அமைப்பினரும் வெளியே ஆயுதம் வாங்க முற்பட்டனர்.

## ஆயுதப் பறிப்பு

1984இல் புளொட் அமைப்பினரின் ஆயுதங்கள் கப்பல் ஒன்றில் சென்னைத் துறைமுகத்திற்கு வந்தன.

# புலிகளை வெட்டிவிட நினைத்த பாலகுமார்




கொல்லப்பட்ட விமானப்படையினரது அடையாளஅட்டைகள்

இந்திய சுங்கப் பகுதியினால் அந்த ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

பறிமுதல் செய்யப்பட்ட ஆயுதங்களது பெறுமதி 4 கோடி என்று புளொட் அப்போது கூறியிருந்தது.

தனது கையை விட்டு போராளிகள் அமைப்புக்கள் செல்வதை இந்தியா விரும்பவில்லை.

சொந்தமாக ஆயுதங்கள் பெறும் போராளி அமைப்பின் முயற்சிகளை இந்தியா தடுத்தமைக்கு அதுதான் காரணம்.

புளொட் அமைப்புக்கும் இந்தியா ஆயுதம் வழங்கியது.

அதே சமயம் புளொட் தானாகவே சொந்தமாக வாங்கிவந்த ஆயுதங்களை அதே இந்தியா பறித்து வைத்துக்கொண்டது.

இந்திய சுங்கப் பகுதியினரின் கண்களில் மண்ணைத்தூவி விட்டு புலிகள் வெளி நாடுகளில் உள்ள ஆயுத வியாபாரிகளிடமிருந்து ஆயுதங்களைப் பெற்றுக் கொண்டனர்.

ரெலோவும் வெளியில் இருந்து ஆயுதங்களை வாங்க முயற்சி எடுத்த போதும் குறிப்பிடத்தக்க அளவில் சாத்தியமாக வில்லை.

ஈ.பி.ஆர்.எல்.எஃப், ஈரோஸ் தலைமைகளுக்கு வெளியில் இருந்து ஆயுதம் வாங்குவது ஒரு நல்ல கனவாக மட்டுமே இருந்தது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப் ஆட்சேர்ப்பில் காட்டிய தீவிரத்தை ஆயுத சேகரிப்பில் காட்டவில்லை.

ஈரோஸ் ஆட்சேர்ப்பில் சில வரையறைகளோடு நின்று கொண்டது.

பின்வந்த காலங்களில் ஈரோஸின் பெயர் கெட்டுவிடாமல் இருந்தமைக்கு அதுவும் ஒரு காரணம். உள்ளவற்றில் பரவாயில்லை என்று அதனை மக்கள் கருதியமை 1988 பொதுத் தேர்தலில் வடக்கு - கிழக்கில் ஈரோஸ் நிறுத்திய சுயேட்சைக் குழுக்கள் வெற்றிபெறவும் ஒரு காரணமாக அமைந்தது..

## முகாம் தகர்ப்பு

1984ல் திருக்கோணமலையில் கிண்ணியா வங்கி ஈ.பி.ஆர்.எல்.எஃப் அமைப்பால் கொள்ளையிடப்பட்டது. சுபத்திரன் தலைமையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

1984ல் பெப்ரவரியில் யாழ்ப்பாணத்தில் குருநகர் இராணுவ முகாம் கட்டிடங்கள் புலிகளால் குண்டுவைத்து தகர்க்கப்பட்டன. குருநகரில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் அந்த முகாமை விட்டு வெளியேறினார்கள்.

மீண்டும் இராணுவம் அங்கு வந்து முகாம் அமைப்பதை தடுப்பதற்காகவே புலிகள் கட்டிடங்களை குண்டு வைத்துத் தகர்த்தனர்.

## சமூக விரோதிகள் ஒழிப்பு

வடக்கில் ஆயுதப் போராட்டம் தீவிரமடைந்த நிலையில் அரசின் சட்டம் ஒழுங்கு நிர்வாக வடிவங்களும் சீகுலைந்தன.

திருடர்களும், குற்றவாளிகளும், தீய சக்திகளும் இந்த நிலையைத் தமக்கு சாதகமாக்கிக் கொள்ள முற்பட்டனர். இயக்கங்களின் பெயர்களையும் பயன்படுத்திக் கொண்டனர்.

அப்போதெல்லாம் மக்களுக்கு இயக்கங்களின் பெயர்கள்தான் அறிமுகம்.

இயக்கங்களில் இருந்த உறுப்பினர்களை மக்களுக்கு தெரியாது. இரகசியமாக இயங்கிய கால கட்டம் அது.

"நானும் இயக்கம்தான்" என்று 'சட்டைக் கொலரைத்' தூக்கி விட்டபடி திரிந்தவர்களை அப்போதெல்லாம் காணவே முடியாது.

பல அம்மாக்களுக்குக் கூட தமது பிள்ளைகள் இயக்கத்தில் இருந்தது தெரியாத காலம் அது.

ஆகவே இயக்கப் பெயர்களைப் பயன்படுத்தி சமூக விரோதிகள் சில இடங்களில் தமது கைவரிசைகளைக் காட்டினார்கள்.

சமூக விரோதிகள் என்று இனம் காணப்பட்ட சிலரைப் புலிகள் சுட்டுக் கொன்றனர்.

## வரவேற்பு

சமூக விரோதிகள் அழித்தொழிப்பு தொடர்பாக 1984 மார்ச் மாதத்தில் புலிகளால் ஒரு பிரசுரம் வெளியிடப்பட்டது.

சமூக விரோதிகள் தம்மால் அழித்தொழிக்கப்படுவார்கள் என்று புலிகள் அப்பிரசுரத்தில் தெரிவித்திருந்தனர்.

இந்த நடவடிக்கைக்கு மக்களிடம் வரவேற்புக் கிடைத்தது. இயக்கங்கள் குறித்தும் மக்களிடையே இருந்த நல் அபிப்பிராயம் மேலும் வளர்ந்தது.

ஆயுதப் போராட்டம் காரணமாகவே வடக்கில் பொலிஸ் நிர்வாகம் செயல் இழந்தது.

அதனைப் பயன்படுத்தி வளர முற்பட்ட சமூக விரோதிகளை களைய வேண்டிய பொறுப்பு ஆயுதம் ஏந்திய இயக்கங்களுக்கு இருந்தது.

தத்துவம், மனிதாபிமானம் என்ற பெயரில் சில இயக்கங்கள் அதனைச் செய்யத் தவறிவிட்டன.

மக்கள் விரோதிகளிடம் மனிதாபிமானம் காட்டுவதென்றால் ஆயுதம் ஏந்தியதற்கே அர்த்தமில்லாமல் போய்விடும்.

இதனை உணராதபோதுதான் சில இயக்கங்களுக்குள் கூட மக்கள் விரோத சக்திகள் புகலிடம் பெற்றுக்கொண்டன. அந்த இயக்கங்கள் மதிப்பிழக்கும் சூழலும் ஏற்பட்டது.

ரெலோவின் வீழ்ச்சிக்கு அதுவும் ஒரு முக்கிய காரணமாக இருந்தது.

முழங்காலுக்கு மேலே உயர்த்திக் கட்டிய சாரமும், சடைமுடியும், கழுத்தில் தொங்கும் கறுப்பு நூலும், காதில் கடுக்கனும் ரெலோவின் அடையாளமாக மாறியது.

போர்க்குணம் வேறு. சண்டித்தனம் வேறு. சண்டியர்கள் மக்களை மதிப்பதில்லை. மக்கள் அவர்களிடம் பயந்தாலும் சண்டியர்கள் வீழ்ச்சியடையும் போது மக்கள் மகிழவே செய்வர்.

மக்கள் விரோதிகள் விடயத்தில் புலிகள் வெளியே மட்டுமல்ல, இயக்கத்தின் உள்ளேயும் கண்டிப்பான போக்கையே கையாண்டனர்.

## கோண்டாவில் தாக்குதல்

1984 மார்ச் 20ம் திகதி யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்ட பஸ் ஒன்று கோண்டாவிலை நோக்கி சென்று கொண்டிருந்தது.

அந்த பஸ்ஸில் விமானப் படையைச் சேர்ந்த இருவர் பயணம் செய்துகொண்டிருந்தனர்.

இந்த விடயம் புலிகளுக்கு எப்படியோ தெரிந்துவிட்டது.

கோண்டாவிலில் வைத்து இரு விமானப்படை வீரர்களும் புலிப் போராளிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

(1)ரோகன் ஜெயசேகரா

(2)சரத் அனுரசிறி

ஆகியோரே 1984 மார்ச் 20இல் புலிகளால் கொல்லப்பட்ட விமானப்படை வீரர்கள்.

## மார்ச் 25

இலங்கையின் தேசிய பாதுகாப்பு அமைச்சராக அத்துலத் முதலியை நியமித்தார் ஜே.ஆர்.

பாதுகாப்பு அமைச்சராக பதவி ஏற்ற பின்னர் யாழ்ப்பாணத்தில் உயர்மட்ட பாதுகாப்பு மாநாடு நடத்த ஏற்பாடுகளைச் செய்தார் அத்துலத்முதலி.

ஏற்பாடுகள் நடந்தன. மாநாட்டுக்கு தலைமை தாங்குவதற்காக யாழ்ப்பாணத்தில் வந்திறங்கினார் அத்துலத்முதலி.

அவர் வந்து இறங்கிய அரைமணி நேரத்திற்குள் ஒரு செய்தி அவர் செவிக்கு வந்தது.

பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தை சேர்ந்த அதிரடிப் பிரிவினர் ரோந்து சென்றனர்.

ரோந்து சென்றவர்கள் மீது புலிகள் திடீர் தாக்குதல் நடத்தினார்கள்.

ஒரு சார்ஜன்டும், இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்களும் தாக்குதலில் கொல்லப்பட்டனர்.

## ஒற்றுமை முயற்சி

பிரதானமான தமிழ் விடுதலை இயக்கங்களை ஒன்றுபடுத்தும் முயற்சி ஒன்று 84 இல் மீண்டும் ஆரம்பமானது.

பத்மநாபா, டக்ளஸ்தேவானந்தா ஆகியோர் தமிழ்நாட்டில் சென்னையில் ஒற்றுமை முயற்சிகளில் ஈடுபட்டனர்.

ஒற்றுமை முயற்சியின் முதற்கட்டமாக ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எஃப், ஈரோஸ் ஆகிய மூன்று அமைப்புக்களும் இணைந்தன.

'ஈழத்தேசிய விடுதலை முன்னணி (ஈ.என்.எல்.எஃப்)என்று மூன்று இயக்கங்களின் ஐக்கிய கூட்டமைப்புக்கு பெயரிடப்பட்டது.

இந்தக் கூட்டமைப்போடு 'புளொட்' அமைப்பையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என்று ஈரோஸ் விரும்பியது.

ஈரோஸ் சார்பாக அதில் முன்னணியில் நின்றவர் வே.பாலகுமார்.

'புளொட்' அமைப்பினருக்கும் ஈ.பி.ஆர்.எல்.எஃப்பிற்கும் இடையே அப்போது பிரச்சனை நிலவியது.

# அற்புதன் எழுதுவது

# அரசியல் தொடர்

மட்டக்களப்பு சிறை உடைப்பை அடுத்து ஏற்பட்ட பிரச்சனை அது.

பத்மநாபா கசப்பை மறந்துவிட்டு 'புளொட்' அமைப்பைக் கூட்டமைப்புக்குள் கொண்டுவர தயாராகவே இருந்தார்.

சுரேஸ் பிரேமச்சந்திரன், ரமேஷ் போன்றவர்கள் அதனை விரும்பவில்லை. புளொட் அமைப்பினர் தமது உறுப்பினர்கள் மீது தாக்குதலை நிறுத்த வேண்டும். நிறுத்தினால்தான் கூட்டமைப்பிற்கு புளொட் வரமுடியும் என்ற நிலைப்பாட்டை அவர்கள் மேற்கொண்டனர்.

அப்போது கூட்டமைப்புக்கு ரமேஷ் செயலாளராக இருந்தார்.

## பாலகுமாரின் விருப்பம்

'புளொட்' அமைப்பை பேச்சுக்கு அழைக்குமாறு வே.பாலகுமார் ரமேஷிடம் பலமுறை வற்புறுத்திக் கொண்டிருந்தார்.

ரெலோ தலைவர் சிறிசபாரத்தினத்தை தனியே சந்தித்த வே.பாலகுமார் "கூட்டமைப்பில் புலிகள் சேர்ந்தால் கூட்டமைப்பே அவர்களுடையதாக மாறிவிடும். எனவே புளொட்டை கொண்டுவருவோம்" என்று யோசனை தெரிவித்தார்.

ஆனால், பாலகுமார் இப்படி தமக்காக வாதாடுவது புளொட் தலைவர் உமா மகேஸ்வரனுக்குத் தெரியாது.

கூட்டமைப்பின் அலுவலகம் கோடம்பாக்கத்தில் இருந்தது. சென்னையில் ஏனைய இயக்கங்களுக்கு அலுவலகங்கள் இருந்தன. ஈரோஸுக்கு மட்டும் அலுவலகம் கிடையாது.

அதனால் கூட்டமைப்பு அலுவலகத்தில் வந்து நாள் முழுவதும் குந்திவிடுவார் பாலகுமார்.

ஒரு நாள் உமா மகேஸ்வரனும் வேறு சிலரும் கூட்டமைப்பு அலுவலகத்திற்குச் சென்றனர்.

பாலகுமார்தான் அப்போது அங்கு இருந்தார். பாலகுமாரோடு காரசாரமான வாக்கு வாதத்தில் ஈடுபட்ட உமாமகேஸ்வரன் அங்கிருந்த மேசையில் ஓங்கிக் குத்தினார்.

"ஈரோஸ் ஒரு 'லெட்டர் கெட்' இயக்கம்" என்று பாலகுமாரைப் பார்த்து கேலி செய்துவிட்டும் சென்றுவிட்டார் உமா மகேஸ்வரன்.

இதன் பின்னர் புளொட் அமைப்பை கூட்டமைப்பில் சேர்க்க வேண்டும் என்ற பேச்சைக் குறைத்துக் கொண்டார் பாலகுமார்.

## புலிகள் மறுப்பு

கூட்டமைப்பில் சேராமல் வெளியே நின்று புரிந்துணர்வோடு செயற்பட விரும்புவதாகப் புலிகள் கூறிக் கொண்டிருந்தனர்.

புலிகள் தாமதித்துக் கொண்டிருந்த போது தமிழர் விடுதலைக் கூட்டணியினர் கூட்டமைப்பில் சேர விருப்பம் தெரிவித்தனர்.

கூட்டணியும் வருவதால் புளொட் அமைப்பையும் அழைப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப், ஈரோஸ், ரெலோ, புளொட், கூட்டணி ஆகிய அமைப்புக்களது பிரதிநிதிகள் சென்னையில் கூடிப் பேசினார்கள்.

கூட்டணி சார்பில் அமிர்-சிவசிதம்பரம், வி.பொன்னம்பலம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

புலிகள் வராவிட்டால் அவர்களைப் பார்த்துக் கொண்டிருக்காமல் கூட்டமைப்பு நடவடிக்கைகளை விரிவாக்கலாம் என்று புளொட் கூறியது. கூட்டணியும் அதனை ஆதரித்தது.

மீண்டும் ஒரு முறை புலிகளிடம் முடிவை கேட்டுவிட்டு மேற்கொண்டு பேசித் தீர்மானிக்கலாம் என்றளவில் அந்தக் கூட்டம் முடிவுற்றது.

## சுழிபுரம் படுகொலைகள்

யாழ்ப்பாணத்தில் சுழிபுரம் என்னும் இடத்தில் புலிகள் அமைப்பை சேர்ந்த உறுப்பினர்கள சிலர் கொல்லப்பட்டனர்.

சித்திரவதை செய்யப்பட்டே அவர்கள் கொல்லப்பட்டிருந்தனர்.

இக் கொலைகளை புளொட் அமைப்பினரே செய்தனர் என்று சம்பவத்தை நேரில் கண்ட ஈ.பி.ஆர்.எல்.எஃப் உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

அப்போது சென்னையில் இருந்து 'ஈழச் செய்தி' என்னும் மாத பத்திரிகை ஒன்றை ஈ.பி.ஆர்.எல்.எஃப் வெளியிட்டு வந்தது.

**'ஈழச்செய்தி'** ஆசிரியராக இருந்தவர் ரமேஷ்.

சுழிபுரம் படுகொலையைக் கண்டித்து 'ஈழச் செய்தி' காரசாரமாக விமர்சித்தது.

இதனையடுத்து புலிகள் அமைப்புக்கும் ஈ.பி.ஆர்.எல்.எஃப அமைப்புக்கும் இடையே நல்லுறவு ஏற்பட்டது.

'ஈழச் செய்தி" பத்திரிகையை புலிகள் தாமும் வாங்கி விநியோகித்தனர்.

கூட்டமைப்புக்கு வருவதற்கு தாம் தயாராக இருப்பதாக புலிகள் சார்பில் இராசநாயகத்தால் ஈ.பி.ஆர்.எல்.எஃப். பிற்கு தெரிவிக்கப்பட்டது.

*(தொடர்ந்துவரும்...)*

---

1\. குறைந்தபட்ச வேலைத் திட்டங்களை உருவாக்குவதற்கான எமது அரசியல் ரீதியான அடிப்படைக் கொள்கைகள் :

1. ஸ்ரீலங்காவின் ஆதிக்கத்திலிருந்து எமது தாயகத்தின் சுதந்திரத்தை வென்றெடுத்தல்.
2. தமிழீழ விடுதலை தவிர்ந்த வேறெந்த குறைந்தளவான சமரசத்துக்கும் இடமளிப்பதில்லை.
3. எமது மக்கள் அனைவரையும் இணைத்த ஆயுதப் போராட்டத்தை எமது போராட்டப் பாதையாகக் கொள்ளுதல்.
4. சுதந்திர தமிழீழத்தில் சோசலிச சமுதாயத்தைக் கட்டியெழுப்புதல்.
5. அமெரிக்கா ஏகாதிபத்தியத்தில் நவகாலனித்துவப் பிடியிலிருந்து எமது தேசத்தை விடுவித்தல்.

2\. தற்போது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள குறைந்த பட்ச வேலைத் திட்டங்கள் :

1. ஸ்ரீலங்கா அரச படைகளுக்கு எதிரான எமது ஆயுத போராட்ட நடவடிக்கைகளை ஒருமுகப்படுத்தி செயற்படுத்துதல்.
2. வெளிநாடுகளின் பிரச்சாரங்களை கூட்டாக மேற்கொள்ளுதல்.
3. எமது விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவான தனிநபர்களிடமிருந்தும் நிறுவனங்களிடமிருந்தும் பொது நிதியைத் திரட்டி அதனை ஒரு பொதுக் குழு மூலம் நிர்வகித்தல்.

இத்துடன், இக் கூட்டமைப்பு மேலும் விரிவு பட்டு வலுப்பெற எமது மக்களின் விடுதலைக்காகப் போராடும் ஏனைய இயக்கங்களையும் இக்கூட்டமைப்பில்? இணைந்து செயற்பட வேண்டும் என்று இச்சந்தர்ப்பத்தில் வலியுறுத்துகிறோம். இதற்கு ஏனைய அனைத்து இயக்கங்களையும் ஒத்துழைப்பு தருமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

| | | |
|---|---|---|
| ஸ்ரீ சபாரட்ணம் | பாலகுமார் | பத்மநாபா |
| செயலதிபர் | ஈழப் புரட்சியமைப்பு | செயலதிபர் |
| தமிழீழ விடுதலை | புரட்சிகர நிறை | ஈழ மக்கள் |
| | வேற்றுகுழு | புரட்சிகர |
| இயக்கம் | சார்பாக. | விடுதலை |
| | | முன்னணி. |

ஈ.என்.எல்.எஃப். - கூட்டமைப்பு அறிக்கை - 1984



பத்மநாபா - பாலகுமார் - சிறீசபாரத்னம்

# சமாதானம் என்ற வார்த்தை போதை தருவதாக இல்லாமல் ஔடதமாக இருக்க வேண்டும்!

அலசுவது – இராஜதந்திரி

மோதல் தவிர்ப்பு உடன்பாடு முறிவடைந்ததையடுத்து வடக்கு- கிழக்கில் ஆங்காங்கே சண்டைகள் இடம்பெற்று வருகின்றன.

எல்.ரி.ரி.ஈயினர் மேற்கொண்டுவரும் தாக்குதல்கள் மற்றும் படையினரின் குண்டுவீச்சுக்கள் என்பன மீண்டும் அவலத்துக்கும், அழிவுக்கும் இடமளித்திருக்கின்றன.

மோதல் தவிர்ப்பு நிலை முறிவடைந்திருப்பதும், சமாதான அணுகுமுறைகளை மீண்டும் உடனடியாகக் கட்டியெழுப்ப முடியாத சூழ்நிலைகள் உருவாகியிருப்பதும் துரதிஷ்டவசமானதாகவே இருக்கின்றன.

ஈழப்போர் - மூன்று, மூண்டுவிட்டது என்ற தோரணையில் விமர்சனங்கள் வெளிவர ஆரம்பித்துள்ளன.

சமாதானம், சமாதானம் என்று சந்திரிகா ஆட்சியாளர்கள் தமது தேர்தல் பிரசாரம் முதற்கொண்டு இன்று வரை பேசி வருகின்றனர்.

ஆயினும் சமாதானம் என்ற இவ்வார்த்தைப் பிரயோகம் வேப்பங்காயாகக் கசக்கின்றதே தவிர கரும்பாக இனிக்கக் காணப்படவில்லை.

சமாதானம் என்று இலகுவாகக் குறிப்பிட்டுவிடலாம். ஆனால் அதனை எட்டுவதற்கான பாதை மிகவும் அபாயகரமானதாகவே இருக்கின்றது.

இதுவரை காலமும் இடம்பெற்ற பேச்சுக்கள் எவ்வகையிலும் அரசியல் ரீதியிலான அம்சங்களை அணுகியிருக்கவில்லை. வடபகுதி மக்களின் நாளாந்த பிரச்னைகள் குறித்ததாகவே அப்பேச்சுக்கள் விளங்கியிருந்தன.

பொருளாதாரத் தடைகளை முற்றிலுமாக நீக்கும்படியும், எரிபொருள்தடை, கடல்வலயத்தடை ஆகியனவற்றை அகற்றும்படியும், பூநகரி முகாமை அப்புறப்படுத்தும்படியும்

நாடிபிடித்தறியாமையினாலேயே இன்று மோதல்களை எதிர்நோக்க வேண்டிய துரதிஷ்ட வசமானநிலைக்குள்ளாகியுள்ளது.

வடக்கு-கிழக்கு விவகாரம் என்பது மிகவும் வெந்து, புரையோடிப்போயுள்ள புண்ணாகவே இருக்கின்றதென்பதனை சந்திரிகா அரசு நன்குணர வேண்டியுள்ளது.

வடக்கு-கிழக்கில் ஆயுதமேந்திப் போராட்டங்களில் குதித்துள்ளவர்கள் அரசியல் ரீதியாக மட்டுமல்ல, சமூக, பொருளாதார ரீதியாகவும் பெரிதும் பாதிக்கப்பட்ட பின்னணியைக் கொண்டவர்களாக இருக்கின்றனர்.

கொழும்பிலுள்ள ஆட்சியாளர்களைப் பொறுத்தவரை ஆயுதப் படையினர் நாட்டின் ஒருமைப்பாடு, பாதுகாப்பைப் பேணுவோராக



புலனாகின்றது.

எனவே வடக்கு-கிழக்கில் மட்டுமல்ல முழுநாட்டிலுமே கடந்த காலங்களில் அந்தகார சூழ்நிலைகள் ஏற்பட்டமைக்கு அன்றைய ஆட்சியில் ஆயுதப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளே பிரதான காரணங்களாக அமைந்தன.

இந்நிலையில் வடக்கு, கிழக்குப் பிரதேசம் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் உச்சக்கட்ட நிலையைப் பிரதிபலிப்பதாக விளங்கியிருக்கக் காணப்படுகின்றது.

கடந்த ஆண்டு பி.பி.ஸி.க்கு வழங்கிய பேட்டியொன்றில் கூட ஜனாதிபதி சந்திரிகா ஆயுதப் படையினரின் போக்கை வன்மையாகக் கண்டித்திருந்தார்.

தமக்குள்ளேயே அவர்கள் ஓர் இராச்சியத்தை வைத்திருக்கப் பார்க்கிறார்கள் என்று ஜனாதிபதியாகப் பதவியேற்கு முன்னர்-பிரதமர் பதவியிலிருந்த போது சந்திரிகா குறிப்பிட்டிருந்தார்.

தற்போது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி என்ற ரீதியில் முப்படையினருக்கும் ஆணையிடும் அதிகாரத்தைக் கொண்டுள்ள சந்திரிகா வடக்கு-கிழக்குப் பிரச்னை

இந்நிலையில் சந்திரிகா ஆட்சியாளர்கள் சமாதானப் பயணங்குறித்து சரிவரப் புரிந்து கொள்ளாததனாலேயே இன்று ஓர் இக் கட்டான நிலைக்குள்ளாகியிருக்கக் காணப்படுகின்றனர்.

கடந்த வாரம் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பாரிஸில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகளைச் சந்தித்திருந்தார்.

அப்போது வடக்கு - கிழக்கு பிரச்னை குறித்த தமது அணுகுமுறைகள் குறித்தும் விளக்கமளிக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு சந்திரிகா உள்ளாகியிருந்தார்.

சந்திரிகாவின் அரசியல் ரீதியிலான சமாதான அணுகுமுறைகள் தற்போது பின்னடைவைக் கொண்டுள்ளன என்பது உலகறிந்த உண்மை.

இப்பின்னடைவின் விளைவாக உயிர்ப்பலிகள் பல ஏற்பட்டுள்ளதுடன், வடபகுதி மக்கள் மீது மீண்டும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

இதுவரை காலமும் சந்திரிகா அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குமிடையே இடம் பெற்ற பேச்சுவார்த்தைகளை எடுத்து நோக்கும் பட்சத்தில், நத்தை வேகத்தில் அப் பேச்சுக்கள் நகர்ந்ததுடன் இறுதியாக எதுவித ஆரோக்கிய முடிவுகளையும் எட்டாத நிலையில் அப் பேச்சுக்கள் முறிவடைந்திருக்கக் காணப்படுகின்றன.

இம் முறிவு தற்காலிகமானது என்றே அரச தரப்பினர் தெரிவித்துள்ளனர். ஆனால் உடன் செயலில் இறங்கி மோதல் தொடருவதைத் தடுக்கமுடியாத நிலையில் அரச தரப்பினர்

அப்புறப்படுத்தும்படியும் எல்.ரி.ரி.ஈயினர் கோரிக்கை விடுத்திருந்தனர்.

வடபகுதியில் பூநகரி முகாமைவிட பலமுக்கிய படைத்தளங்கள் பல்லாயிரக்கணக்கான படையினருடன் காணப்படுகின்றன.

இந் நிலையில் பிரதான படைத்தளமான பலாலியையோ அல்லது ஆனையிறவையோ மற்றும் காரைநகரில் அமைந்துள்ள கடற்படைத்தளத்தையோ அகற்றுமாறு எல்.ரி.ரி.ஈ.யினர் கோரியிருக்கவில்லை.

பூநகரி முகாமை மட்டுமே அகற்றி விடும்படி எல்.ரி.ரி.ஈயினர் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இராணுவ ரீதியிலான அழுத்தங்களுடன் பேச்சுக்களைத் தொடருவதென்பது, அரசியல் அணுகுமுறைகளின் சுமுகத்தன்மையைப் பாதிப்பதாகவே இருக்கும்.

பூர்வாங்கப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்ட தருணத்தில் அவை தகுந்த உத்வேகத்துடன் தொடருவதற்கு தடையாக பூநகரி முகாம் சம்பந்தப்பட்ட விடயமே பிரதான காரணமாக அமைந்துள்ளது.

இந் நிலையில் பேச்சுக்களுக்குக் குறுக்கே முட்டுக்கட்டையாக இருந்த பூநகரி குறித்த விடயத்தில் அரசாங்கம் கூடுதல் கவனமெடுத்திருத்தல் வேண்டும்.

கடந்த 19ந்திகதி எல்.ரி.ரி.ஈயினர் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை ஒருதலைப்பட்சமாக முறித்து யுத்தத்தை மீண்டும் ஆரம்பித்துள்ளனர் என்று அரசு குற்றஞ்சாட்டியுள்ளது.

ஆனால் எல்.ரி.ரி.ஈயினர் தமது கோரிக்கைகளை முன் வைத்த போது அவற்றுக்கான காலக்கெடுக்களையும் விதித்து வரவே காணப்பட்டுள்ளனர். இந்நிலையில் அரசு எல்.ரி.ரி.ஈயினரின்

## மீண்டும் சமரச முயற்சிகளை முன்னெடுக்க வேண்டிய சந்திரிகா அரசு!

பாதுகாப்பைப் பேணுவோராக இருக்கலாம்.

ஆனால் வடக்கு-கிழக்கில் வாழும் மக்களைப் பொறுத்தவரை ஆயுதப் படையினரின் நடவடிக்கைகள் மரண அவஸ்த்தையை உண்டுபண்ணியிருக்கக் காணப்படுகின்றது.

முன்னைய ஆட்சியாளர்களால் ஆயுதப் படையினர் கையாளப்பட்ட விதமே, கடந்த பத்து வருட காலத்துக்கும் மேலாக வடக்கு-கிழக்கில் தோன்றியுள்ள நாசகார சூழ்நிலைக்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது.

இந் நிலையில் இன்று வடக்கு-கிழக்கில் இடம் பெற்றுள்ள படைபல விஸ்தரிப்பு மற்றும் அவர்களது நடமாட்டம் என்பவற்றை நிறைவேற்று அதிகாரம் கொண்டவர் என்ற அடிப்படையில் ஜனாதிபதி சந்திரிகா நன்கு அலசி ஆராய வேண்டியவராகவுள்ளார்.

தென்னிலங்கையில் முன்னைய ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்டதாகக் கருதப்படும் திருகுதாளங்கள், அடிப்படை மனித உரிமைமீறல் நடவடிக்கைகள் என்பன தொடர்பாக பல்வேறு ஆணைக்குழுக்களையும் ஜனாதிபதி சந்திரிகா அமைத்திருக்கக் காணப்படுகின்றார்.

இலங்கையின் ஒவ்வொரு மாகாணத்திலும் கடந்த ஆட்சிக் காலத்தின்போது காணாமல் போனவர்கள் குறித்து விசேட ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் விசாரணைகளை மேற்கொண்டுவரக் காணப்படுகின்றன.

இந்த ஆணைக்குழுக்கள் முன்பாக வழங்கப்பட்ட சாட்சியங்களை நோக்கும்போது இளைஞர், யுவதிகள், மாணவர்கள் என்று ஆயிரக்கணக்கானோர் கடந்த காலங்களில் காணாமல் போயுள்ளமைக்கு ஆயுதப் படையினரே

சந்திரிகா வடக்கு-கிழக்குப் பிரச்னை தீர்வு குறித்த விடயத்தில் அப்பிரதேச மக்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் விதத்திலேயே ஆயுதப் படையினரைக் கையாள வேண்டியவராகின்றார்.

கடந்த காலங்களில் இலங்கையின் அபிவிருத்திக்கு என்று பெறப்பட்ட வெளிநாட்டு உதவிப் பணத்தில் பெரும் பகுதி படைபல விஸ்தரிப்புக்கும் யுத்தத்துக்குமே செலவிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா இத்தடவை தாமாகவே நேரில் சென்று பாரிஸில் இலங்கைக்கான உதவிப் பணத்தைக் கோரியுள்ளார்.

அங்கே யுத்தம் பற்றியோ, அல்லது அதற்கான செலவினம் பற்றியோ ஜனாதிபதி ஒரு வார்த்தை கூடப் பிரஸ்தாபிக்கவில்லை.

நாட்டின் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு, புனரமைப்பு பணிகளுக்கே உதவிப் பணத்தில் பெரும் பகுதி செலவிடப்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு என்பன நாட்டில் ஒரு அமைதி நிலையை ஏற்படுத்தாத வரை எவ்வகையிலும் கைகூடப்போவதில்லை.

நாட்டில் மோதல்கள் வெடித்த நிலையில் பாரிஸ் பயணமான ஜனாதிபதி சந்திரிகா, மீண்டும் நாடுதிரும்பிய நிலையில் சமாதான அணுகுமுறைகளையே முன்னெடுக்க வேண்டியவராகின்றார்.

'சமாதானம்' என்ற வார்த்தையை மயக்கமளிக்கும் ஒரு போதைவஸ்த்தாக இல்லாமல், நிவாரணமளிக்கும் ஔடதமாகப் பிரயோகிக்க வேண்டியதே ஜனாதிபதி சந்திரிகாவின் தலையாய கடமையாக விளங்குகின்றது.

# கொல்லு வெட்கமா?

## அமெரிக்காவில் அதிர்ச்சி கொலைகள்

**"எதற்காக இங்கே அழைத்துப் போகிறாய்? பயமாக இருக்கிறது!"**

அவனது மோட்டார் சைக்கிளின் பின்புறம் அவனது முதுகில் ஒட்டிக் கொண்டிருந்தவள் பயந்து மெல்ல வியர்த்தாள்.

அவன் எதுவும் பேசவில்லை. அந்த பாழடைந்த மண்டபத்தின் முன்பாக மோட்டார் சைக்கிளை நிறுத்தி "ம்... இறங்கு." என்றான்.

"எவரது தொந்தரவும் இல்லாத இடம். நாமே நமக்கு தொந்தரவாக இருக்கலாம். வா."

என்று கண்ணடித்துவிட்டு முன்னே நடந்தான். அவள் தயங்கியபடி பின் தொடர்ந்தாள். அவளுக்கு இப்போது சற்றுத் தைரியம் வந்திருந்தது. பயம் விலகி, அவளும் புதிய அனுபவம் ஒன்றுக்காக மிக விரும்பினாள்.

கட்டிடத்தின் உள்ளே வெறுமையாக இருந்தது. சமீபத்தில் யாரும் அங்கே நடமாடிய அறிகுறிகளே தெரியவில்லை.

அவன் சட்டென்று நின்று, அவளை உற்று நோக்கியபடி சொன்னான்,

"நான் உன்னை கற்பழிக்கலாம் என்று நினைக்கிறேன்!"

அவள் சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறாய்?"

"சிரிக்காமல் அழவா சொல்கிறாய்? எடுத்துக்கொள் என்றுதானே கூட வந்திருக்கிறேன். வன்முறை எதற்கு இதில் வருகிறது. முட்டாள் காதலா!" அவன் முகத்தில் ஒரு கொடூரம் தெரிந்தது.

"தானாக வந்துவிழும் கனியைச் சுவைப்பதில் சுவாரசியமில்லை. அது எனக்குப் பிடிக்காது.

"சோ..... உன்னை அடித்து, உதைத்து நீ அழுவதை இரசித்து..அதன் பின்னர்...."

உரத்து... அகோரமாய் சிரித்தான். சிரிப்பில் போலியில்லை என்பதை உணர்ந்து அவள் பயத்தில் உறைந்து போனாள்.

□□

1959 ஜனவரி 11ம் திகதி கரோல் ஜாக்சனும் அவரது மனைவி மற்றும் இரு பெண் குழந்தைகளும் காரில் சென்றுகொண்டிருந்தனர்.

"இன்றைய தினம் மிக இதமாக இருக்கிறதல்லவா டியர்!"

தன் மனைவியிடம் கேட்டுக் கொண்டே காரை செலுத்திக் கொண்டிருந்தார் கரோல் ஜாக்சன்.

ஜாக்சனின் மனைவி பதில் சொல்ல வாய் திறப்பதற்கிடையில், காரின் எதிரே ஒரு மோட்டார் சைக்கிள் வந்து குறுக்கே நின்று வழிமறித்தது.

"ஏய் உனக்கென்ன பைத்தியமா?"

ஜாக்சன் கோபத்தோடு தலையை நீட்டி கத்தினார். மோட்டார் சைக்கிளில் இருந்தவன் அதனை நிறுத்திவைத்துவிட்டு, நிதானமாக இறங்கிவந்தான். கரத்தில் ஒரு கைத்துப்பாக்கி.

ஜாக்சன் நிதானிப்பதற்கிடையில்,



க்ரைம் நியூஸ்

"பைத்தியம்தான். பைத்தியத்தில் பட் பட்டென்று நான் சுட்டுவிடக்கூடாதென்றால் எல்லோரும் கீழே இறங்குங்கள்."

பயத்தில் காரைவிட்டு இறங்கினார்கள்.

கைத்துப்பாக்கியை உயர்த்தி ஜாக்சனின் நெற்றியில் சுட்டான்.

டுமீல்!

"யாரும் கத்தக் கூடாது! கத்தினால் எல்லோரும் இரத்தம் சிந்துவீர்கள்!"

ஜாக்சனின் இரு பிள்ளைகளையும் காரின் டிக்கியில் போட்டு பூட்டினான்.

திருமதி ஜாக்சனை மட்டும் தன்னோடு இழுத்துக்கொண்டு புதர்ப்பக்கமாகச் சென்றான்.

□ □ □

பொலிஸ் அதிர்ந்தது. இரக்கமற்ற கொலைகள். திருமதி ஜாக்சனின் உடலில் பல காயங்கள். உடல் குழி ஒன்றுக்குள் போடப்பட்டிருந்தது.

சித்திரவதை செய்துவிட்டு பலாத்காரம் செய்து காமவெறியாட்டம் நடத்தியிருக்கிறான்.

பிள்ளைகள் இருவரும் இறந்திருந்தனர். ஒரு குழந்தை பொல்லினால் அடித்துக் கொல்லப்பட்டிருந்தது.

'யார் அந்த பாதகன்?'

பொலிஸ் வலைவிரித்துத் தேடியது. பொலிஸின் பதிவேட்டில் 57ல் நடந்த கொலையொன்று கண்ணில்பட்டது.

57ல் கொலையானவளும் குழி ஒன்றுக்குள்தான் போடப்பட்டிருந்தாள்.

திருமதி ஜாக்சனின் உடலில் எங்கெங்கெல்லாம் காயங்கள் இருந்தனவோ அதே இடங்களில் 57 இல் கொல்லப்பட்ட பெண்ணின் உடலிலும் காயங்கள் இருந்தன.

அப்படியானால்....

கொலையாளி ஒருவன்தான்.

யார் அவன்?

□□

கரகோசம், விசில் சப்தம்!

26 வயது இளைஞன் மெல்வின் றீஸ் கிட்டார் இசையால் வித்தை காட்டிக் கொண்டிருந்தான்.

கிட்டார் இசை பொழிந்த மண்டபம் நிரம்பியிருக்க வெளியே பொலிஸ் வந்து விசாரித்துக் கொண்டிருந்தது.

"உள்ளே கிட்டார் வாசிப்பது யார்?"

"மெல்வின் றீஸ்"

"நல்லது அவன்தான் எங்களுக்கு வேண்டும்."

"பொலிஸ் நிலையத்தில் ஏதாவது இசைக்கச்சேரியா?"

"முட்டாள்! நாங்கள் அவனைக் கைது செய்யப் போகிறோம்!"

"கைதா? அவனையா?"

"ஏன் கூடாதா?"

"அவன் பொலிஸ் என்ற பெயரைக் கேட்டாலே உயிரை விட்டுவிடுவான். பயந்தாங்கொள்ளி! அவனைப் போய்...!"

பொலிசார் சிரித்தனர்.

"பயந்தாங்கொள்ளியல்ல, ஆட்கொல்லி!"

பொலிஸ் சொன்னதை எவருமே நம்பவில்லை.

பொலிஸ் மெல்வினைக் கைது செய்தது.

"மொத்தமாக எத்தனை கொலைகள் செய்திருக்கிறாய் மெல்வின்?"



மெல்வின் அமைதியாகச் சொன்னான்,

"சத்தியமாய் ஒன்றுகூட இல்லை!"

"அப்படியா? நீ அப்பாவி! அப்படித் தானே?"

"நிச்சயமாக! குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் கிடைக்குமா?"

"தண்ணீரா? உனக்கு கண்ணீரும், இரத்தமும் தானே பிடிக்கும்!"

"என்னை அவமதிக்கிறீர்கள்!"

"பொறு நண்பா! பொறு! கிளன் மோசர் பிளீஸ் கம்!"

கிளன் மோசர் என்றழைக்கப்பட்டவன் வந்தான். அவனைக் கண்டதும் மெல்வின் முகத்தில் இருட்டு!

கிளன் நீண்டகாலமாய் மெல்வினின் நண்பன்.

தனது மனப்பாரத்தை மெல்வின் இறக்கிவைத்தது கிளன்னிடம்தான். கிளன் இப்போது பொலிசிடம் சகலதையும் ஒப்புவித்துவிட்டான்.

இனி மறைக்க முடியாது. மெல்வின் அனைத்தையும் ஒப்புக் கொண்டான்.

நான்கு பெண்களை மெல்வின் கொலை செய்திருந்தான்.

முதலில் சித்திரவதை! அவர்கள் துடிப்பார்கள்! மெல்வின் இரசிப்பான்! பின்னர் அவர்களோடு காமப் பசியை தீர்த்துக் கொள்வான்! பசியடங்கிய பின் அவர்களைக் கொன்று வெறி தீர்ப்பான்!

மெல்வின் வீட்டை கிளறித் தேடியபோது ஒரு கைத்துப்பாக்கி கிடைத்தது.

அத்தோடு அவனது நாட்குறிப்பும் மாட்டியது.

நாட்குறிப்பில் தனது வக்கிர கொலைகளை வர்ணித்து எழுதி வைத்திருந்தான்.

அது போதும் பொலிசுக்கு!

நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டான் மெல்வின்.

1961ல் மெல்வினுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டபோது அவனுக்கு வயது 28.

கிளன் இல்லையென்றால் மெல்வின் கொலைகளை செய்துவிட்டு அப்பாவியாக கிட்டார் வாசித்துக் கொண்டிருந்திருப்பான்!

தருவது
ரசிகன்

---

அறிந்து கொள்ளுங்கள்—ஆரோக்கியம் பெறுங்கள்—ஆனந்தமாய் வாழுங்கள்


# மருத்துவ விந்தைகள்

## முடக்கு வாதத்தை கண்டுபிடியுங்கள்

(Guillain Barre Synrome) ஹில்லன் பார் சின்ட்றோம் எனப்படும் முடக்கு வாதம், போலியோவை போன்ற அறிகுறிகளுடனே தோன்றப்படுவது வழக்கமாகும்.

இவற்றை சிலர் போலியோ நோய் எனக்கருதி சலிப்பிற்கு ஆளாகி காணப்படுகின்றனர். இந் நோய் போலியோ நோயை ஒத்த அறிகுறிகளையும் ஒத்த தாக்கங்களையும் கொண்டிருக்கப் பெற்றுள்ளது என்பது உண்மை. என்றாலும் கூட போலியோ நோயைப் போன்று இந்நோய் கொடுமையானது என்று கூறிவிட முடியாது.

ஏனெனில் இவற்றின் தாக்கங்களை சிகிச்சை மூலம் ஒரு குறுகிய காலப்பகுதியில் பூரணமாக குணப்படுத்தி விடமுடியுமென்று மருத்துவர்கள் கூறுகின்றனர். இந்நோய்க்கு கீழ்க்காணும் அறிகுறிகள் தோன்றப்பெறுவது வழக்கமாகும்.



- ★ மந்த நிலையில் காய்ச்சல் தொடர்ந்திருக்கக் காணப்படக்கூடும்.
- ★ கை, கால், மூட்டுக்களில் ஒரே வகையான வேதனையும்-குறிப்பாக விரல் மடிப்புக்களில் அதிக அளவு வேதனையும் தோன்றப் பெறக் கூடும்.
- ★ கை, கால் உறுப்புக்கள் உணர்விழந்து உடலில் அதிக அளவில் வியர்வை வெளியேறக் கூடும்.
- ★ சிறுநீர் கழிப்பதில் சிரமமேற்படக்கூடும்.
- ★ கை, கால் மற்றும் மூட்டுக்கள் 10 தினங்கள் வரை பூரணமாக பலமிழந்து காணப்படக்கூடும்.
- ★ சிகிச்சைக்குப் பின் பலமிழக்கப்பட்டுள்ள உறுப்புக்கள் படிப்படியாக பலமடைந்து மூன்று மாத காலத்திற்குள் பூரணமாக குணமடைந்து காணப்படும்.

## ஏன்...? எதற்கு...? எப்படி...?

***01. மது குடித்தவர்கள் எதைப் பார்த்தாலும் இரண்டு, இரண்டாக தெரிவதாக கூறுவது ஏன்?***

**பதில்:** மதுவில் கலந்துள்ள 'அல்கஹால்' கண் தசை இழைகளை பலவீனம் அடையச் செய்கிறது. இதனால் இரட்டைப் பார்வை ஏற்படுகிறது. மது போதை முழுமையாக தீர்ந்தவுடன் கோளாறு நீங்கிவிடும். ஆனால், தொடர்ந்து மது குடிப்பவர்களுக்கு இந்தப் பாதிப்பு பார்வையையே பாதித்து விடும்.

***02. ஜன்னலை பார்க்கும்போது அதில் உள்ள கட்டை இரட்டையாக தெரிவது ஏன்?***

**பதில்:** இது சாதாரணமாக எல்லோர்க்கும் இருக்கக்கூடியதுதான். கோளாறு அல்ல. அருகே உள்ள பொருளில் உங்கள் கவனம் இருக்கும் போது தூரத்தில் உள்ள பொருள் கண் பார்வையில் படும்போது அது இரண்டாகத் தெரியும். இதே



போல் தான் தூரத்தில் உள்ள ஒரு பொருளை நீங்கள் பார்க்கும் போது, அதே சமயம் அருகிலுள்ள பொருள் கண்ணில்படும் போது அது இரண்டாக தெரியும் இது இயல்பானதுதான், குறைபாடு அல்ல.

***03. டிவியில் 'கோஸ்ட் பிக்சர்' (உருவத்தை தொடர்ந்து வரும் நிழல்) வருவது போல நான் ஏதாவது பொருளை பார்த்தால் அப்படி நிழலாக தெரிகிறது. இது ஏன்? இரட்டை பார்வை கோளாறா?***

**பதில்:** இதுதான் இரட்டைப் பார்வையின் ஆரம்ப நிலை. உடனடியாக டாக்டரை பார்த்து பயிற்சி, சிகிச்சை மேற்கொண்டால் சரியாகி விடும்.

***04. சில நாள் இருந்த இரட்டைப் பார்வை கோளாறு இப்போது இல்லை. மீண்டும் வருமா?***

**பதில்:** ஒருவிதமான சோர்வு, களைப்பினால் ஏற்படும் பலவீனத்தால் இது தற்காலிகமாக ஏற்படுகிறது. நரம்பு மண்டலம் பாதிக்கப்படுவதால் ஏற்படுகிறது. எதற்கும் டாக்டரிடம் காண்பித்து கண்களை பரிசோதித்துக் கொள்ளுங்கள்.

***05. சைக்கிளில் தினமும் செல்லும் எனக்கு முதுகுவலி வருமா?***

**பதில்:** இதனால் முதுகுவலி வராது. ஆனால், உங்கள் உயரத்துக்கு ஈடான சைக்கிளை மிதித்து செல்வது நல்லது. அதேசமயம், சீரான ஓய்வு தேவை. அளவுக்கு அதிகமானால் தானே கோளாறே.

***06. குதிக்கால் தூக்கி நடக்க உதவும் ஹைஹீல் செருப்பு பாதிப்பு தருமா?***

**பதில்:** நிச்சயமாக. கால் எலும்பு பாதிப்பதுடன், முதுகுவலியும் அடிக்கடி ஏற்படும். உடலை தாங்கக்கூடிய வகையில் உள்ள எலும்பு இயக்கத்தை ஹைஹீல் செருப்புகள் மாற்றுவதால் இடுப்பு எலும்பு உட்பட பலவகையில் வலிதரும். ஓரளவு ஹீல்ஸ் உள்ள செருப்புக்களை அணியலாம். அதுவும் அடிக்கடி அணிவதால் கோளாறுதான்.

***07. முதுகுவலி பரம்பரை நோயா?***

**பதில்:** இல்லை. வயதானவர்களுக்கு பொதுவாக எலும்புகள், தசைகள் பலீனமாக இருக்குமாதலால் பாதிப்பு ஏற்படுகிறது. ஆனால் இது பரம்பரை நோயோ, தொற்று நோயோ இல்லை.

***08. குளிராலும், பனியாலும் கூட முதுகுவலி வருமா?***

**பதில்:** ஆமாம். குளிர், பனியில் தசை நார்கள் முறுக்கி கொண்டு வளையாது. இதனால் முதுகுவலி வரும்.

## அவள் 26 ஆனால் அவருக்கு?

### கிளாமர் நியூஸ்



அன்னா ரிக்கோல் ஸ்மித்! அமெரிக்காவின் மொடலிங் அழகி.

வயது 26 என்று சொன்னால் யாரும் நம்பமாட்டார்கள். அத்தனை இளமை.

ஸ்மித் ஒரு படத்திலும் நடிக்கிறாள். படத்தின் பெயர் 'நேக்கட் கண்.'

அழகான ஸ்மித் மீது அமெரிக்க இளைஞர்களுக்கு ஒரு கண். அதில் செல்வந்த இளைஞர்களும் அடக்கம்.

ஸ்மித் கண்ணசைத்தால் போதும். ஆனால், ஸ்மித் கண்வைத்தது ஹோவார்ட் மார்ஷல் மீது!

ஹோவார்ட் மார்ஷல் யார்?

சொன்னால் ஆச்சரியப்படுவீர்கள்.

ஹோவார்ட்

தள்ளாதவயதுக் கிழவர்.

வயது - 89. வயதுதான் 89. வருட வருமானம் 10 கோடி ரூபாய்!


ஸ்மித்தின் நோக்கம் புரிகிறதல்லவா.

கணவரை 'பொப்பா' என்று செல்லமாக அழைக்கிறாராம் அழகி ஸ்மித்.

'பொப்பா' என்று அழைப்பது 'தாத்தா' என்பதுபோல் கேட்டுத் தொலைக்கிறது.

தாத்தாவோ, கூஜாவோ பணம் இருக்கிறதல்லவா, அது போதும்.

# தகவல் பெட்டி



# குடிக்கலாம்-குடியிருக்கலாம்

புத்தாண்டுக் கொண்டாட்டம் களை கட்டியபோது மதுவும் தாராளமாக பரிமாறப்பட்டது. ஒரு கிளாஸில் இருந்த மதுவை இந்த குட்டிக் கரடியார் மொத்தமாய் குடித்து விட்டர். 'கிக்' ஏறியதால் பொத்தென்று அதே கிளாஸில் குதித்தும் விட்டார். குடி குடியை மட்டுமல்ல கரடியையும் கெடுக்குமோ?



## செல்லத்தைச் சலவை செய்!



நாய் வளர்ப்பது நாகரிகமாகி வருகிறது. வளர்க்கும் நாய் மினு மினுப்பாக இருந்தால்தான் செழிப்புத் தெரியும். ரசிக்கவும் படும். குழந்தைகளை குளிக்கவைப்பது போல தினமும் செல்ல நாய்களை வாசனை சோப் போட்டு குளிக்கச் செய்வது முக்கியம். படத்தில் இருக்கும் பாட்டிக்கு வேலைகள் அதிகம். அதனால் நாயை குளிக்க வைக்க சலவை செய்யும் இயந்திரத்தையே பாவித்து வருகிறாராம். துணியும் தோய்க்கலாம். நாயும் குளிக்கலாம். பாட்டி புத்திசாலி.





## அநியாயம்

இது படக் காட்சியல்ல. இந்தியாவில் திருச்சூர் என்னுமிடத்தில் பொலிஸ் நிலையம் முன் மறியல் நடத்தினார்கள் பெண்கள். பொலிஸ் தடியடி நடத்திய போது துணிச்சலான நிருபர் சட்டென்று கைது செய்த காட்சி இது!




படமாக இருப்பது ஒரு ஆங்கில வார்த்தை. இந்த வார்த்தையின் தமிழ் அர்த்தம் அட்டவணை என்றாலும் அந்த வார்த்தை என்ன?

## வித்தியாச 'கிளிக்'



# 100



## மீண்டும் வருகை

நடிகை ஊர்வசியின் சகோதரி கல்பனாவும் ஒரு நடிகை. இன்னொரு சகோதரி கலாரஞ்சனியும் நடிகைதான். 'மூக்குத்தி பூ மேலே' என்றொரு படத்தில் நடித்த கலாரஞ்சனி திருமணம் செய்துகொண்டு போய்விட்டார். இப்போது மீண்டும் வாய்ப்புத் தேடி வந்திருக்கிறார், கலாரஞ்சனி.

## கமல் விரும்பிய அழகி


உலக அழகி ஐஸ்வர்யாராய் கமலின் ரசிகை. கமலின் படங்களை விரும்பிப் பார்ப்பாராம். கமலையும் பிடிக்குமாம்.

கமலுக்கும் ஐஸ்வர்யாராவைப் பிடிக்கும். 'இந்தியன்' படத்தில் ஐஸ்வர்யாராவை நடிக்கவைக்க கமல் விரும்பினார். நடிப்பதற்கு 30 இலட்சம் கேட்டார் உலக அழகி. அதனால் மனிஷாவுக்கு அந்த வாய்ப்புப் போய்விட்டது.

## ஊர்வசி படுபிசி

அதிக படங்கள் கைவசம் உள்ள நடிகை யார் என்று கேட்டால் உடனே வரும் பதில்-ஊர்வசி!

மாயா பஜார் 1995, புள்ள குட்டிக்காரன், இந்தியன், ஆயுதபூஜை, நான் ஒரு இந்தியன், என்று பட்டியல் நீள்கிறது. ஆனாலும் பந்தா இல்லாமல் முன்னர் மாதிரியே இருக்கிறார் ஊர்வசி.



மம்தா குல்கர்னி



## சினிமா விமர்சனம்

### பசும்பொன்

நடிகை ராதிகாவுக்கு விருது நிச்சயம். அப்படியொரு நடிப்பு.

93ல் ராதிகாவுக்கு பாரதிராஜாவின் கிழக்குச் சீமையிலே.

95ல் பாரதிராஜாவின் 'பசும் பொன்'.

சிவாஜி-பிரபு-சிவகுமார்-ராதிகா, வடிவேலு நான்கு பேரும் கொடுத்த பாத்திரத்தை உணர்ந்து நடித்து அசத்தினாலும் ராதிகாதான் தூள் கிளப்பியிருக்கிறார்.

ராதிகாவை மறுமணம் செய்யுமாறு சிவாஜி கேட்க சிவகுமார் உணர்ச்சிவசப்படும் கட்டம் இருக்கிறதே...இருவருமே போட்டி போட்டு நடித்திருக்கிறார்கள்.

தேவர்மகன், சின்னக் கவுண்டர், நாட்டாமை படச் சாயல்கள் இல்லாமல் இல்லை. அதனால் கதை பற்றி பெரிதாக சொல்ல முடியவில்லை. கதையில் வலு இல்லாதபோதும், கை தேர்ந்த இயக்குநரின் காட்சி அமைப்புக்கள் படத்தை தூக்கி நிறுத்திவிட்டன.

பிரபு நன்றாக நடித்துள்ளார். தேவர்மகன் கமல், நாட்டாமை சரத், சின்னக்கவுண்டர் விஜயகாந்த் எல்லோரையும் முன்னரே பார்த்துவிட்டு பார்ப்பதால் ஆச்சரியம் தர பிரபுவால் முடியவில்லை.

சரண்யாவும் முத்திரை பதித்திருக்கிறார். துடுக்குத்தனமான நடிப்பு. யுவராணி-செண்பகம், வில்லன் இளவரசு ஆகியோரும் அமர்க்களம்தான்.

இசை, ஏ.ஆர்.ரஹ்மான்.

பாரதிராஜா நம்மை ஏமாற்றவில்லை. 'பசும்பொன்' வசூலிலும் அவரை ஏமாற்றாது. ஆனாலும் கிளைமாக்ஸில் அத்தனை தூரம் நீட்டி இழுத்திருக்கத் தேவையில்லை.

முகப்பில்

ரூபினி

ரஜினி



## காதோடு சொல்லுகிறோம்

### பந்தா நடிகை

கோவை தமிழ் பேசும் நகைச்சுவை நடிகையின் பந்தா தாங்கமுடியவில்லையாம். "சூப்பர் நடிகருடன் ஜோடியாக நடித்தவளாக்கும் நான்." என்று சொல்லிச் சொல்லியே வந்த பல வாய்ப்புக்களை நழுவ விட்டிருக்கிறாராம்.

### வா மச்சான்

வில்லை எடுத்து மச்சான்
வேட்டைக்கு மச்சான்
சொல்லாமே ஓடி ...
வேஷக்கு மச்சான் ...
ஏ மச்சான் - ... மச்சான்

பட்டுக்கோட்டை ... சுந்தரம்
இரத்தினபுரி இளவரசி - 1995)

### காதல் வலை

'புவ' நடிகையின் வீட்டில் பூகம்பம். ஏற்கனவே காதல் ... கம்பிநீட்டியவரை பிடித்துவந்து காவல் காத்தார் ... காவலில் இருந்தாலும் 'புவ' நடிகை காதலரை ... இப்போதுதான் முன்னுக்கு வரும் நிலையில் காதல் ... தேவைதானா என்று குதிக்கிறாராம். தந்தைக்குலம்.

### காதலுக்கு ஜே

அமல நடிகையின் கணவரான நடிகருக்கும் 'பூ...' நாயகி நடிகைக்கும் இடையே நல்ல நெருக்கம். ... படம் ஒன்றில் நெருக்கமான பாடல் காட்சியில் ... காதல் கற்பூரம்போல் பற்றிக்கொள்ளக் காரணம் ... விசயமறிந்த 'அமல' நடிகை கொதிப்பில் இருக்கிறாராம்.

### துணி குறைந்து போச்சு

'சில' கவர்ச்சி நடிகை துணிகளை தாராளமாக குறைத்து நடித்த படமும் தியேட்டர்களைவிட்டு ஓடிவிட்டதாம். அதனால் வருத்தத்தில் இருக்கின்றார். காதலனை விட்டு பிரிந்திருந்தவர் மீண்டும் அவரோடு நட்பாகிவிட்டாராம். கவலையை மறக்க ஒரு வழி வேண்டாமா?



பிரகதி
படம்- வாழ்க ஜனநாயகம்

### மீனா தாக்கு...

இந்தி நடிகைகள் ... கதாநாயகிகள் ... வருகிறார்கள். ... தாக்குப்பிடித்து நின்று ... இந்தி நடிகைகள் ... சமாச்சாரங்களில் ... தயாரிப்பாளர்களு... கொண்டுவருகிறார்கள் ... இந்த நிலையில் மீனா ... வருகிறார்.

### விதி விலக்...

தெலுங்கில் வெற்றி... மொழி மாற்றப்பட்டு '... வருகிறது ஒரு படம்.

இதில் ஒரு வீரசே... நடனமோ, விரசமான ... இந்தக் காலத்தில் ... விதிவிலக்குத்தானே!

### சேஷன் ஷ...

இந்திய தேர்தல் ... அரசியல்வாதிகளுக்கு ... கூட. நடிகை ஷெட்டியின் ... ஆம், சேஷன் ஒரு பே... விசிறி" என்று சொல்... ஷில்பா என்றால் ... ஷில்பா ஷெட்டியின் ... தமிழ்பட ரசிகர்களும் ...



# சினி விசிட்

## மூன்றும் இந்த வருடம்

ஆயுத பூஜை, ஆகஸ்ட் 15, தாயின் மணிக்கொடி மூன்று படமும் அர்ஜுன் கதாநாயகனாக நடிக்கும் படங்கள்.
'ஆகஸ்ட் 15', படம் ஆர்.வி.உதயகுமார் இயக்குவது. தாயின் மணிக்கொடி' அர்ஜுன் இயக்கும் படம். மூன்று படங்களையும் இந்த வருடத்திற்குள் முடித்துவிடும் திட்டத்தோடு சுறு-சுறுப்பாக இருக்கிறார் அர்ஜுன்.

## வடிவேலு ஆறு வேடங்களில்

'நீலக்குயில்' படத்தில் பாண்டியராஜன் கதாநாயகனாக நடிக்கிறார். வித்தியாசமான தோற்றத்துடன் (கல்யாணராமன் கமல் பாணியில்) பாண்டியராஜன் நடிக்கிறார்.

மனோரமாவும் அதேபோல் வித்தியாச தோற்றத்துடன் நடிக்கிறார்.

'நீலக்குயில்' படத்தில் வடிவேலு ஆறு வேடங்களில் நடிக்கிறார். செந்திலுக்கு இரட்டை வேடம்.

கடந்த ஜனவரிமாதம் படப்பிடிப்பு தொடங்கி நடந்துவருகிறது.



## சிறு மினி

* சிறிது காலம் புதிய படவாய்ப்புக்கள் எதுவுமின்றி இருந்த சுகன்யா விரைவில் பிரபு, பாக்கியராஜ், ஜெயராம் நடிக்கும் புதிய படங்களில் இவர்களுக்கு ஜோடியாக நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

* நாகார்ஜுன்-மனிஷா கொய்ராலா தெலுங்கில் நடித்த 'கிரிமினல்' தமிழில் மொழிமாற்றப்பட்டு வருகிறது. முதலில் 'கிரிமினல் 007' எனப் பெயர் வைக்கப்பட்டிருந்த இப்படத்திற்குத் தற்போது 'எல்லாமே என் காதலி' எனப் பெயரை மாற்றி வைத்துள்ளனர்.

* மணிவாசகம் இயக்கும் 'நாடோடி மன்னன்' படத்தில் தாய்-மகள் என இரட்டை வேடத்தில் நடித்து வருகிறார் மீனா. இதில் மகளாக நடிக்கும் மீனாவுக்கு ஜோடியாக விக்னேஷ் நடிக்கிறார்.

* 'மாநகர காவல்' படத்தில் மொட்டை அடித்து நடித்த ஆனந்தராஜ் தற்போது விஜயகாந்த் நடிக்கும் 'திரு மூர்த்தி' படத்திற்காக மீண்டும் மொட்டை அடித்து நடித்து வருகிறார்.

* டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி வசனம் எழுதும் 'புதிய பராசக்தி' படத்திற்காக, 'மனிதர்களே ஒ புரட்சிப்புயல் வருது...' என்ற பாடலை கலைஞரின் மகள் கனிமொழி எழுதியுள்ளார்.

* அர்ஜுன் முதன்முறையாக இயக்கி, நடித்த 'சேவகன்' இந்திக்குப் போகவுள்ளது. 'சேவக்' என்ற பெயரில் இந்தியில் தயாராகும் இப்படத்தை அர்ஜுனே இயக்கி, நடிக்கவுள்ளார்.

* 'வாழ்க ஜனநாயகம்' படத்தில் கதாநாயகனாக நடித்து வரும் மன்சூர் அலிகான், 'வசந்தவாசல்', 'அகரன்', 'மக்கள் ஆட்சி' ஆகிய தமிழ் படங்களிலும் 'பாஸ்' என்ற கன்னடப்படத்திலும், 'பைட்டர் கோர்' என்ற மலையாளப்படத்திலும் வில்லனாக நடித்து வருகிறார்.

* 'கிழக்குச் சீமையிலே..' வெற்றிப்படமாக அமைந்த போதிலும், அதில் இரண்டாவது கதாநாயகியாக நடித்த அஸ்வினிக்கு திருப்புமுனையை ஏற்படுத்தவில்லை. அஸ்வினி இப்போது சில மலையாளப்படங்களில் நடித்து வருகிறார்.

* 'வெற்றி மேல் வெற்றி', 'மாநகரக் காவல்' ஆகிய படங்களை இயக்கிய எம்.தியாகராஜன் அடுத்து 'அதே கண்கள்', 'துணிவே துணை' போன்று மர்மப்படமொன்றை இயக்கத் திட்டமிட்டுள்ளார்.

* 'அவதாரம்' படத்தை இயக்கி நடித்துள்ள நாசர் அடுத்து வி.சேகர் இயக்கும் 'விரலுக்கேற்ற வீக்கம்' 'அருவாவேலு' ஆகிய இரண்டு படங்களில் கதாநாயகனாக நடிக்கவுள்ளார்.

...பிடிக்கிறார்.

...தமதியால் தமிழ் பட... ஓரம்கட்டப்பட்டு ...ால் மீனா மட்டும் ...கொண்டிருக்கிறார். ...என்றால் பல்வேறு ...ழைப்பு கிடைப்பதால் ... ஓடித் திரிந்து ...

...எப்படியோ சமாளித்து

...கான படம்

...றது அதனால் தமிழில் ...கோடன்' என்ற பெயரில் ...

... வாதெனில் கவர்ச்சி ...சிகளோ கிடையாதாம். ...ப்படியொரு படமா?

...ல்பா ரசிகர்

...ர் சேவுன் என்றால் ...க்கம். அந்த சேவுன் ...அழகின் முன் அடக்கம் ...டில் "நான் ஷில்பாவின் ...றுக்கிறார். ...என்று அர்த்தமாம். ...ரோமியோ வந்தால் ...சிலையைக் காணலாம்.



ஜெயராம்-குஷ்பூ
படம்-முறைமாமன்

## இந்தியிலும் கொடி பறக்குது.

ரோஜா-பம்பாய் படங்களின் இந்தி தயாரிப்புக்கள் அரவிந்தசாமிக்கு விளம்பரமும் பிரபலமும் தேடிக்கொடுத்துள்ளன.

இந்தி ரசிகர்கள் மத்தியில் கமலுக்கு அடுத்தபடியாக பிரபலம் அடைந்துள்ள தமிழ நடிகர் அரவிந்தசாமிதான்.

நாகார்ஜுனா, சிரஞ்சீவி போன்ற நடிகர்கள் இந்தியில் பெற்ற புகழையும் அரவிந்தசாமி முறியடித்து முன்னணியில் இருக்கிறார்.

இயக்குநர் மணிர... தனத்தின் ... அரவிந்தசாமிக்கு ரசிகர் மன்றங்கள் ... அவை வேண்... வேண்டாம் என்கிறார்.





## பிரபுவின் 'ஊட்டி பாட்டி'

பிரபு கதாநாயகனாக நடிக்கும் புதிய படத்தின் பெயரே சற்று வித்தியாசம்.

படத்தின் பெயர் 'ஊட்டி பாட்டி'. பெயரிலேயே நகைச்சுவை தெரிகிறதல்லவா. இது ஒரு முழு நீள நகைச்சுவை படம்தான்.

படவாய்ப்புக்களே இல்லாமல் இருந்த சுகன்யாவை பிரபுவின் ஜோடியாக நடிக்க வைக்கவுள்ளனர். இன்னொரு கதாநாயகியாக யாரை நடிக்க வைக்கலாம் என்று தேர்வு நடக்கிறது.

மனோரமா, கவுண்டமணி, செந்தில், ராதாரவி, விஜயகுமார், ஆனந்தராஜ் ஆகியோரும் நடிக்கின்றனர். இசை, வித்யாசாகர்.

கதை-திரைக்கதை-வசனம் எழுதி படத்தை இயக்கப்போவது பீனாசு.

படத்தில் பாட்டி யார் தெரியுமா? மனோரமாவேதான்.

ஏற்கெனவே 'பாட்டி சொல்லைத் தட்டாதே' படத்தில் பாட்டியாக நடித்து கலக்கியவர்தானே மனோரமா.

## "வித்தியாசமாக செய்ய வேண்டும்"

சரத்குமாரிடம் சினிமா இதழ் ஒன்று தொடுத்த கேள்விகளுக்கு அவரது பளிச் பதில்கள் சில.

"பிரபல நடிகர்களும், இயக்குநர்களும் டி.வி பக்கம் போகிறார்களே...நீங்கள் எப்படி?

"நானும் அவசியமானால் போவேன். ஆனால் இப்போது இல்லை".

சிவாஜி-எம்.ஜி.ஆர் பண்ணினமாதிரி தான் பண்ணணுமா?

"சிவாஜி சார் எல்லா பாத்திரங்களிலும் நடித்துவிட்டார். எம்.ஜி.ஆர்.படங்களில் பொழுது போக்கு அம்சங்களோடு நாட்டுக்கு, வீட்டுக்கு தேவையான நல்ல கருத்தொன்று இருக்கும். இவைகளை திரும்ப சொல்லுறதிலே தப்பில்லை. சினிமா வில நிக்கணும்னா வித்தியாசமா எதையாவது செய்துதான் ஆகணும்."

படத்தை இயக்குவீர்களா?

"நூறு படம் முடிஞ்ச பின்னாடி அதைப் பத்தி யோசிக்கலாம்!"

# சேலை கட்டும் முறையில் நளினமுண்டு!

## கட்டங்கள் பத்து- கட்டுங்கள் சேலை

# லேடீஸ் ஸ்பெசல்

ருக்கா நாதன்

**பெண்கள் அழகான சேலைகளை வாங்குவதில் ஆர்வம் காட்டுகின்றனர். அழகான சேலைகளை வாங்கினாலும் அவற்றை நேர்த்தியான முறையில் அணிந்து கொள்ள வேண்டும். அப்போது தான் அவற்றின் அழகு முழுமையாக பரிணமிக்க முடியும். இங்கு சேலை அழகாக அணியும் முறை விளக்கப்படுகிறது.**

1. முதலில் நீங்கள் தேர்ந்தெடுக்கும் புடவையின் நிறத்திற்கு ஒத்துப்போகும் வகையில் உள் பாவாடையை தேர்ந்தெடுக்க வேண்டும். பிளவுசும் அதற்கு ஏற்றாப் போல் இருக்கவேண்டும். உள்பாவாடை கணுக்காலைத் தொடக் கூடியதாக இருக்க வேண்டும்.

இடுப்பு ஆரம்பிக்கும் இடத்தில் இருந்து பாவாடையை பதித்து கட்ட வேண்டும். பின் சேலையை நுனியில் சிறு முடிச்சு போட்டு கட்டத் தொடங்க வேண்டும்.



2. இடுப்பை சுற்றிக் கொண்டு வந்து சேலையை சொறுகி பாவாடையின் அளவிற்கு சமனாக சுற்றி எடுக்க வேண்டும். உள்பாவாடையின் கீழ்ப் பகுதி சேலையின் அளவிற்கு நீளமாக இருக்க வேண்டும்.



3. பின்னர் சுற்றிய சேலையின் முந்தானையை ஒரே அளவாக எடுத்து பிளீட் பண்ணி முந்தானையை போட வேண்டும். மெல்லிய உடம்பாக இருந்தால், அகலமான முந்தானை போட வேண்டும். தோள்மூட்டு அகலமானவர்கள் மெல்லிய தாக போட வேண்டும்.



4. பெரிய போடர் உள்ள சேலையானால் போடரை இடுப்புக்கு நேராக எடுத்து விரித்து வைத்து பின் பண்ண வேண்டும். பின்னர் மற்ற பக்க மேல் பகுதியை எடுத்து பிளீட் பண்ணத் தொடங்க வேண்டும்.



5. பின்னர் பிளீட்ஸ் அழகாக எடுக்க வேண்டும். எடுக்கும் போது எல்லாம் ஒரே அளவாக எடுக்க வேண்டும். முன் பிளீட்சை பெரிதாக எடுத்து பின்னர் அதன் கீழ் ஒரே அளவாக எடுக்க வேண்டும்.

6. பிளீட்ஸ் எல்லாவற்றையும் எடுத்து முடிந்தபின் முழுவதையும் சேர்த்து நுனியில் ஒரு 'பின்' போட வேண்டும் அதன் பின்னர் எல்லாம் ஒரே அளவாக இருக்கிறதா என்று சரி பார்த்து உள்ளுக்கு போட வேண்டும்.

7. பின்னர் முந்தானையை எடுத்து ஒழுங்காக பிளீட்ஸ் செய்ய வேண்டும். பிளீட்ஸ் செய்யும் போது எல்லாம் ஒரே அளவில் பின் பண்ண வேண்டும்.

8. ஒரே அளவாக எடுத்து பிளீட்ஸ் எல்லாவற்றையும் சேர்த்து ஒன்றன் மேல் ஒன்றாக வைத்து 'பின்' பண்ண வேண்டும்.

தேவையானால் சேலை உடுப்பதற்கு முன்பாகவே பிளீட்ஸ் செய்து வைத்து விட்டு உடுப்பது நல்லது.



9. எல்லோரும் பிளீட்ஸ் செய்வதற்கு விரும்ப மாட்டார்கள்.

விருப்பமில்லாதவர்கள் சேலையை சுற்றி எடுத்து தோளில் வைத்து நுனியல் பின் பண்ண வேண்டும். தொங்கும் பகுதியை கைகளுக்கு இடையில் வைத்து அழகாக பிடிக்க வேண்டும்.



10. முழுவதையும் விரித்து போட்ட பின் முழுத் தோற்றம்.

## உபயோக அட்வைஸ்



* அடிக்கடி தும்மும் 'அடுக்கு தும்மல்' ஸ்பெஷலிஸ்டா நீங்கள்? வரட்டும் பொறுத்திருங்கள்., வந்தால், உடனே விபூதியைத் தண்ணீரில் குழைத்து மூக்கில் பூசிக் கொள்ளுங்கள். விபூதியில் ஈரம் உலரும் முன் மூக்கிலிருந்து தும்மல் விடுபட்டுச் சென்று விடும்.
* குழந்தை சுமாராகப் பேச ஆரம்பித்தவுடன், உங்கள் விலாசத்தைத் தெளிவாகச் சொல்லிக் கொடுத்துப் பழக்குங்கள், சமயத்திற்கு உதவும்.
* பிரிஜ்ஜை சுத்தம் செய்யும் போது சிறிது வாசனை சோப்பையும் சேர்த்துக் கொள்ளுங்கள் துர்நாற்றம் இல்லாதிருக்கும்.
* நெய், எண்ணெய்ப் பாத்திரத்தைக் கொதிக்கும் வெந்நீரில் கழுவிய பிறகு சாதாரணமாய்த் தேய்த்துக் கழிவினால் போதும். எண்ணெய்ப் பிசுக்கு போய்விடும்.
* பரிசுப் பொருட்களைக் கட்டிவரும் வர்ணப் பேப்பர்களைக் குப்பைக் கூடையின் மேல் ஒட்டி விடுங்கள். கூடைக்கே ஒரு அழகு வந்து விடும்.

## துணுக்ஸ்

தென் ஆபிரிக்காவைச் சேர்ந்த 36 வயதான நாமின் கயே நாக்வா என்ற பெண்மணிக்கு அழகான குழந்தை ஒன்று பிறந்தது. அந்தக் குழந்தை பிறந்த ஐந்தாவது மாதமே அவளுக்கு இன்னொரு குழந்தையும் பிறந்தது. முதல் குழந்தைக்கான கரு, தரித்து ஐந்து மாதங்கள் சென்றவுடன் இரண்டாவது கருவும் தரித்திருக்கின்றது. இதுபோல் 10 இலட்சம் பேர்களில் ஒருவருக்குத்தான் நடக்கும் என்கிறார்கள் டாக்டர்கள்.

தனி ஹொஸ்டல், மருத்துவனை, தனி பஸ், தனி தியெட்டர் என பெண்களுக்கு தனியாக உண்டு. ஆனால் பெண்கள் மட்டுமே தங்க ஹோட்டல் உண்டா? நியூயோர்க்கில் ஒரு ஹோட்டல் இருக்கிறது பெயர் 'மர்த்தா வோஷிங்டன் ஹோட்டல். 02.03.1903ல் ஆரம்பிக்கப்பட்ட இதில் சுமார் 420 அறைகள் உள்ளன. பெண்கள் மட்டுமே பணிபுரியும் இந்த ஹோட்டலில் ஆண்களுக்கு இடமில்லை.

## நீங்களும் தைக்கலாம்—(எஸ். எஸ்.)

### சுலபமாக தைக்க சில வழிகள்

நாம் ஒரு சட்டையினை வெட்டிக் கொண்டால் மட்டும் சரி என்று நினைக்கக் கூடாது. அதனை ஒழுங்காகத் தைக்க வேண்டுமல்லவா? சட்டையின் அமைப்பினை, அழகினை கொடுப்பது தையல் ஒழுங்கு முறைதான். எனவே சட்டையின் கழுத்துக்களை தைக்கும் முறையை சுலபமாகவும் ஒழுங்காகவும் அமைக்கக் கூடிய முறையினை கீழ்காணும் படங்களில் காண்போம்.



படம். 1

இவைகளைப் போன்று எத்தனையோ, வடிவங்களில் கழுத்துப்பகுதிகளை அமைக்கின்றனர். ஆனால் அவைகளை தைத்துப் பார்க்கும்போது வடிவங்கள் அவ்வாறு இருப்பது குறைவு. எனவே நாம் அதே போன்று வடிவம் வருவதற்கு கழுத்துப் பகுதியினை வெட்டிய பின்னர் அதன் அளவிலேயே இன்னோர் துணியினை அவ்வாறு வரைந்து வெட்டிக் கொள்ளல் வேண்டும். அதன் பின்னர் வெட்டிய கீழ்ப்பகுதியை வட்டவடிவமாக வெட்டவும்.

படம் இரண்டு வடிவத்திற்கு வெட்டுவதாயினும் அவ்வாறு வெட்டிக் கொண்டு கீழ்ப்பகுதியை நேராக வெட்டுதல் தையலுக்கு சுலபமாகும். 'V', 'ப' இவ் வடிவங்களில் கழுத்துக்களை அமைத்தாலும் அவ்வாறு பிறிதோர் துணியில் அவ்வடிவத்தினை வெட்டி அதனுடன் பொருத்தினால் அதே அமைப்பு தோன்றும்.

ஒரு வடிவமான இருதுணிகளையும் பொருத்திய பின்னர், பொருத்திய இடத்தில் சிறியதாக வெட்டிக் கொண்டால் வடிவம் அழகாக வரும்.

இக்கழுத்தின் முன் புறத்தினை அழகுபடுத்துவதற்காக 'லேஸ்' வேறு வர்ணங்களிலான துணிகளை வைத்து அழகுபடுத்துவதாக இருந்தால் அத்துணியினை உட்பக்கமாக வைத்து தைத்து வெளிப்புறத்திற்கு கொண்டு வருதல் வேண்டும்.



படம். 2

'டக்ஸ்' போடுவதாக இருந்தால் வெட்டப்பட்ட சட்டைப் பகுதியை சமனாக மடித்து மூட்டப் படவேண்டிய பகுதியில் இருந்து எமக்கு 'டக்ஸ்' எதில் தேவையென தென்படுகிறேதா அதே இடத்தில் குறியீடு ஒன்றை இடுக. அவ்வாறு மறுபக்கத்திற்கும் இட்டுக் கொண்டு மேல் நோக்கி மார்புப்பகுதிக்கு ஒரேயளவில் தைப்பதற்கு அடையாளமிடவும்.

'டக்ஸ்' போடும் போது கவனிக்க வேண்டியது கீழ்ப் பகுதியிலிருந்து மேல்பகுதி ஒடுங்கிச் செல்ல வேண்டும். தைக்கும் போது பகுதிகளில் இரண்டாக உள்ள கொலர், கைகள், டக்ஸ் பகுதியாவும் ஒரே மாதிரியாக ஒரே வடிவமாக இருத்தல் வேண்டும்.

எப்பக்கத்திலும் மடிப்பு இடும் போது ஒரேயளவாக இருக்க வேண்டும் என்பதை அடிக்கடி மனத்தில் ஏற்படும் போது அவ்விடங்களை சமனாக இருக்கிறதா? என்று அளந்து பாருங்கள். அளவுகள் கூடிக் குறையும் போது தூங்கல்கள் தோன்றும் அப்போது சட்டையின் அமைப்பு சரியானதாக இருக்காது.

## யார் அந்த 50 அதிஷ்டசாலிகள்?

**முரசின் 'பரிசுக் கூப்பன்' போட்டியில் அதிஸ்டசாலியான 50 பேரில் சென்ற வாரம் 10 பேரின் பெயர் விபரங்கள் இடம் பெற்றிருந்தன. இம் முறை மேலும் பத்து அதிஸ்டசாலிகள்.**

11. செல்வி. தேன்மொழி நாகராசா, வவுனியா.
12 திருமதி. நஸீமா ஜமால்தீன், களுத்துறை.
13. செல்வி. சி. கிருஷ்ணவேணி, பண்டாரவளை.
14. திருமதி. ஜெயஸ்ரீ ராஜ்குமார், ஹெந்தளை, வத்தளை.
15. செல்வி. எச். எம். அஜீஸா காத்தான்குடி-02.
16. திருமதி. யோகராணி சித்திரவேல், கொச்சிக்கடை- கொழும்பு-13.
17. செல்வி. பாத்திமா மஸாஹினா, கண்டி.
18. செல்வி. டிலக்ஷி ரவீந்திரன், நீர்கொழும்பு.
10. திருமதி. வி. ராஜரட்ணம் மஸ்கெலியா.
20. திருமதி . ஜனூஸா புஹாரி, நாவலப்பிட்டி.

(மறுவாரமும் வரும்)

## தாய்ப்பால் கொடுப்பது எப்படி?

குழந்தை பெற்ற பெண்கள் தாய்ப்பால் ஊட்டுவதே தாய்க்கும் சேய்க்கும் நல்லது. மார்பழகு குன்றிவிடுமோ என நினைப்பது ஆரோக்கிய வழி அல்ல.

தாய்ப்பால் ஊட்டும் பெண்கள், மார்பை எப்போதும் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

மார்புக் காம்புகளில் சொறி, சிரங்கு, புண் இல்லாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும். மார்பகத்தில் புண்கள் இருக்கும் சமயத்தில் குழந்தைக்குப் பாலூட்டுவதை நிறுத்தி விட்டு வேறு திரவ உணவு கொடுக்க வேண்டும்.

பாலூட்டும் போது ஆற அமர குழந்தையை வசமாக வைத்துக் கையிலேந்தி பாலூட்ட வேண்டும். நின்றபடியோ அல்லது வேறு வேலைகளில் ஈடுபட்டவாறோ பாலூட்டுவது கூடாது.

குழந்தை மீதுள்ள பாசத்தின் காரணமாக, வயிறு நிரம்பப் பாலூட்டக் கூடாது. தாய்ப்பால் கொடுக்கும் பெண்களின் உணவில் மீன், கருவாடு மாமிச வகைகளைச் சேர்க்க வேண்டும். இவ்வாறு செய்து வந்தால் தாய்ப்பால் சுரப்பது அதிகமாகும்.

பால் கொடுக்கும் போது சில பெண்களுக்கு பால் அதிகம் சுரந்து மார்புகள் பருத்து விடும். அத்தகையவர்கள் உடனே பாலை பீச்சி எடுத்து விட வேண்டும். இல்லையெனில் பால் மார்பகங்களில் உறைந்து கட்டியாக வேதனை தரும். இதுபோன்ற நேரங்களில் மல்லிகைப் பூச்சரத்தை மார்பில் வைத்துக் கட்டிக்கொண்டால் பால் சுரப்பது குறையும்.

பால் நிறம் மாறி மஞ்சளாகவோ அல்லது வேறு நிறத்திலோ இருந்தால் உடனே டாக்டரிடம் காண்பித்துச் சிகிச்சை பெற வேண்டும்.

## சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது - சுகந்தினி

### தேங்காய் சாதம்

**தேவையான பொருட்கள்**

தேங்காய்த்துருவல் - 2 மேசைக் கரண்டி
உளுத்தம் பருப்பு - 2 தேக்கரண்டி
மிளகாய் வற்றல் - 3
நெய் - 4 தேக்கரண்டி
பெருங்காயம் - சிறிது
கடுகு - 1/2 தேக்கரண்டி
கறிவேப்பிலை - சிறிது
உப்பு - 2 தேக்கரண்டி
சமைத்த சாதம் - 1 ஆழாக்கு

*செய்முறை:*

வாணலியில் நெய் விட்டு உளுத்தம்பருப்பு, மிளகாய் வற்றல், தேங்காய்த் துருவல் ஆகியவற்றைப் பொன்னிறமாக வறுத்து எடுத்து, அம்மியில் வைத்துப் பொடியாக அரைத்துக் கொள்ளவும்.

அகலமான பாத்திரத்தில் சமைத்த சாதத்தைக் கொட்டி ஆற வைத்து உப்பைப் பொடி செய்து போட்டுக் கலந்து கொள்ளவும். பின்பு கடுகு தாளித்துக் கொட்டி, கறிவேப்பிலை போட்டு அரைத்து வைத்துள்ள பொடியைத் தூவி எல்லா வற்றையும் பிசையவும். தேவைக் கேற்ப நெய் அல்லது எண்ணெய் சேர்த்துக் கொள்ளவும். சிலர் விருப்பத்திற்கேற்றாற் போல் முந்திரிப்பருப்பு சேர்த்துக் கொள்ளலாம்.


பரிசுக் கூப்பன் மகளிர் மட்டும் இல 11

மகளிர் மட்டும் —பரிசுப் போட்டி—

முதல் அதிஷ்டசாலிக்கு தங்க நகை

- முரசு 90 முதல் தொடர்ந்து 25 வாரங்கள் பரிசுக்கூப்பன்கள் வெளியாகும்.
- 25 கூப்பன்களையும் பத்திரமாகச் சேகரித்துக்கொள்ளுங்கள்.
- 25 கூப்பன்களும் வெளியான பின்னர் நாம் அனுப்பச் சொல்லும்போது நீங்கள் கூப்பன்களை அனுப்பி வைக்கலாம்.
- முதல் அதிஷ்டசாலிக்கு தங்கநகை பரிசு காத்திருக்கிறது.
- 25 அதிஷ்டசாலிகளுக்கு அசத்தலான பரிசில்கள் காத்திருக்கின்றன.

பரிசில்களை வெல்ல தயாராகுங்கள்.



# தேன் கிண்ணம்





## எம் தேசமிது

காலைப்பொழுதுகளும்
கறுத்துப் போனதாகவே
விழித்துக் கொள்ளும்
தேசமிது.
•
தேசத்தின்தேகமெல்லாம்
இப்போது
இரத்தத்தின் தேமல்.
•
யுத்தம் இங்கேயே
இருந்து கொள்வதாக
அடம் பிடிக்கிறது.
•
சத்தம் செய்ய முன்னரே
சமாதானம் வேண்டும்
வெள்ளைப் புறாக்கள்
வேட்டையாடப்படும்
விந்தை
இங்கே விசித்திரமல்ல.
•
மண்ணின் புழுதிகளைவிட
இங்கு–
மனிதப் புழுதிகளே
அதிகம்.
தேசத்தின் போக்கை
இப்படியே விட்டால்
அகாலமாய்
இறப்பவர்களால்
ஒரு–
இமயமலையையே
இங்கே உருவாக்க
முடியும்!
•

கலை மகள் ஹிதாயா றிஸ்வி.

## நெருப்பணைக்க வா!


ஊனுருகிப் போகுதடி
உள்ளமெலாம் நையுதடி
தேனேயுன் நினைவாலென்
தேகமெலாம் தேயுதடி
வானூரும் வண்ணநிலா
வாட்டுதடி தீயெனவே
மானே வந்தணைத்து
வாடல்நிலை தீராயோ!
OO
தெருவில் நடக்கையிலும்
தேர்போல அசைந்து வரும்,
உருவில் எழிலுடைய
ஒய்யார மெல்லிடையர்
அருகில் நெருங்குகையில்
அளிக்கின்ற புன்னகையில்
பருவம் தடுமாறும்
பதைப்புவரும் உன்நினைவில்!
OO
தளுக்கு நடைமாதர்
தரிசாக உடலெழிலை
எழுச்சிமிகு விதமாக
எடுப்பாகக் காட்டிவர,
இழுக்கும் மனக்குரங்கு
இச்சைகளைத் தூண்டிவிடும்
வழுக்கும் மனத்துக்கோர்
வடிகாலாய் வந்தணைப்பாய்!
OO
எத்தனையோ திருமுனிவர்
இந்திரனும் வேறுபல,
சத்தியத்தின் ஆளரெலாம்
சறுக்கி விழுந்தகதை.
புத்தகத்தில் நான் படித்தேன்
புத்திதடு மாறுதடி
சித்தம் குழம்புமுன்னர்
செவ்விதழால் முத்தமிடு!
OO
காதல் பெருக்கெடுக்கும்
கனிவான மனமுடையோன்,
மாதேயுன் நினைவுகளை
மனதில் முழுமையுடன்
சாதல் வரைக்குமென்று
சத்தியமாய் வைத்துவிட்டேன்
காதல் நெருப்பணைக்க
கண்ணே நீ வாராயோ?

அ.கௌரிதாசன்
ஆலங்கேணிகிழக்கு.

## இளைஞனே..!

இளைஞனே
வா.....
ஈரத்துணிகளை
வயிற்றில்
கட்டிக்கொள்வோம்!
••
பனித்துளிகளைப்
பிளந்து புது
இல்லறம் அமைப்போம்!
••
நட்சத்திரத்தில்
நடந்து
ஆசைகளை
அலங்கரிப்போம்!
••
வானவில்லை
வளைத்து
ரகசியப்
பந்தல் அமைப்போம்!
••
காற்றைக்
கட்டிப்போட்டு
காதல் வலை
விரிப்போம்!
••
விலகிச்செல்லும்
நிழலைப் பிடித்து
ஆடை கட்டுவோம்!
••
வளைந்த
மேகத்தை
மெத்தையாக்குவோம்!
••
உருண்ட
பூக்களை
தலையணையாக்குவோம்!
••
வட்டமான
நிலவுக்குள்
கா(த)ல் பதிப்போம்!

ஷஹிர்ஷா தாஸிம
தர்காநகர்.



## அழுது தீர்த்த சமாதானம்!

முந்த நாள் சாமத்தில்
ஒரு முழுமை பெறாத
கனவுகளின் இடுக்கில்
அது கால் போட்டிருந்தது.
**
அன்றைய உயிர் உசும்புதலில்
புத்தம் புதிதாய்
சிறகுகள் முளைத்தன.
சமாதானக் குருவி விசிறிப் பார்த்தது.
**
முன்பு சில கணிப்பீட்டின்
பிசகினால்;
இறந்து போனதாய் வருந்தியது.
**
கரிசனமாய் அதன் மன அடக்கம்
ஒடுக்கப்பட்டதாய் அழுதது.
**
அராஜகங்களின்
அசுர வளர்ச்சியில்
மனம் குன்றியதால்
நாக்குழறியது.
**
இப்போதைய சிறகினை
அடித்துப் பார்த்தது.
இலேசான கடைவாய் புன்னகை,
நான் பறந்து விடலாம்,
எனக்கு விடுதலையும் தரலாம்,
எதிர்பார்ப்பின் 'குஷி'யிலும்
அதன், நாக் குழறி
அழப்பார்த்தது.

ஒட்டமாவடி அறபாத்

## வீதி மலர்களின் விண்ணப்பம்



ஆவியை கேட்கும்
சீவிய பிரச்சனையில்
சோறு எமக்கு
சொப்பன கீதமென்றாலும்
வாய்க்குப் பூட்டுப்போட
வழி தெரியாததால்
வெற்றுப் பாத்திரமேந்தி
வீதிவலம் வருகிறோம்!
▫▫
புட்டியில் அடைபட்ட
பூதமாய்
உணர்வுகளை அடக்கிவிட்டு
உணவுக்காய் அலைகிறோம்!
நாங்கள்
▫▫
இலக்கணத்தைத் தேடவில்லை
இங்கிதத்தைத் தேடுகிறோம்!
சாலைகளை அழகுபடுத்துங்கள்!
அதற்காக
சாக்கடைகளை
அலட்சியம் செய்யாதீர்கள்!
'எண், எழுத்து
படிக்காததால்
எண் சாண் வயிற்றுக்கு
யாசகமே அரிச்சுவடி!
▫▫
மண்ணால் மாளிகை
விண்ணுயர கட்டுவீர்களாமே!
இந்த தரித்திரங்களை
சரித்திரம் ஆக்குங்களேன்!

தில்லையடிச் செல்வன்

## என் கனவுப் பூவே!



என்
கனவுப் பூவே!
உன்
கன்னங்கள்
என்ன
அவுஸ்திரேலிய
அப்பிள்களின்
விற்பனையை
விரைவாக்கும்
விளம்பரப்
பலகைகளா!
உச்சிவான் மீது
உறங்கிக் கிடக்கும்
உடுக்கள்
ஓடிவந்து
உந்தன்
உதடுகளின்
உள்ளாக
உட்கார்ந்து கொண்டு
வெண்பற்களென்று
வேறுபெயர்
கொண்டனவோ!
▫▫
அந்த இரட்டை முயல்களை
விரட்டி
விடாமல்
முந்தானையால் ஏன்
மூடி வைத்திருக்கின்றாய்?
அவை
மூர்ச்சித் தல்லவா
மூச்சை விடப்
பார்க்கின்றன!
▫▫
உன்
விழிகளில் சொல்லும்
விடுகதைகளை
விடுவிக்கத் தெரியாமல்
வியர்த்து வழிந்து
வெட்கித்து
நிற்கின்றேன்!
அவற்றின்
விடைகளைக்
கொஞ்சம்
விளங்கப் படுத்து!
▫▫
என் நந்தவனத்துச்
சந்தனத் தேரே!
கனவுகளிலாவதுன்
கரம் தொட்டுக்
களிப்புறலாம்
என்றால்...
உன்
நினைவுகள்
நிறைந்ததனால்
நித்திரைகூட
நெருங்க
மறுக்கின்றதே!
▫▫
இறுதியாய்
உன்னிடம்
வினயமாய்
ஒரு
விண்ணப்பம்!
உன்
நெஞ்ச
வாசலில்
நட்டு வைத்திருக்கும்
நச்சு முட்களை
நறுக்கி
எறிந்து விடு!


ஏறாவூர் என்-றிபாய்தீன்.

## வந்து விடு

நீல விழிகளுக்குள்
பிர பஞ்ச
தூரத்தையே
சிறைப்படுத்தியிருக்கும்
என்
பிரிய சகியே...!
❣❣
வா....
கண்மணி
உன் வரவுகளை
எதிர் பார்த்து
இந்த் இதயத்தின்
வார்த்தைகள்
விழிபிதுங்கிக்
காத்திருக்கின்றன.
❣❣
ஆயிரமாயிரம்
ஏக்கச் சுமைகளை
சுமந்து
அவசரப்பட்டுக்
கொண்டிருக்கின்றது
இந்த மனம்
வந்து.. ஆறுதல் படுத்தி விடு.
❣❣
கனவுகளில் வந்து
தொட்டுக் கொள்வதால்
ரணங்கள் கூட
மறைந்து போவதாக
மனச் சாட்சி
என்னை
மகிழ்ச்சிப் படுத்துகின்றது!
❣❣
தாமதமாகும்
ஒவ்வொரு
வினாடிகளிலும்
இதயம்
ஓராயிரம்
ரணங்களையும்
ஓட்சிஷனுடன் சேர்த்து
ஒட்டு மொத்தமாக
ஏற்றுக் கொள்கின்றது!
❣❣

விவே. வசந்தகுமார், கோமாரியூர்.

## கடி த்தரித்த ஜோக்ஸ்



**ஒரு வர்:-** ரெண்டுநாளா கண் சரியாவே தெரியலை. எதைப் பார்த்தாலும் மங்கலாத் தெரியுது...!
**மற்றவர்:-** டாக்டரைப் போய்ப்பார்.
**ஒரு வர்:-** பார்த்தேனே... அவரும் மங்கலாத்தான் தெரிஞ்சார்.

▫▫

**இளைஞர்:-** சேர் காதலிக்கிறது தப்பா?
**ஒரு வர்:-** இல்லை... தப்பே இல்லை. காதலித்தால் மட்டும் போதாது கல்யாணமும் செய்து கொள்ள வேண்டும்.

▫▫

**அவர்:-** பட்டி மன்றத்திலே ஒரு டாக்டர் பேசினாரே, கேட்டீங்களா?
**இவர்:-** ஆமா! சும்மா சொல்லக் கூடாது கொன்னுட்டார்.

**திரு டன் 1:-** கரும்பு வியாபாரி வீட்டில திருடப் போய் மாட்டிக்கிட்டாயாமே அப்புறம் என்னாச்சு?
**திரு டன் 2:-** 'சக்கையா' பிழிஞ்சுட்டாங்க.

▫▫

**ஒரு வன்:-** ஆயிரம் பொய் சொல்லி ஒரு கல்யாணம் பண்ணலாம்ண்ணு செல்வாங்க. நீ ஒரு பொய் சொல்லி கல்யாணம் பண்ணிக் கிட்டாயாமே அப்படி என்ன பொய் அது?
**மற்றவன்:-** எனக்கு இன்னும் கல்யாணம் ஆகலைண்ணுதான்.

▫▫

**தோழி:-** உன் கல்யாணத்திற்கு இவ்வளவு பேர் வருவாங்கண்ணு நான் எதிர்பார்க்கலை. என்ன கூட்டம்....?
**நடிகை:-** இதென்ன பிரமாதம்? போன தடவை என் கல்யாணத்திற்கு இதை விட அதிகம் பேர் வந்தாங்க.

▫▫

**காதலன்:-** உன் எதிர்காலத்தைப் பற்றித்தான் கவலை.
**காதலி:-** அப்படி என்ன கவலை?
**காதலன்:-** உனக்கு வரப் போறவன் நல்ல கணவனா அமையணு மேன்னுதான்.

▫▫

**நிரு பர்:-** நீங்கள் ஓட்டப் பந்தயத்தில் வெற்றி பெற்றதன் இரகசியம்
**வீரர்:-** தினமும் பஸ்சைப் பிடிக்க ஓடிய ஓட்டத்தின் பயன்தான்.

▫▫

**மனைவி:-** ஏங்க..... நகை இருந்த பெட்டியைத் தூக்கிக் கொண்டு ஓடுறான் பிடிங்க!
**கணவர்:-** பயப்படாதே, பெட்டிச் சாவி என்னிடம் இருக்கு.

# இந்த வாரம் உங்கள் பலன்

(07.05.95 முதல் 13.05.95 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

## நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மேடம் | - சூரியன், சுக்கிரன்,கேது |
| இடபம் | - புதன் |
| கர்க்கடகம் | - செவ்வாய் |
| துலாம் | - இராகு |
| விருட்சிகம் | - வியாழன் |
| கும்பம் | - சனி |

சந்திரன்-கர்க்கடகம், சிம்மம், கன்னி ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார்.

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் கஷ்டம், மனப்பயம். | பி.ப 3 மணி |
| திங்கள்- | முயற்சிகளில் வெற்றி, உயர்ந்த நிலை. | காலை 7 மணி |
| செவ்வாய்- | அந்நியர் உதவி, பொருள்விரயம். | பகல் 12 மணி |
| புதன்- | பயனற்ற செயல், மனக்கவலை. | காலை 7 மணி |
| வியாழன்- | உயர்ந்த நிலை , முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| வெள்ளி- | வெளியிட வாழ்க்கை, மனக்கவலை. | பி.ப 2 மணி |
| சனி- | துயர் நீங்கும், உயர்ந்த நட்பு. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, காரியசித்தி: | காலை 6 மணி |
| திங்கள்- | மனமகிழ்ச்சி, வெளியிட வாழ்க்கை. | காலை 7 மணி |
| செவ்வாய்- | துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| புதன்- | அந்நியர் நட்பு, தொழில் சிறப்பு. | காலை 8 மணி |
| வியாழன்- | பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வெள்ளி- | எதிர்பார்த்த கருமம் வெற்றி, மனப்பூரிப்பு. | பகல் 11 மணி |
| சனி- | பிரயாணம், செலவு மிகுதி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | வீண் குறைகேட்டல், கௌரவக் குறைவு. | பகல் 12 மணி |
| திங்கள்- | பொருள் வரவு, செய்தொழில் விருத்தி. | காலை 9 மணி |
| செவ்வாய்- | வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நட்பு. | பகல் 12 மணி |
| புதன்- | பொருள் இழப்பு, மனக்கவலை. | காலை 9 மணி |
| வியாழன்- | வீண்முயற்சி, காரியத்தடை. | பகல் 12 மணி |
| வெள்ளி- | பிரயாணக் கஷ்டம், மனப் போராட்டம். | காலை 7 மணி |
| சனி- | துயர் அதிகம், தேகசுகம் பாதிப்பு. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| திங்கள்- | புதிய முயற்சி, முன்னேற்றம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | வெளியிடப் பயணம், கௌரவம். | காலை 8 மணி |
| புதன்- | பெரியோர் நட்பு, முதலீட்டு இலாபம். | காலை 8 மணி |
| வியாழன்- | காரியானுகூலம், பணவரவு. | பகல் 12 மணி |
| வெள்ளி- | அந்நியர் நட்பு, மனக்கலக்கம். | காலை 7 மணி |
| சனி- | வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-3

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் விரயம், மனக்கவலை. | காலை 7 மணி |
| திங்கள்- | அந்நியர் நட்பு, முயற்சி பலிதம். | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- | தொழில். சிறப்பு, பொருள்மேன்மை. | காலை 9 மணி |
| புதன்- | பயனற்ற செயல், கௌரவக் குறைவு. | பகல் 11 மணி |
| வியாழன்- | தொழில் மந்தம், பணக்கஷ்டம். | காலை 6 மணி |
| வெள்ளி- | காரிய சித்தி, பணவரவு. | பகல் 11 மணி |
| சனி- | தொழில் நிலை முன்னேற்றம், உயர்ந்தநிலை. | காலை 11 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-3

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, கௌரவம். | காலை 8 மணி |
| திங்கள்- | முயற்சி பலிதம், வெளியிட வாழ்க்கை. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | பகல் 11 மணி |
| புதன்- | மனக்கலக்கம், செலவு மிகுதி. | காலை 9 மணி |
| வியாழன்- | பணக்கஷ்டம், மனப் போராட்டம். | பகல் 12 மணி |
| வெள்ளி- | துயர் நீங்கும், முயற்சிகளில் வெற்றி. | காலை 6 மணி |
| சனி- | அந்நியர் உதவி, கௌரவம். | மு.ப. 10 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 7

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் பேறு, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| திங்கள்- | தூர இடப்பயணம், செலவு மிகுதி. | மு.ப 9 மணி |
| செவ்வாய்- | முன்னேற்றம், பணவரவு. | பி.ப. 2 மணி |
| புதன்- | வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நட்பு. | காலை 7 மணி |
| வியாழன்- | புதிய முயற்சி, பொருள் மேன்மை. | பகல் 12 மணி |
| வெள்ளி- | கௌரவக் குறைவு, மனக்கவலை. | பகல் 11 மணி |
| சனி- | பயனற்ற செயல், செலவு மிகுதி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம் -7

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, செய்தொழில் விருத்தி. | பகல் 12 மணி |
| திங்கள்- | மனக்குழப்பம், காரியத்தடை. | காலை 7 மணி |
| செவ்வாய்- | புதிய முயற்சி, மனக்கிலேசம். | மு.ப. 10 மணி |
| புதன்- | வீண் செலவு, பணக்கஷ்டம். | காலை 8 மணி |
| வியாழன்- | துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| வெள்ளி- | மறைமுக எதிர்ப்பு, இனசனவிரோதம். | காலை 7 மணி |
| சனி- | ஆடம்பரச் செலவு, மனமகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-9

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | புதிய முயற்சி, செலவு மிகுதி. | காலை 6 மணி |
| திங்கள்- | வீண் கவலை, பணவரவு தடை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | பெரியோர் பகை, கௌரவக் குறைவு. | காலை 6 மணி |
| புதன்- | தொழில் சிறப்பு, உயர்ந்த எண்ணம். | பகல் 11 மணி |
| வியாழன்- | கடன் படல், மனக் கவலை. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | பிரயாணக் கஷ்டம், தேகசுகம் பாதிப்பு. | காலை 6 மணி |
| சனி- | அந்நியர் நட்பு, உயர்ந்த நோக்கம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம் -4

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு,மனக்கவலை நீங்கும். | காலை 6 மணி |
| திங்கள்- | வெளியிடப் பயணம், உயர்ந்த நிலை. | பகல் 11 மணி |
| செவ்வாய்- | முன்னேற்றம், மனக்கவலை நீங்கும். | காலை 7 மணி |
| புதன்- | வீண்மனஸ்தாபம், பணச் செலவு. | பகல் 12 மணி |
| வியாழன்- | அந்நியர் நட்பு, மனக்கவலை நீங்கும். | காலை 9 மணி |
| வெள்ளி- | பெரியோர் உதவி, மனப் பூரிப்பு. | பகல் 12 மணி |
| சனி- | தொழில் மந்தம், இனசன விரோதம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-1

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | செய்தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| திங்கள்- | உயர்ந்த நட்பு, மனக்குறை நீங்கும். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- | பயனற்ற செயல், கௌரவக் குறைவு. | காலை 7 மணி |
| புதன்- | பெரியோர் நட்பு, பணச் செலவு. | பகல் 12 மணி |
| வியாழன்- | தெய்வானுகூலம், மனக்குழப்பம். | காலை 8 மணி |
| வெள்ளி- | வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| சனி- | புதிய முயற்சி, பணக்கஷ்டம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 6


### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் பலிதம்,மனமகிழ்ச்சி, | காலை 7 மணி |
| திங்கள்- | பெரியோர் நட்பு, கௌரவம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | அந்நியர் பகை, செலவு மிகுதி. | காலை 9 மணி |
| புதன்- | பணக்கஷ்டம், வீண் மனக்கிலேசம். | பி.ப. 1 மணி |
| வியாழன்- | மனக்குழப்பம், புதிய முயற்சி. | காலை 11 மணி |
| வெள்ளி- | வெளியிட வாழ்க்கை, கௌரவம். | பகல் 12 மணி |
| சனி- | பயனற்ற செயல், உயர்ந்த எண்ணம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-1





## சமத்துவமாக வாழ்ந்திடுவோம்

அல்லும், பகலும் நாம் படிப்போம்
அறிவு நலத்தை நாம் பெறுவோம்
கல்வி ஔியை நாம் பெறுவோம்
கடவுளை வணங்கி வாழ்ந்திடுவோம்

பாடசாலை சென்றிடுவோம்
பாடம் கற்று வென்றிடுவோம்

குருவை தெய்வம் என மதிப்போம்
குணத்தால் நாமே உயர்ந்திடுவோம்

ஒழுக்கம் எமது உயிர் என்போம்
உண்மை, நேர்மை கண் என்போம்
சாதி பேதம் அகற்றிடுவோம்
சமத்துவமாக வாழ்ந்திடுவோம்.

**அம்பிளாந்துறை-அரியரன்**

அறிவை வளர்த்திட வேண்டும்-மக்கள்
அத்தனை பேருக்கும் ஒன்றாய்;
சிறியாரை மேம்படச் செய்தால்-பின்பு
தெய்வம் எல்லோரையும் வாழ்த்தும்.
-சுப்பிரமணிய பாரதியார்.

# யாருக்குச் சொந்தம்?

### பாப்பா முரசு சிறு கதை

தர்மபுரி என்ற நாட்டை விக்கிரமசிம்மன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவன் ஒரு கொடுங்கோல் மன்னன். அவன் மனைவி ராஜவல்லியும் மிகவும் ஆணவம் படைத்தவள். இருவரும் தங்கள் செல்வச் செருக்கினாலும், அதிகார மமதையாலும், அறநெறியைத் தூக்கி எறிந்து விட்டு குடிமக்களைப் பல விதங்களிலும் கொடுமைப்படுத்தி வந்தனர்.

ஒரு சமயம் தர்மபுரிக்கு துறவி ஒருவர் வந்தார். அவர் கல்வி அறிவில் சிறந்து விளங்கிய ஞானி. அவருக்கு, அந்நாடு ஒரு கொடுங்கோல் மன்னனின் கையில் சிக்கித் தவிக்கிறது என்ற விஷயம் தெரியவந்தது. அவர்கள் குடிமக்களுக்கு என்னென்ன கொடுமைகள் எல்லாம் செய்து வருகிறார்கள் என்பதையும் அறிந்து கொண்டனர்.

அந்தக் கொடுங்கோல் மன்னனுக்கும், ஆணவம் பிடித்த அரசிக்கும் எப்படியாவது அறிவு புகட்டி, அவர்களைத் திருத்த வேண்டும் என்று முடிவு செய்தார் துறவி. மறுநாளே அவர் விக்கிரமசிம்மனின் அரண்மனைக்குச் சென்றார்.

அவர் சென்ற சமயம் அரசனும், அரசியும் அந்தப்புரத்தில் இருந்தார்கள். அது அறிந்து கொண்ட துறவி, அரண்மனைப் பிரதானிகள் பலரும் நடமாடும் இடத்திற்கு வந்து, தனது தோளில் கிடந்த துணியை எடுத்துத் தரையில் விரித்துப் படுத்துக் கொண்டார்.

அப்பொழுது அந்தப் பக்கம் வந்த இரண்டு காவலாளிகள், ஒரு துறவி படுத்திருப்பதைப் பார்த்து திடுக்கிட்டார்கள். பிறகு வேகமாக அவரிடம் ஓடி வந்தார்கள்.

"ஐயா! துறவியாரே இது என்ன சத்திரம் என்றா நினைத்தீர், யார் வேண்டுமானாலும் படுத்துக்கொள்ள? இது அரண்மனை ஐயா! அரசர்க்கும், அரசிக்கும் சொந்தமான இடம். இந்த விஷயம் அவர்களுக்குத் தெரிந்தால் உங்களுக்கு ஏதேனும் கஷ்டம் நிகழலாம். தயவுசெய்து இந்த இடத்தை விட்டு உடனே புறப்படுங்கள்" என்று சொன்னான் ஒரு வீரன்.

"வீரர்களே! இது அரண்மனை என்று, நீர் சொல்லி விட்டால் நான் நம்பி விட வேண்டுமா? இது சத்திரமப்பா. நன்றாகப் பாருங்கள். அங்கு எத்தனைபேர் நடமாடிக்கொண்டிருக்கிறார்கள். நீண்ட தொலைவு நடந்து வந்த களைப்பு நீங்க இந்தச் சத்திரத்தில் வந்து படுத்தால், வீணாக வந்து தொந்தரவு செய்கிறீர்களே? போங்களப்பா அந்தப் பக்கம்!" என்று சொன்ன துறவி, வீரர்களைச் சிறிதும் பொருட்படுத்தாது மறுபடியும் படுத்துக் கொண்டார்.

அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்த வீரர்கள், முடிவில் மன்னனிடம் தெரிவித்து விடுவதுதான் சிறந்தது என்று நினைத்து, ஒரு பணிப்பெண் மூலம் விஷயத்தைச் சொல்லி அனுப்பினார்கள்.

விஷயத்தைக் கேள்விப்பட்ட விக்கிரசிம்மனும், ராஜவல்லியும் கடும் கோபம் கொண்டனர்.

"என்ன திமிர் அந்தத் துறவிக்கு? துறவி என்றால் எங்கும் எதுவேண்டுமானாலும் செய்யலாமா? செய்தால் விட்டு விடுவார்களா? வாருங்கள் அவருக்கு நாம் யார் என்பதைக் காட்டுவோம்!" என்று முழங்கிய ராஜவல்லி முன்னே போக விக்கிரமசிம்மன் பின்னே ஓடினான்.



இருவரும் துறவி படுத்துக் கிடந்த இடத்திற்கு வந்தார்கள். அரசி துறவியைத் தட்டி எழுப்பினாள்.

"ஐயா துறவியாரே! இது கண்டவரும் படுத்துறங்கும் சத்திரம் அல்ல. எங்களுக்குச் சொந்தமான அரண்மனை. இதே நேரம் உங்கள் இடத்தில் வேறொருவன் இருந்திருந்தால் அவனைச் சிரச்சேதம் செய்திருப்போம். உமது வயதிற்கு மரியாதை தருகிறோம். மரியாதையாக இந்த இடத்தை விட்டு உடனே சென்று விடுவது உமக்கு நல்லது" என்று முழங்கினாள் ராஜவல்லி.

துறவி, ராஜவல்லியைச் சாந்தமான கண்களால் பார்த்தார்.

"அரசியே! இந்த அரண்மனை யாருடையது என்று சொன்னீர்கள்?" என்று கேட்டார் துறவி.

"எங்களுடையது!" என்றாள் ராஜவல்லி.

"உங்களுடையது என்றால்..?" என்று திரும்பக் கேட்டார் துறவி.

"இந்த நாட்டிற்கே அரசியாகிய என் கணவருடையது" என்றாள் ராஜவல்லி.

"அப்படியா சரி! இந்த அரண்மனை இதற்கு முன் யாருக்குச் சொந்தமாக இருந்தது?" என்று மறுபடி கேட்டார் துறவி.

"அவரது தந்தைக்குச் சொந்தமாக இருந்தது" என்றாள் ராஜவல்லி.

"அப்படியா! அதற்கு முன்?" என்று கேட்டார் துறவி.

"பகையரசன் ஒருவனிடம் போரிட்டு வென்று அவருடைய தந்தை இதைக் கைப்பற்றியது" என்றாள் ராஜவல்லி.

"சரி!, அதற்கு முன் இது யாருக்குச் சொந்தமாக இருந்தது?" என்று விடாமல் கேட்டார் துறவி.

"பகையரசனின் தந்தைக்குச் சொந்தமாக இருந்தது?" என்றாள் ராஜவல்லி.

"சரி உங்கள் கணவருக்குப் பின் இந்த அரண்மனை யாருக்குச் சொந்தமாகும்?" என்று கேட்டார் துறவி.

"எங்கள் மகனுக்கு" என்றாள் ராஜவல்லி.

"சரி! அதற்குப் பின்னால்?" என்று இழுத்தார் துறவி.

"எங்கள் மகனின் மகனிற்கு. அதாவது எங்கள் பேரனிற்கு." என்றாள் ராஜவல்லி.

"அரசியே! நீங்கள் இதுவரை சொன்னதை இன்னொருமுறை ஞாபகப் படுத்திப் பாருங்கள். இந்த அரண்மனை பல பேருக்கு உரிமையுடையதாக இதுவரை இருந்து வந்திருக் கிறது. இனிமேலும் இருக்கப்போகிறது என்கிற விஷயத்தைச் சொல்லி விட்டீர்கள். இப்படி வழி வழியாகப் பலருக்கும் சொந்தமாகி வரும் இந்த இடத்தைச் சத்திரம் என்றுதான் எனக்குச் சொல்லத் தோன்றுகிறது. இதை உங்களுக்கு சொந்தமான அரண்மனை என்று என்னால் ஒருபோதும் கூற முடியாது!" என்றார் துறவி.


இதனைக்கேட்ட விக்கிரமசிம்மனும், ராஜவல்லியும் திடுக்கிட்டார்கள். அவர்களின் ஆணவம் அந்த இடத்திலேயே அகன்று அறிவுக்கண் திறந்தது.

'ச்சே! அழியக்கூடியதும், கைமாறக் கூடியதும், நிலையில்லாததுமான இந்தச் சுகபோகங்களுக்காகவா குடி மக்களைக் கொடுமைப்படுத்தியும் ஆணவம் கொண்டும் வாழ்ந்தோம்' என்று நினைத்து வெட்கப் பட்டனர்.

இருவரும் தங்களை மன்னிக்கும்படி துறவியின் கால்களில் விழுந்து வணங்கினார்கள்.

அன்று தொடக்கம் நீதி, நெறி தவறாமல், குடி மக்களிடம் அன்பு செலுத்தி நாட்டை ஆள ஆரம்பித்தான் விக்கிரமசிம்மன்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வாணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 13.05.1995.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 89
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 86

**பரிசுக்குரியவர்**
ஒலிவியா நிர்மலி சொலமன்.
நல்லாயன் மகளிர் கல்லூரி நு வரெலியா.

**பாராட்டுக்குரியவர்கள்**

எச்.எம். பைரூஸ்
டின்ஸ்றோட், காத்தான்குடி 06.

செல்வி. எல். வசந்தமலர்,
மா/ பலாபத்வெல. தமிழ் வித். பலாபத்வெல, மாத்தளை.


இ. திவாகரன்
மந்தண்டாவளை இந்து கல்லூரி, மாத்தளை.

செல்வி. பாத்திமா
கஹிரியா மகளீர் வித்தியாலயம்.

செல்வி. இ. இலங்கேஸ்வரி
மட்/கன்னன்குடா ம.வி. மட்டக்களப்பு

அ. முஹம்மத் அஸாம்
சாஹிரா தேசிய கல்லூரி, புத்தளம்.

## செய்து பாருங்கள் பூமரெங்



அவுஸ்திரேலிய பழங்குடி மக்கள் உபயோகிக்கும் ஆயுதம் 'பூமரெங்'. இது எப்படி செயற்படும் தெரியுமா? அவர்கள் இதை ஒரு பொருளுக்குக் குறிபார்த்து வீசுவார்கள். குறிபார்த்து வீசப்படும் பொருளை இது தாக்கும். அப்படி தாக்காவிட்டால் போன வேகத்திலேயே வீசியவர்களிடம் வந்து விடும்.

இது போன்ற 'பூமரெங்'கை நாம் இப்போது செய்து பார்க்கலாம். ஒரு கார்ட் போர்ட் அட்டையை எடுத்து அதை 5 சென்ரி மீற்றர் நீளம், 1 சென்ரி மீற்றர் அகலத்துடன் படத்தில் காட்டியுள்ளபடி 'V' வடிவில் வெட்டிக்கொள்ள வேண்டும். பின்னர் அதை சீப்பின் பல்லிடுக்கில் வைத்து விரலால் சுண்டி விட்டால் அது சிறிது தூரம் பறந்து சென்று எந்தப் பொருள் மீதும் இடிக்காவிட்டால் அப்படியே திரும்பி நம் காலடியில் வந்து விழும்.


அனுப்பியது-எஸ். தூயவன்.

பாப்பா முரசுக்கு உங்கள் ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்ப வேண்டிய முகவரி:

பாப்பா முரசு
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

## வாரம் ஒரு நாடு

### பொட்ஸ்வானா



**அமைவிடம்:** தென்மத்திய ஆபிரிக்காவிலுள்ள அடர்ந்த வனமும் மலைகளும் சூழ்ந்த இந்நாடு, ஸம்பியா, ஸிம்பாப்வே, தென்னாபிரிக்கா, நமீபியா ஆகிய நாடுகளால் சூழப்பட்டுள்ளது.

**ஆட்சிமுறை:** பெகவானாலாண்ட் என்று முன்னர் அழைக்கப்பட்ட இந்நாடு ஐரோப்பிய நாடுகளின் அடிமை நாடாக இருந்து 1966 செப்டெம்பரில் சுதந்திரம் பெற்றது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட குடியரசுத்தலைவரின் கீழ் இயங்கும் ஜனநாயக ஆட்சி முறை கொண்ட நாடு.

**பரப்பளவு:** 583,000 சதுர கி.மீ (220,000 சதுர மைல்)

**மக்கள் தொகை:** 1,220,000 பேர்.

**தலைநகரம்:** காபரோன் (56,700 பேர்)

**பேசும்மொழி:** ஆங்கிலம் செற்ஸ்வானா மற்றும் கறுப்பு இனங்களின் பல்வேறு மொழிகள்.

**மதம்:** கிறிஸ்தவம் மற்றும் பல்வேறு இனங்களின் பூர்வீக வழிபாட்டு முறைகள்.

**பொருளாதார வளம்:** அடர்ந்த காடுகளையும் பசும் புற்தரைகளையும் கொண்ட இந்நாடு செழிப்பான பூமி; நீர்வளமுமுண்டு. பெருமளவில் கால் நடை வளர்ப்பு இருப்பதனால் மாட்டிறைச்சியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் அந்நியச் செலாவணி கிடைக்கிறது. இரத்தினக்கற்கள், மாங்கனீஸ், செம்பு, நிலக்கரி, நிக்கல் ஆகிய கனிப்பொருட்கள் கிடைக்கின்றன. கடற்கரையே இல்லாத நாடு. நன்னீர் நிலைகள் அதிகமுண்டு.

**பார்க்கவேண்டியவை:** மலைவளமும் வனவளமும் வனப்புமிக்க பசுஞ் சோலைகளை ஏற்படுத்தி இயற்கை எழில் சூழ்ந்துள்ளது. வன விலங்குகளுக்கான சரணாலயங்களும் தேசிய வனங்களும் பல இந்நாட்டில் உள்ளன. இந்தப் பிரதேசங்களில் இயற்கைச் சூழ்நிலையில் வன விலங்குகளின் நடமாட்டங்களைக் கண்டு களிக்க வரும் உல்லாசப் பயணிகள் இவ்வனங் களில் பல நாட்கள் தங்கியிருப்பதற்கான வீடுகளும் தங்குமிடங்களும் முகாம்களும் ஏராளமாக அமைக்கப் பட்டுள்ளன. பொட்ஸ்வானாவில் வன வாழ்க்கையை அனுபவிப்பதுதான் அங்கு செல்லும் பயணிகளின் பேரவாவாகும்.



## வச்ச குறி தப்பாது

அமெரிக்காவில் 'ஸ்கங்க்' என்ற ஒருவகை அணில் போன்ற பிராணி உள்ளது. இது ஆபத்து சமயத்தில் எதிரிகளை நோக்கி ஒரு பிசுபிசுப்பான திரவத்தைப் பாய்ச்சும். இதன் வாலின் அடிப்பகுதியில் இந்தத் திரவம் சுரக்கும் சுரப்பிகள் உள்ளன. இதனால் உடலில் காயமோ, விஷத் தன்மையோ ஏற்படாது. ஆனால் இந்த திரவம் துர் நாற்றம் வீசும். பல நாட்களுக்குப் போகாது. இதனால் பல மிருகங்கள் இந்த ஸ்கங்கைக் கண்டால் அஞ்சி ஓடிவிடும்.

துணிகளில் இந்தத் திரவம் பட்டு விட்டால் துணிகளை எரித்து விட வேண்டியதுதான். எவ்வளவு முறை தோய்த்தாலும் நாற்றம் போகாது. ஆபத்து சமயத்தில் 10-12 அடி தூரம் வரை இந்தத் திரவத்தைப் பாய்ச்சும். பெரும்பாலும் எதிரியின் கண்களைக் குறி பார்த்து இந்தத் திரவத்தைப் பாய்ச்சும் ஸ்கங்க்கின் குறி ஒருபோதும் தவறது.




# மகா சூலம்

பாச்சுவின் தொண்டை உலர்ந்து போயிருந்தது. அபயக் குரல் கொடுக்கக் கூட முடியவில்லை.

'காப்பாத்துங்க!' என்று கத்தத்தான் நினைத்தான். ஆனால் அது வெளியே கேட்கிற அளவுக்கு இல்லை.

அப்படியே அடங்கி விட்டது.

மங்கிய கண்கள் மலர மலரத் திறந்தான். அப்போதும் இமைகள் செருகிக் கொண்டன.

பார்வையில் தெரிந்தவள்-பத்ரா.

அவளது தோற்றமும் சிரிப்பும் பாச்சுவின் தைரியத்தையே முதலில் முடக்கிப் போட்டுவிட்டன.

அட்டகாசமாகச் சிரித்துக்கொண்டே இருந்தாள் அவள்.

அதைக் கேட்கக் கேட்க சுமதி மூலையில் அவளையுமறியாமல் ஒதுங்க ஆரம்பித்தாள்.

இருட்டைப் போர்த்துக் கொண்டு காணாமல் போனாள்.

தரையில் நின்றிருந்த பாச்சு தானாக மேலே போவதைப் போலுணர்ந்தான்.

நினைவுகள் அனைத்தும் மறந்து கொண்டிருந்தன.

மறந்து கொண்டிருந்த நினைவின் கடைசி உணர்வுதான் இப்போது அவன் பெறுகிற அனுபவம்.

கழுத்தில் இறுகிய நகங்கள் தான் அவனைத் தூக்கின.

ஒருதுளி முக்கலோ முனகலோ இல்லை.

பாச்சுவின் தலை கூரையில் இடிக்கப் பட்டதுமே மண்டை பிளந்து கொண்டது. மூளை சிதறியது!

அவ்வளவு தான் எல்லாமே முடிந்து விட்டன!

சுமதி கண்களையும்மூடிக் கொண்டாள்.

இதனால் எல்லாம் பத்ராவின் வெறி அடங்குவதாகத் தெரியவில்லை. அப்போதும் அவள் சிரித்துக்கொண்டேயிருந்தாள்.

திடீரென்று சிரிப்பு நின்றது.

கதவு தானாகவே திறந்தது. சற்று முன் பாச்சு சுமதிக்காக வீசியெறிந்த துண்டு பறந்து வந்தது.

பாச்சுவின் பிணத்தை அந்தத் துண்டு இறுக்கிச் சுற்றியது.

அடுத்த கணம்- அப்படியே ஒரு மூட்டையாய் அது அறையை விட்டு வெளியே பறந்து போயிற்று.

கண்ணிமைக்கும் நேரத்தில் அது காணாமல் மறைந்தது!

'பொதீர்!'- கோகுலின் அறைக்குள் இருந்து வெளியே வந்த நீலகண்டன் திருமேனி காலடியில் விழுந்தது மூட்டை!

இரத்தமும் சதையுமாய்.... நிணமும் நீருமாய்...!கூர்ந்து பார்த்தபிறகுதான் நீலகண்டனுக்கே விளக்கமாயிற்று!

பாச்சுவின் பிணம்பயந்து நடுங்கிப் போனார் பாலேக்கல் மாந்திரீகன். இது அவர் கூடச் செய்தறியாத சித்து! துன் மாந்திரீகத்தைத் தொட்ட இத்தனை காலமும் கற்றுக் கொள்ளாத வித்தை!

பாச்சுவின் உடம்பு ஒரு மாமிசப் பிண்டம் போல் வந்து விழுந்திருந்தது!

இல்லத்துக்குள் ஏதோ சீறி வந்ததையும் விழுந்ததையும் அங்கங்கே நின்று பார்த்தவர்கள் ஓடோடி வந்தார்கள்.

வேலைக்காரன் பாச்சுவின் பிரேதத்தைப் பார்த்தவர்கள் அத்தனை பேரும் ஸ்தம்பித்துப் போனார்கள்.

அக்கினி பர்வதத்துக்குப் புறப்பட வேண்டிய நேரம்....

வண்டி கொண்டுவரப் போனவன் பிணமாகி வந்து விழுந்து கிடக்கிறான்.

இப்படிச் செய்தது யார்?

பத்ராவை அப்போது நீலகண்டன் மறந்தே போய்விட்டார்.

பூதமாயிருந்து புகையாக வெளியேறியவள் இனி ஏழு நாட்களுக்கு இந்தப் பக்கமே வரமாட்டாள் என்கிற நம்பிக்கை!

அப்படியானால்- இது யார் வேலை?

இப்போதும் முதலில் கவனம் வந்தது பவத்ராதன் நம்பூதிரியைத்தான்!

தான் அக்கினி பர்வதம் புறப்படுகிற தகவலை எப்படியாவது அவன் தெரிந்து கொண்டிருக்கக் கூடும்! அதனால் தான் போகிற பயணத்தை முடக்க இப்படிச் செய்திருக்கிறான்.

இந்த இல்லத்தின் எல்லா நடவடிக்கைகளையும் மைவெற்றிலை போட்டு பவத்ராதன் பார்த்துக் கொண்டிருக்கலாம். இல்லாவிட்டால் இத்தனை அதிகாலையில் இப்படி ஒரு சகுனத்தைத் தன் முன்னால் கொண்டு வந்து தள்ளுவானா? அதுவும் தன்னோடு துணைவரவேண்டிய வேலைக்காரனை!

நற நற வென்று பற்களைக் கடித்தார் நீலகண்டன்.

இதற்கு நானும் பழிக்குப் பழி வாங்க வேண்டும்.! மனசுக்குள் வைராக்கியம் கூடியது.

உடனே பூஜை அறைக்குள் போய் அமர்ந்தார்.

குத்து விளக்கை எடுத்து வைத்து நெருப்பைக் கொளுத்தியதுமே அந்த விளக்கின் மீது தெரிந்தது சூலம்!

ஆனந்த குரு தெளிவாகச் சொல்லியிருந்தார்.

"இனியும் ஏழுநாளைக்குத்தான் நான் கொடுக்கிற இந்தச் சூலம்! வரும் பவுர்ணமிக்குள் அக்கினி பர்வதத்திலிருந்து மகாசூலத்தைக் கொண்டுவந்து ஆவாகிக்காவிட்டால்.... பத்ரா தனது புனர்ஜென்மத்தைத் தொடர ஆரம்பித்து விடுவாள்!"

ஏற்றிய தீபத்தை அப்படியே இழுத்தார்.

விருட்டென்று எழுந்தார்.

வேகமாகப் பூஜை அறையை விட்டு வெளியே வந்தார்.

"என்னப்பா?" என்றான் கோகுல்!

"இந்தப் பவுர்ணமி முடியறதுக்குள்ளே மகாசூலம் கைக்கு வரணும். இப்ப போய் அவனோட போராடினா.. நான் உன்னை இழந்துடுவேன் கோகுல்! பத்ரா ஆயிரம் ராட்ஸஸ்! அவளைச் சக்தியடைய விடக் கூடாது!"

"அப்படின்னா உங்க கூட நான் வரட்டுமா?"

"எங்கே?"

"அக்கினி பர்வதத்துக்கு!"

"ஒருத்தரும் வேண்டாம். நான் ஒருத்தன் போனாலே போதும்! நீ நான் வர்ர வரைக்கும் இல்லத்தைப் பத்திரமாப் பத்துக்க."

கோகுல் தலையை அசைத்தான்.

"இதப்பாரு! உன்னை வெளியே பார்த்தா... உடனே உனக்கு ஆபத்து வரலாம். அதுக்காகவே அந்தப் பிசாசு காத்திருக்கு, அவளைப் போலவே ஸ்ரீலதாவோட அப்பனும் காத்திருக்கான். இனியும் ஏழே ஏழு நாள். எங்கேயும் போகக் கூடாது. நான் திரும்பி வர்ர வரைக்கும் சுமதியைக் கூடத் தேடக் கூடாது! அவள் எங்கே இருக்காளோ... அங்கிருந்து பவுர்ணமி அன்னிக்குத் திரும்பிவருவா."

சொல்லி விட்டுப் போகும் போது நீலகண்டன் பூஜைக்குரிய பொருட்களை எல்லாம் வாங்கிச் சேமிக்கும் படி கோகுலிடம் உத்தரவிட்டுத்தான் போனார். நடையில் கிடந்த பிணத்தைப் பார்த்தார்: ".... இதை பாச்சு வீட்டிலே குடுத்துடு. எரிக்கிறதுக்கு என்ன செலவு ஆகுதோ அதையும் குடுத்துடு...."

"சரீப்பா."

"மறுபடியும் சொல்றேன்: நீ வெளியே எங்கேயும் போகக் கூடாது."

"போக மாட்டேப்பா."

நீலகண்டன் திருப்திப்பட்டார். பிறகு தான் பூ முகத்தை நோக்கிப் புறப்பட்டார். அப்போது-

மறுபடியும் அபசகுனம்:

முன் முற்றத்தில் பவத்ராதன் திருமேனியும் குஞ்சனும் வந்து கொண்டிருந்தார்கள்.

"சே!' முனகினார் நீலகண்டன். பவத்ராதன் அப்படியே நின்றார். அவர் முகத்தில் ஒரு மந்தகாசப் புன்னகை!

நீலகண்டனின் முகத்தில் மாறாத வெறுப்பு!

பவத்ராதன் வந்தது எதிரியைக் காண்பதற்காக அல்ல.

இப்போதும் நீலகண்டன் பவத்ராதனை எதிரியாக நினைத்துக் கொண்டிருந்தாலும்... பவத்ராதன் நீலகண்டனை ஒரு சக தொழிலாளி என்றுதான் நினைத்துக் கொண்டு இப்போதும் வந்திருந்தார். ஏற்கனவே ஒரு முறை வீடேறி வந்தவனை நீலகண்டன் அவமதித்ததைக் கூட மறந்து விட்டு நட்பு முறையில்!

ஆனால் நீலகண்டன்?

தன்னுடைய பரம வைரியாகவே அப்போதும் பவத்ராதனை நினைத்துக் கொண்டிருந்தார்.

இதுதான் இருவருக்கும் வித்தியாசம்.

"நீலகண்டா! உனக்கு ஏற்பட்டிருக்கிற கஷ்டங்கள் என் காதுக்கும் வந்தது. அதனாலே தான் என்னாலே ஆன ஏதாவது உதவி செய்யலாம்னு வந்திருக்கேன். இனியும் நீ என்மேல பகைமை பாராட்ட வேண்டிய அவசியமில்லே..."

> **வரும் வாரம் விடை தெரியும்**
>
> 'மகாசூலம்' தொடர் உங்களை வியக்க வைத்திருக்கிறதல்லவா. (வியர்க்கவும்தான்)
>
> இந்தக் கதையை எழுதும் அந்தக் கில்லாடி எழுத்தாளர் யார்?
>
> அறிய ஆவலா?
>
> வரும் வாரம் வரை பொறுங்கள்!

சொல்லிவிட்டுச் சிரித்தார் அவர்- நேசமாக.

ஆனால் நீலகண்டனுக்கு அந்தச் சிரிப்பு பரிகாசமாகத் தெரிந்தது. நேசம்-மோசமாகப் புரிந்தது.

"வீடு தீப்பிடிக்கறப்பத்தான் வாழை வெட்ட முடியும் பவத்ராதா! உனக்கு என்ன குடுக்கணும்னு எனக்குத் தெரியும். ஆனா அதைக் கொஞ்ச நாளைக்கு அப்புறம் குடுக்கலாம்னு இப்பதான் முடிவெடுத்தேன். பாலேக்கல் மனைக்கு மேலிடம் உதவியும் வேண்டாம்; அனுதாபமும் வேண்டாம். நீ உன் வேலையைப் பார்த்துட்டுப் போற வழியிலே போ! எதுக்கு இங்கே?"

விரட்டுகிற மாதிரித்தானிருந்தது இது.

பவத்ராதனின் முகம் சுண்டிற்று.

இப்போதும் தன்னை நீலகண்டன் சந்தேகிக்கிறானே! எப்படி இவனுக்குப் புரிய வைப்பது? - என்று நினைத்தார் அவர்.

'பவுர்ணமிக்கு முன் அக்கினி பர்வதத்துக்குப் போய்த் திரும்புவது முடியாத காரியம். தனக்கு அது தெரியும். அங்கே போய் விட்டு நாலாம் நாளே புறப்பட வேண்டும் என்றால் அக்கினி பர்வதத்துக்கு ஒரு குறுக்கு வழியிருக்கிறது. அதை விளக்கிச் சொல்லத்தான் வந்திருந்தார் பவத்ராதன் ஆனால் இப்படி ஒரு இக்கட்டான நேரத்தில் உதவக்கூட நீலகண்டன் ஒப்புக் கொள்ள மறுக்கிறானே.....! இவன் மனோபாவம்- இத்தனை இடைஞ்சல்கள் வந்தும் மாறவில்லையே!

வலிய வந்து உதவினால் இப்படித் தான்!

குஞ்சனுக்குத் திருமேனியைப் பார்க்கவே சங்கடமாக இருந்தது.

வரும் போதே சொன்னவன் குஞ்சன்: "வேண்டாம் திருமேனி! அந்த ஆளுக்கு உதவறதை விட வேற யாருக்காவது உதவலாம். வாயுக்குக் கை நம்பாத ஆள்!"

அப்போது பவத்ராதன் சொன்னார்: "நீலகண்டா! நீ செய்யப் போற விஷயம் சின்னதில்லே! குருஉபதேசம். அவர் கொடுத்த உத்தரவாலே தான் நானே இங்கே வந்தேன். அவர் சொன்னப்புறம் எதையும் யோசிக்கக் கூடாதுன்னு நான் நினைச்சேன். ஆனா நீ இப்பவும் யோசிக்கறே! இது இந்தப் புல்லரியும் குன்றுக்கு மட்டுமில்லே! உலகத்துக்கே முக்கியமான ஒரு விஷயம்! நீ பவுர்ணமிக்குள்ளே மகாசூலம் எடுத்துட்டு வரலேன்னா என்ன நடக்கும்னு நினைச்சுப்பாரு!"

"தேவையில்லே. எனக்கு நீங்கவந்து எந்த உதவியும் செய்ய அவசியமில்லே. உங்க ஓச்சாரம் தேவையில்லேன்னப்புறமும், நீங்க வீணா வந்து எதுக்கு மூக்கை நீட்டறீங்க? என் காரியத்தை நானே செய்யறது தான் எனக்குத் திருப்தி. என்னாலே செய்யவும் முடியும். இதுக்கு யார் உதவியும் தேவையில்லே. பாச்சு பாவம். அவனைத் தொலைச்சே! சரி... அதே மாதிரி என்னையும் உன்னாலே செய்ய முடிஞ்சாச் செய்துபார்! குரு சொல்லித் தான் நீ வந்திருந்தா குருவுக்கே போய் உதவி செய்யேய்யா- எனக்கு வேண்டாம்!"

முதலில் கொடுத்த மரியாதையும் பேச்சில் மெலிந்து போயிற்று.

நீலகண்டனின் சத்தம் தான் பெரிசாகக் கேட்டது.

இதைக் கேட்டதுமே கோகுல் இறங்கிக் கீழே வந்தான். அவனுக்கு விஷயம் புரிந்துவிட்டது.

ஸ்ரீலதாவின் தகப்பனார் நல்ல மனசோடு தான் உதவ முன் வந்திருக்கிறார். தன் தந்தை தான் அதை உதறுகிறார். இதைப் பற்றி விளக்கிச் சொல்ல வேண்டும் என்று நினைத்தான்.

ஆனால்- எவ்வளவு சொன்னாலும் ஏற்றுக்கொள்ளாதவர் என்று நீலகண்டனைப் பற்றி மகனுக்குத் தெரியாதா?

வாதமானாலும் ஏற்றுக் கொள்ள லாம்! இது பிடிவாதம்!

எனவே தான் கோகுல் வந்த மாதிரியே தயங்கித் தயங்கித் திரும்பியும் போனான்.

"போவாய்யா பவத்ராதா! சும்மா இங்கே வந்து ஏன் மூக்கறுபட்டுப் போறீரு! பாலேக்கல் மனையிலே மேலிடத்து மனைக்கு எந்தப் போக்குவரத்தும் கிடையாது! அதான் அன்னிக்கே சொல்லிட்டேனே! இப்பவும் எதுக்கு வந்து அவமானப் படறீரு? தேவைப் பட்டால் நான் உன் வீட்டுக்கு வருவேன்: போதுமா?"

முகத்தில் கை வைத்துத் தள்ளவில்லையே தவிர, வார்த்தைகளில் அந்த வேகம் இருந்தது.

வருத்தமும் கவலையுமாகத் திரும்பி நடந்தார் பவத்ராதன்.

அப்போதும் அவருக்குக் கோபமே வரவில்லை.

நீலகண்டன் மகாசூலம் எடுக்கப் போனால் அது குறிப்பிட்ட நேரத்துக்கு புல்லரியும் குன்றுக்கு வந்து சேரப் போவதில்லை என்பது பவத்ராதனுக்கும் தெரியும்.

குதிரை வண்டியில் அல்ல; குதிரை மீதே சவாரி செய்து போனாலும் பவுர்ணமிக்குள் அவரால் திரும்பிவர முடியாது! ஏனென்றால் அக்கினி பர்வதம் அவ்வளவு தூரத்திலிருக்கிற ஓரிடம்.

திரும்பிவர முடியாவிட்டாலும் சரி. பவுர்ணமிக்குள் சூலம் இங்கே வரா விட்டாலும் பத்ரா என்கிற யக்ஷிக்கு மறுபடியும் புனர்ஜென்மம் ஆரம்பமாகி விடும்!

அது அழிச்சாட்டியம் செய்கிற புனர் ஜென்மம்.

அதனால் அவனிக்கே பெரும் துன்பம்!

உலகிலுள்ள இளைஞர்களின் இரத்தத்தைக் குடித்துக் குடித்தே அவள் வளர ஆரம்பித்து விடுவாள்! அவள் வளர்ந்தால் பிறகுயாராலும் அவளை ஒடுக்க முடியாது.

அப்படி ஒரு கொடுமை கண் முன்னால் நடப்பதுபோல் நடுங்க ஆரம்பித்தார் பவத்ராதன் திருமேனி. வழி நெடுக அவரை இந்தக் கோரக் காட்சியே விரட்டி அடித்தது!

பவத்ராதனும், குஞ்சனும் பாலேக்கல் மனையை விட்டுப்போய் விட்டார்கள் என்று தெரிந்த பிறகுதான் நீலகண்டன் திருமேனி புறப்படவே ஆரம்பித்தார். போகும்போது மகனை அழைத்து மறுபடியும் சொன்னார்:

"இதப்பாரு கோகுல்! பவுர்ணமிக்கு எப்படியும் அந்தப் பத்ராவை ஆவாதிக்க ஒரு பூஜை நடத்தப் போகிறோம். அந்தப் பூஜையோட பூஜை-போனானே அவனுக்கும் இருக்கு! ஒரே வெடியிலே ரெண்டுபட்சி! முடிச்சுடுவோம்!"

வெகு சாதாரணமாகச் சொல்லிக் கொண்டிருந்தவர் திடீரென்று எச்சரிக்கை உணர்வோடு பேச ஆரம்பித்தார்.

"நேசக்காரன் மாதிரி வந்து போறானே! அந்த மோசக்காரன் எதுக்கு வந்தான்னு இப்பவாவது உனக்குப் புரியுதாப்பா? நாம என்னென்ன செய்யறோம்னு அவன் இந்த வீட்டு வாசல்லேயே அவனோட மூர்த்திகளைக் காவலுக்கு நிறுத்தி வச்சிருக்கான். அவன் பகை என் ஒருத்தன் கூட மட்டுமில்லே! இந்த இல்லத்து மனுஷாள் அத்தனை பேருமேலேயும் இருக்கு! அதனாலதான் உன்னை வெளியே போக வேண்டாம்னு சொன்னேன் கோகுல்! போயிடாதே!"

சொல்லி விட்டு அவர் தன் இலட்சியத்தை நோக்கி முன்னேறிய போது......

இன்னும் சிறிது நேரத்தில்-சிறிது தூரத்தில் அவருக்காக ஓர் ஆபத்து காத்திருந்த விவரத்தை அவர் அறிய வேயில்லை.

(இன்னும் வரும்)

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: பி.கஸ்தூரிபாபு
வயது: 21
முகவரி: 60,2ம் குறுக்குத்தெரு, கொழும்பு-11.
பொழுதுபோக்கு: வானொலி பத்திரிகை, புத்தகம், பேனா நட்பு.



பெயர்: கே.முஹமட் நிஸ்வான்
வயது: 17
முகவரி: 77,கலீல் பிளேஸ், களுத்துறை தெற்கு.
பொழுதுபோக்கு: பேனா நட்பு, தொலைக்காட்சி



பெயர்: ஆர்.டொனில்டா
வயது: 17
முகவரி: 5ம் குறுக்குத் தெரு, சின்னக்கடை, மன்னார்.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை, தொலைக்காட்சி.



பெயர்: ஏ. ஹின்மியா
வயது: 20
முகவரி: 391/ஏ-7 கண்டிவீதி, முள்ளிப்பொத்தானை கந்தளாய்.
பொழுதுபோக்கு: தொலைக்காட்சி, நண்பர்கள் தொடர்பு.



பெயர்: எஸ்.முரளிதரன்
வயது: 24
முகவரி: ZURLINDEN STR-21 8003-ZURICH SWITZERLAND.
பொழுதுபோக்கு: பத்திரிகை, கிரிக்கெட் விளையாடுதல்.



பெயர்: எம்.ஏ.காதர்
வயது: 25
முகவரி: P.O BOX- 5963 N.C.M.S-BECHTEL JEDDAH.
பொழுதுபோக்கு: பத்திரிகை, தொலைக்காட்சி, வீடியோ.

பெயர்: எஸ்.யோகராஜா
வயது: 17
முகவரி: விவேகானந்தா வீதி, அக்கரைப்பற்று-08.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை.

பெயர்: முகமத் சனா
வயது: 19
முகவரி: 33, அல்பியன் ஒழுங்கை, தெமட்டகொடை, கொழும்பு-9.
பொ.போ: கதைப்புத்தகம், பாடல்கள்

பெயர்: எஸ்.யோகராஜ்
முகவரி: P.O.BOX-5530, DOHA-QATAR-A.G.
பொழுதுபோக்கு:நண்பர்கள் தொடர்பு, ரீ.வி, வானொலி, கதைப் புத்தகம்.

பெயர்: எம். ஹருன்
முகவரி: AKUM BUKUM TOYS SHOP, MUJEEDI MAGU, MALE- REPUBLIC OF MALDIVES.
பொ.போ: முத்திரை, நாணயங்கள் சேகரித்தல், கதைப்புத்தகம், வானொலி.

பெயர்: பி.எஸ்.சுப்பிரமணியம்
வயது: 19
முகவரி: ரொரிங்டன் எஸ்டேட்,அக்கரைப்பத்தனை.
பொழுதுபோக்கு: வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை

பெயர்: எம். சி.அன்ஸார்
வயது: 21
முகவரி: 193, பிரதான வீதி, பாலமுனை-03.
பொ.போ: பத்திரிகை வாசித்தல்.

# தாய்

23

“உன் தலையிலே உண்ணிப் புழுவைத் தவிர வேறு என்ன இருக்கும்?” என்று பதில் கொடுத்தான் காவலாளிகளில் ஒருவன்.

“பின்னே, உண்ணிப் புழுவைப் பிடித்து, பத்திரம் பண்ணு. எங்களை விடு” என்று எரிந்து விழுந்தான் தொழிலாளி.

அந்த வேவுகாரன் அவனை ஒரு பார்வை பார்த்துவிட்டுக் கசப்போடு காறி உமிழ்ந்தான்.

“என்னை உள்ளே போகவிடு. இந்த மாதிரிச் சுமையைத் தாங்கிக் கொண்டு நின்றால் என் முதுகுதான் முறிந்து போகும்” என்று சொன்னாள் தாய்.

“போ, போய்த்தொலை” என்று எரிச்சலோடு கத்தினான் காவலாளி. “வருகிறபோதே திண்டு முண்டு பேசிக் கொண்டே தான் வருகிறது!” என்று முனகிக்கொண்டான்.

தாய் உள்ளே வந்து தனது வழக்கமான இடத்துக்குச் சென்று, கூடைகளைக் கீழே இறக்கினாள். முகத்தில் சுரந்திருந்த வியர்வையைத் துடைத்துவிட்டு சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டாள்.

கூஸெவ் சகோதரர்களில் இருவர், இருவரும் இயந்திரத் தொழிலாளிகள்– அவளிடம் உடனே வந்து சேர்ந்தார்கள்.

“அப்பம் இருக்கிறதா?” என்று அவர்களில் மூத்தவனான வசீலி முகத்தைச் சுழித்துக் கொண்டே கேட்டான்.

“நாளைக்குத்தான் கிடைக்கும்” என்றாள் அவள்.

அதுதான் அவர்களது பரிபாஷை. அந்தச் சகோதரர்களின் முகங்கள் பிரகாசமடைந்தன.

“அட என் அம்மாக்கண்ணு!” என்று மகிழ்ச்சி பொங்கச் சொன்னான் இவான்.

வசீலி கூடைக்குள் பார்க்கும் பாவனையில் குனிந்து உட்கார்ந்தான்; அதே கணத்தில் ஒரு கத்தைப் பிரசுரங் களும் அவனதுசட்டைக்குள்ளாக, நெஞ்சுக்குப் பக்கமாகத் திணித்து ஒளித்து வைக்கப்பெற்றன.

“நாம் இன்றைக்கு வீட்டுக்குப் போகவேண்டாம்” என்று சத்தமாகச் சொன்னான் அவன்; “இவளிடமே வாங்கிச் சாப்பிடலாம்.” அப்படிப் பேசிக்கொண்டே அவன் இன்னொரு கத்தையை எடுத்து பூட்சுக் காலுக்குள் திணித்துக் கொண்டான். “இந்தப் புதிய கூடைக்காரிக்கு நாம் ஆதரவு அளிக்க வேண்டும் என்று கூறிக் கொண்டான்.

“ஆமாம்!” என்று சிரிப்புடன் ஆமோதித்தான் இவான். தாய் சுற்றுமுற்றும் ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொண்டாள்.

“சூடான சேமியா சூப்” என்று கத்தினாள்.

பிறகு மிகவும் சாதுரியத்தோடு பிரசுரக் கட்டுகளை ஒவ்வொன்றாய் எடுத்து அவர்கள் கையிலே கொடுக்க ஆரம்பித்தாள். அவளது கண்முன்னால் அந்த மஞ்சள் மூஞ்சி அதிகாரியின் முகம் நெருப்புப்பற்றிய தீக்குச்சியைப் போலத் தெரிந்தது. அவள் தனக்குத்தானே வன்மத்துடன் ஏதோ சொல்லிக் கொண்டாள்.

“இதோ, இது உனக்கு அப்பனே.”

பிறகு அடுத்த கத்தையைக் கொடுத்தாள்.

“இந்தா.....”

தொழிலாளர்கள் கைகளில் குவளை களை ஏந்தியவாறு அவள் பக்கமாக வந்தார்கள். அவர்களில் யாரேனும் பக்கத்தில் வருவதாகத் தெரிந்தால் உடனே இவான் கூஸெவ் வாய்விட்டுச் சிரிப்பான்; உடனே தாய் பிரசுரங்களைக் கொடுப்பதை மறைத் துவிட்டு, சேமியா சூப், கொடுக்க ஆரம்பித்து விடுவாள்.

“நீ ரொம்பக் கெட்டிக்காரி, பெலகேயா நீலவ்னா” என்று கூறி அந்தச் சகோதரர்கள் இருவரும் சிரித்தார்கள்.

“தேவை வந்தால் திறமையும் கூடவே வந்துவிடும்” என்று பக்கத்தில் நின்ற கொல்லுத்தொழிலாளி ஒருவன் சொன்னான். “பாவம் அவளுக்கு உழைத்துப் போட்டு உணவு கொடுத்தவனை அவர்கள் கொண்டு போய் விட்டார்கள் அயோக்கியப் பயல்கள்! சரி, எனக்கு மூன்று கோபெக் குக்குச் சேமியாகொடு. கவலைப்படாதே, அம்மா. எப்படியாவது உன்பாடு நிறை வேறிவிடும்.”

“நல்ல வார்த்தை சொன்னாயே. உனக்கு ரொம்ப நன்றி” என்று இளஞ் சிரிப்போடு பதில் கூறினாள் தாய்.

“நல்ல வார்த்தைக்கு என்ன காசா பணமா?” என்று சொல்லிக் கொண்டே அவன் ஒரு பக்கமாக ஒதுங்கிச் சொன்றான்.

“சூடான சேமியா, சூப்” என்று கத்தினாள் பெலகேயா. தன் மகனிடம் தனது பிரசுர விநியோகத்தின் முதல் அனுபவத்தை எப்படிச் சொல்வது என்பதைப்பற்றி அவள் யோசித்துப் பார்த்தாள். ஆனால் அவளது மனத்தாழத்தில் அந்தக் கோபாவேசமான புரியமுடியாத கடுகடுத்த மஞ்சள் மூஞ்சி அதிகாரியின் முகம்தான் நிழலாடிக் கொண்டிருந்தது. அவனது திருகிவிட்ட கரிய மீசை நிமிர்ந்து நின்றது; இறுக மூடிய அவனது பற்கள் பிதுங்கிப்போன உதடுகளின் இடையே வெள்ளை வெளேரெனப் பளிச்சிட்டன. தாயின் இதயத் தில் வானம்பாடியைப் போல் ஆனந்த உணர்ச்சி பாடித்திரிந்தது. அவள் தன் புருவங்களை வளைத்து உயர்த்தி, வந்து போகும் வாடிக்கைக்காரர்கள் அனைவ ரையும் பார்த்து, தனக்குத்தானே சொல்லிக் கொண்டிருந்தாள்.

“இதை வாங்கு. அதை எடு.”

□□□

**அ**ன்று மாலையில் அவள் தேநீர் பருகிக்கொண்டிருக்கும் போது வெளியே சக்தி தெறிக்க வரும் குதிரைக் குளம்புகளின் ஓசையும் அதைத் தொடர்ந்து ஒரு பழகிய குரலும் கேட்டது. அவள் துள்ளியெழுந்து கதவைத் திறப்பதற்காக சமையல் கட்டுக்குள் ஓடினாள். யாரோ வாசல் பக்கத்தில் அவசர அவசரமாக நடந்து வருவதாய்த் தெரிந்தது. அவளது கண்கள் திடீரென இருண்டன; அவள் கதவைக் காலால் தள்ளித் திறந்துவிட்டு, கதவு நிலைமீது சாய்ந்து நின்றுகொண்டாள்.

“வணக்கம் அம்மா!” என்ற பழகிய குரல் கேட்டது; அதே சமயம் மெலிந்து நீண்ட கரங்கள் அவள் தோள்களின் மீது விழுந்தன.

அவளது இதயம் ஏமாற்றத்தால்



மக்சீம் கார்க்கி

கலங்கியது. அந்த ஏமாற்றத்தோடு அந்திரேயைக் கண்டதால் ஏற்பட்ட ஆனந்தமும் பொங்கியது. அந்த இரு உணர்ச்சிகளும் ஒன்றோடொன்று முயங்கி, ஒரு பேருணர்ச்சியாகத் திரண்டு, அவளை மகிழ்ச்சிப் பரவசத்துக்கு ஆளாக்கி உந்தி எழச்செய்து, அந்திரேயின் தோள் மீது முகத்தைப் புதைத்துக்கொண்டாள். நடு நடுங்கும் கைகளோடு அவளை இறுக அணைத்துக் கொண்டான் அவன். தாய் அமைதியாக அழுதாள்; அவளது தலை மயிரைத் தடவிக் கொடுத்துக் கொண்டே சொன்னான் அவன்:

“அழாதீர்கள், அம்மா! வீணாக மனத்தை நோகச் செய்து கொள்ளாதீர்கள். என்னை நம்புங்கள். அவர்கள் பாவெலைச் சீக்கிரம் விட்டுவிடுவார்கள். அவனுக்கு எதிராக அவர்களுக்கு ஒரு சாட்சியமும் கிடையாது. வெந்துபோன மீனைப்போல், எல்லோரும் ஊமையாகவே இருக்கிறார்கள்.....”

தன் கரத்தை தாயின் தோள் மீது வைத்தவாறே அவளை அடுத்த அறைக்குள் அழைத்துச் சென்றான்; அவனோடு ஒட்டித் தழுவிக்கொண்டாள் அவள். ஒரு அணிற் குஞ்சின் சுறுசுறுப்போடு அவள் தன் கண்களில் பொங்கிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டு அவன் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையையும் அள்ளிப் பருகினாள்.

“பாவெல் உங்களுக்குத் தன் அன்பைத் தெரிவிக்கச் சொன்னான். அவன் எவ்வளவு முடியுமோ அவ்வளவு உற்சாகமாகவும், நன்றாகவும் இருக்கிறான். சிறையிலே ஒரே கூட்டம்! சுமார் நூறு பேரைக் கொண்டுவந்து அடைத்திருக்கிறார்கள். நம் ஊர் ஆட்களும் இருக்கிறார்கள், நகரிலிருந்து வந்தவர்களும் இருக்கிறார்கள். ஒரு கொட்டடிக்கு மூன்று அல்லது நாலு பேராகப் போட்டுப் பூட்டி வைத்திருக்கிறார்கள். சிறை அதிகாரிகள் ரொம்ப நல்லவர்கள். இந்தப் பிசாசுப் பிறவிகளான பொலிஸ்காரர்கள் கொடுத் துள்ள வேலையினால் அவர்கள் இளைத்துக் களைத்து ஓய்ந்து போயிருக்கிறார்கள். அதிகா ரிகள் ரொம்பக் கடுமையாக இல்லை; அவர்கள் எங்களைப் பார்த்து ‘பெரியோர்களே, அமைதியாக மட்டும் இருங்கள், வீணாய் எங்களுக்குத் தொல்லை கொடுக்காதீர்கள்’ என்றுதான் சொல்லிக் கொண்டிருக் கிறார்கள். எனவே எல்லோரும் நன் றாய்த்தான் நடக்கிறது. நமது தோழர்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்கிறார்கள்; புத்தகங்களைக் கொடுத்து வாங்கிக் கொள்கிறார்கள்; சாப்பாட்டையும் பங்கு போட்டுக் கொள்கிறார்கள். அது ஒரு நல்ல சிறைதான். ரொம்பப் பழசு, அட்டுப் பிடித்த சிறை; என்றாலும் கைதிக்கு மோசமாக இல்லை. கிரிமினல் கைதிகளும் ரொம்ப நல்லவர்கள். அவர்கள் நம்மவர்களுக்கு எவ்வளவோ உதவி செய் கிறார்கள். நானும் புகினும் இன்னும் நால்வரும் விடுதலையாகி விட்டோம். பாவெலும் சீக்கிரம் திரும்பிவந்துவிடுவான் என்பது மட்டும் எனக்கு நிச்சயம்தான். நிகலாய் வெஸோவ்ஷிகோவ் தான் கடைசியாக வருவான். அவன் அவர்களிடம் தாறுமாறாக நடந்துகொள்வதால், அவன் மீது அவர்களுக்கு ஒரே கோபம். அவனைப் பார்க்கக்கூட, பொலிஸ்காரர்கள் பயப் படுகிறார்கள். அநேகமாக அவனை சீக்கிரம் விசாரணைக்குக் கொண்டு செல்வார்கள்; இல்லாவிட்டால் என்றாவது ஒருநாள் அடித்துத் தள்ளுவார்கள்! “நிகலாய், நிறுத்து, உன் வசவுகளால் ஒரு பயனும் இல்லை” என்று பாவெல் அடிக்கடி கூறிக் கொண்டுதான் இருக்கிறான். ஆனால் நிகலாயோ பொலிசாரைப் பார்த்து ‘உங்களையெல்லாம் பொருக்காடிப்போன புண்ணைத் துடைக்கிற மாதிரி பூமியிலிருந்தே துடைத்துத் தீர்த்துவிடுவேன்!’ என்று கத்துகிறான். பாவெல் நன்றாக நடந்து கொள்கிறான். உறுதியோடும் நிதானத் தோடும் இருக்கிறான். அவனைச் சீக்கிரம் வெளியே விட்டுவிடுவார்கள் என்பதுதான் என் எண்ணம்.....”

“சீக்கிரமா?” என்று அன்பு ததும்பும் புன்னகையோடு திருப்பிக்கேட்டாள் தாய்; “அவன் சீக்கிரம் வந்துவிடுவான், அது நிச்சயம்.”

“அதனால், விஷயங்கள் எல்லாம் ஒழுங்காகத்தான் இருக்கின்றன. சரி, எனக்கு முதலில் ஒரு குவளைத் தேநீர் கொடுங்கள். அப்புறம், நீங்கள் எப்படிக் காலந் தள்ளினீர்கள்? சொல்லுங்கள்.”

அவன் சிரித்துக்கொண்டே, அவளை ஏற இறங்கப் பார்த்தான். அன்பும் அமைதியும் ததும்பப் பார்த்த அவனது பாசம் ஒளி வீசும் கண்களில் ஒரு கணம் சோகத்தின் சாயை படர்ந்து மறைந்தது.

“உங்கள்மேல் எனக்கு ரொம்பப் பிரியம், அந்திரியூஷா!” என்று கூறிப் பெரு மூச்செறிந்தாள் தாய். மண்டி வளர்ந்திருந்த தாடிக்குள் தெரியும் அவனது மெலிந்த முகத்தைக் கூர்ந்து பார்த்தாள்.

“என்னை நீங்கள் கொஞ்சமாக நேசித்தாலும் எனக்குத் திருப்திதான்” என்று கூறிக்கொண்டே, தான் அமர்ந்திருந்த நாற்காலியை முன்னும் பின்னும் ஆட்டிக்கொண்டான் அவன். “உங்களுக்கு என் மேலே பிரியம் என்பதும் எனக்குத் தெரியும். உங்கள் இதயம் பரந்தது; நீங்கள் எல்லோரையுமே நேசிக்கிறீர்கள்.”

“ஆனால் உங்களை பிரத்தியேகமாக நேசக்கிறேன் என்று அவள் அழுத்திக் கூறினாள். “உங்களுக்கு ஒரு தாய்மட்டும் இருந்தால் உங்களை மாதிரி ஒரு மகனைப் பெற்றதற்காக, எல்லோரும் அவள் மீது பொறாமை கொள்வார்கள்.”

அந்த ஹஹோல் தலையை அசைத் தான்; தன் இரு கைகளாலும் தலையைப் பிடித்துக் கரகரவென்று தேய்த்து விட்டுக் கொண்டான்.

“எனக்கும் எங்கோ எவ்விடத்திலோ ஒரு தாய் இருக்கத்தான்செய்கிறாள்” என்றான். அவன் குரல் தணிந்து போயிருந்தது.

“இன்றைக்கு நான் என்ன செய்தேன் தெரியுமா?” என்று தொடங்கினாள் தாய். பிறகு மிகுந்த உணர்ச்சிப் பரவசத்தோடு அன்று அவள் தொழிற்சாலைக்குள் பிரசுரங்களைக் கொண்டு சென்ற விவரத்தைக் கொஞ்சம் மூக்கும் முழியும் வைத்துச் சொல்ல முனைந்தாள். எனினும் அவளது ஆனந்தத்தாலும், ஆர்வத்தாலும் சொல்லுக்கு வளையாமல் அடிக்கடி தடுமாறிக் குழறியது நாக்கு.

முதலில் அவன் தன் கண்களை வியப்போடு அகல விரித்தவாறே இருந்தான்; பிறகு வாய்விட்டுக் கலகலவென்று சிரித்தான்.

“ஓஹோ!” என்று ஆனந்த மிகுதியினால் கத்தினான்.

“நீங்கள் செய்ததும் நல்ல காரியம் தான். இது விளையாட்டல்ல. பாவெல் கூடச் சந்தோஷப்படுவான். அம்மா, நீங்கள் செய்த வேலை எவ்வளவு பிரமாதம் தெரியுமா? பாவெலுக்கும் அவன் தோழர்களுக்கும் அது ரொம்ப உதவும்!”

அவனது உடம்பு முழுவதுமே முன்னும் பின்னும் அசைந்து குலுங்கியது; அவன் தன் விரல்களை முறித்துச் சொடுக்கு விட்டான்; உற்சாகத்தால் புளகாங்கிதம் அடைந்து சீட்டியடித்தான். அவனது உவகையைக் கண்ட தாய்க்கு இன்னும் பேசவேண்டும் என்ற ஆசை உந்தியெழுந்தது.

“என் அருமை அந்திரியூஷா!” என்று ஆரம்பித்தாள் அவள். அவளது இதயமே திறந்து கொண்டதுபோல், திறந்த இதயத்திலிருந்து பரிபூரண உவகையோடு முன்னிட்டுத் தெறிக்கும் வார்த்தைகள் மளமளவென்று பொழிந்து வழியப்

(தொடர்ந்து வரும்)

# சந்தேகம்

**ர**குவின் விழிகளிலிருந்து வடிந்த ஒவ்வொரு சொட்டு கண்ணீரிலும் அவனின் மனைவி சுகந்தியின் ஞாபகங்களே ஒட்டியிருந்தன. அவன் மனைவிமேல் கொண்ட அன்பிற்காய் இயன்றளவு கண்ணீர் வடித்தான். அவனால் தன்னையே நம்ப முடியாமலிருந்தது. ஏன் அவ்வாறு செய்தாள்? வினாக்குறிகளால் மனங்குழம்பிப்போயி ருந்தான்.

“மகன் உன்னுடைய மனைவி அவளுடைய பிறந்த வீட்டுக்கு போயிட்டாள்! போகட்டும்! சீதனமில்லாமல் மாப்பிள்ளை வேண்டுமென்றால் வேற ஆம்பிள்ளைய கட்டியிருக்க வேண்டியது தானே!” தனது தாய் சொல்லிவிட்டுப் போனபோது கூட அவள் போயிருப்பாள் என அவன் நம்ப வில்லை. ஆனால் அவள் எழுதி வைத்து விட்டுச் சென்ற கடிதத்தை பார்த்த பிறகுமா....?

ஐந்து வருடகாலமாக காதலித்து திரு மணம் முடித்தவள். அதை விட தன்னிதயத்தை தெரிந்துகொண்ட அவளா லேயே தன்னை புரிந்து கொள்ள முடியாமல் போனது அவனுக்கு வியப்புதான்.

அவளோடு வாழ்ந்து முடிந்த மூன்று பொழுதுகளும் அவனுக்கு மூன்று யுகங்களாகத் தான் தெரிந்தன.

கண்களில் அரும்பியிருந்த கண்ணீர் முத்துக்களை தட்டி விட்டபடி தொப்பென கட்டிலில் சாய்ந்து கூரையை வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தவனின் மனம் கடந்த கால நடந்து முடிந்த சம்பவங் களுக்குள் கால் பதிக்கத் தொடங்கிது.



ஹப்புத்தளையூர் எப். லெனாட்குமார்

தன்னெதிரே அமர்ந்து தலையை நிமிர்த்திக் கூட பார்க்க வெட்கப்பட்ட தன் மனைவியை கண்வெட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான் ரகு. அவள் தலையில் சூடியிருந்த மல்லிகைப் பூவிலிருந்து வந்த வாசம் அவன் மனதை என்னவோ செய்தது. செக்கச் சிவந்த அவளது கன்னங்களை பார்த்து உதடு கடித்தான். அவளின் தோள் தொட்டு ஆதரவாய் மெல்ல தலை யுயர்த்தினான். அவள் லேசாக வாய்திறந்து புன்னகைத்தாள்.

“என்ன....சுகந்தி?”

“ம்”

“பேசேன்!”

“என்னத்த?”

“எதையாவது!”

“முடியாது!” தலையாட்டினாள்.

“அப்போ லைட் ஓஃப் பண்ணவா?

“எதுக்கு?” “இதுக்கு”

அவளின் உதட்டை குறிவைத்துக் குனிந்தான்.

✠

பொழுது நன்றாக விடிந்து போயி ருந்தது. விடுமுறை நாளென்றதால் சற்று அதிகமாகவே உறங்கிப் போனான் ரகு.

“என்னங்க! எழும்புங்களேன்! அப்பா வந்திருக்கார்!” போர்வையை இழுத்தெடுத்த மனைவியை அணைத்து முத்தமிட்டான். அவள் அவனின் அதிகப் பட்ச அன்பினால் மகிழ்ந்து போனாள். எழுந்து முன் அறைக்கு வந்தவன் தனது மாமனாரிடம் குசலம் விசாரித்துக்கொண்டிருந்த தாயோடு அமர்ந்து கொண்டான்.

“மாப்பிள்ள.. நீங்கள் கேட்டமாதிரியே சீதனப்பணம் முப்பதாயிரம் ரூபா இதுல இருக்குது. எண்ணிப் பார்த்துக் கொள்ளுங்கள்!” நடுங்கிய படி நீட்டிய மாமனாரை பார்த்து புன்னகைத்து மகிழ்வுடன் வாங்கிக்கொண்டான் ரகு. அவர் நன்றிப்பெருக்குடன் விடைபெற்றுச்செல்ல, பணத்தை தன் தாயிடம் கொடுத்து விட்டு உள் அறைக்குச் சென்றவன் அப்படியே ஒரு சில கணம் ஸ்தம்பித்துப் போனான்.

“சுகீ....என்னம்மா இது? ஏன் அழுகிற?” பரிவுடன் அவள் தோள் தொட்டு நிமிர்த்த அவனது கையை தட்டிவிட்டாள்.

“காதலிக்கிறபோது மட்டும் சீதனங் கேட்காத மாதிரி நடிப்பீங்க கல்யாணமெண்டு வந்திட்டால் உங்களுக்கு சீதனம் வேணும்! உங்க மாதிரி ஆம்பிள்ளைகளுக்கு எதுக்கு பொண்டாட்டி வேண்டி கிடக்குது? கஷ்டப்பட்டு உழைச்சி, பொண்ணு வீட்டுல தாற சீதனப்பணத்தில தான் வாழ முடியும் என்று நினைக்கிற ஆண்கள, என்னால மதிக்க முடியாது. அவர்களும் ஆண் வேசம் போடுற பொம்பளைகள் தான்!” கரகரத்த குரலில் பேசி விட்டு குமுறிக் குமுறி அழுதுகொண்டிருந்தவளை தேற்ற முற்பட்டவன் தோற்றுப்போனான்.

✠

சகலதையும் மீட்டிப் பார்த்த அவன் மனம் நடந்து முடிந்த நிகழ்வுகளுக்காய் துக்கப்பட்டுக் கொண்டிருப்பது மடமையென பட்டது. சுகந்தியின் வீட்டுக்கு போய் அவளை சமாதானப் படுத்தி அழைத்து வர முற்பட்டாலும் அவள் வருவதாயில்லை. அவளின் பெற்றோர் கூட அவளை எத்தனையோ முறை அழைத்துச் செல்ல முற்பட்டாலும் அவள் ஒரே முடிவாகச் சொன்னாள்,

“சீதனங் கேட்டு வாங்கி ஆணென்று சொல்லிக்கிட்டு திரியிற ஒரு பொம்பளைக்கு மனைவியா வாழ நான் விரும்பல” என்று

நாட்கள் நகர்ந்துபோயின. அன்று ஓர் சனிக்கிழமை. மீண்டும் தன் மனைவியை சமாதானப் படுத்தி அழைத்து வருவதற்காய் அவளின் வீட்டுக்கு போயிருந்தான் ரகு. சுகந்தி கோயிலுக்கு தாயோடு போயிருந்ததால் அவளின் அப்பா ராமலிங்கம் மட்டுமே வீட்டிலிருந்தார்.

“மாப்பிள்ள, உங்க நல்ல மனசுக்கு நீங்க இப்படி வேதனைப்படுறது எனக்கு மனசுக்கு கஷ்டமா இருக்குது. உண்மைய மகள் கிட்ட சொல்லிடலாமுனு பார்த்தா, உங்க கிட்ட செய்த சத்தியம் தடுக்குது! என்னுடைய மகள் உங்க வீட்டுக்கு வந்த பிறகு சீதனமில்லாமல் வந்தவள்னு மத்தவங்க சொல்லக் கூடாதுனு நீங்களாகவே காசு கொடுத்து அதை நான் சீதனமாக தாற மாதிரி கொடுக்கவச்சீங்க. இத புரியாத பாவி மகள் உங்கள வேதனைப் படுத்துறது எனக்கு வேதனையாக இருக்குது மாப்பிள்ள! அவர் நிஜமாகவே கண் கலங்கினார்.

“என்ன மாமா பெரிய வார்த்தையெல்லாம் பேசிட்டு! நான் என்ர மனைவி மேல உயிரையே வச்சிருக்கிறன். எப்போதாவது அது அவளுக்கு புரிந்தால் போதும்!” ஆதரவாய் அவர் கைபற்றி சொன்னான்.

இவையெல்லாவற்றையும் வெளியி லிருந்து கேட்டுக்கொண்டிருந்த சுகந்தி கலங்கிப் போனாள். இப்படிப்பட்ட உத்தமனையா ‘சீதனப் பேயென’ சொன் னேன்? கண்களிலிருந்து வடிந்த கண்ணீரோடு தன் கணவனின் காலில் விழுந்தவளை ஆதரவாய் தூக்கி நிமிர்த்தினான். பக்கத்தி லிருந்த மாதா கோயில் மணிச் சத்தம் அவர்கள் இருவரின் காதுகளிலும் தெளிவாகத் கேட்டது. ராமலிங்கம் மனதால் மாதாவை வேண்டிக்கொண்டார்.

# காதல் விதவைகள்

இரண்டுவருடங்களுக்கு முன் ஸரீனாவை சந்தித்தபோது இன்னுமொரு முறை அவளைச் சந்திக்க மாட்டோமா என்கிற புதுவிதமான ஏக்கம் எனக்கு எழுந்தது ஏதோ உண்மைதான் ஆனாலும்..... இப்போது நினைக்கையில் ஏன்டா சந்தித்தோம் என்றும் நினைக்கத் தோன்றுகிறது.

காலை நேமொன்றில் சிகரட் புகைப்பதற்காக நான் கடையை நோக்கிப் போன நேரமே.....அவள் டியூட்டரிக்குப் போகும் நேரமாயிருக்க.....முத சந்திப்பு இப்படித் தான் நிகழ்ந்தது பிறகு...

காலைகள் ஏறினாலும்......

நான் 'புகைக்க' செல்வது தவறாமல்,

அவள் டியூட்டரி செல்வது தவறாமல்....

முடிவில்..... குதியில்லாததோர் தவறான காதல் நமக்குள் உருவான போது..... காதலர்களாக நாம் முத்தங்கள் பரிமறி கண்ணசைவுகளோடு கதைகள் பேசினபோது....

காதல் புளகாகிதத்தில் நான் வாழ்க்கையின் யதார்த்தத்தை; குறிப்பாக என் ஏழ்மையை மறந்து போனேன். நான் அப்போது செய்த மடத்தனம் என் ஏழ்மயை மறந்தது தான்.

ஆனால் அவள்மறக்கவில்லை!

'பணக்காரத்தனான' அவள் என்னை மறக்க முன்றபோதுகூட, என் காதலை மறந்தபோதுகூட, என் ஏழ்மையை மறக்கவில்லை.

ஒரு நாள் உம்மாவிடம் சொன்னேன்,

"உம்மா நான் ஸரீனாவை விரும்புறேன்மா...."

"எந்த ஸரீனா.....?"

"இரும்புக்கடை முதலாளியோட மகள்....."

"அப்பம் சுட்டு விற்கிற நமக்கு ஒத்துவருமா மவன்.....? நமக்கும் அவங்களுக்கும் ஒண்ணுக்கு ரெண்டா ஏணி வெச்சாலும் எட்டாதுப்பா....."

"இல்லம்மா.... அவள் அந்தமாதிரி இல்லம்மா.... நல்ல பொண்ணும்மா...."

"உன்ட விருப்பம். அப்போ ஒரு நாளைக்கு வீட்டிற்கு கூட்டிட்டு வா...."

மூன்றாவது நாள் ஸரீனாவை வீட்டுக்கு அழைத்துப் போனேன்.

ஸரீனாவைப் பார்த்து உம்மா கேட்டாள்,

"நீ சாஜஹானை (என் பெயர்) விரும்புறியாம்மா....?"

ஸரீனா என்னையும் உம்மாவையும் மாறிமாறிப் பார்த்து...

"விரும்புறேன்....ஆனால்....."

நான் புரியாமல் பார்க்க... என்னையே பார்த்துச் சொன்னாள்,

"பழகினது உண்மைதான். அதற்காக வாழ்க்கை நடாத்த வசதிவேணாமா சாஜஹான்? என் வாப்பாவுக்கு மருமகனாகக் கூடிய தகுதியிருந்தால் வீட்டுல வந்து பொண்ணு கேளுங்க.... இல்லேன்னா உங்க தகுதிக்கு ஏற்றவளாகத் தேடிக்குங்க... நான் வர்றேன்..."

நானும் உம்மாவும் வியர்த்துப்போய்....

சர்வநாடியும் அடங்கிப்போன நிலையில் நின்றிருக்க,

-அவள் வெளியேறிப் போனாள்.

போனவள் போனவள்தான்.

என் காதலும் காற்றோடு பறந்து போய்......

**'தேவி**
**நீ போயிருக்கலாம்**
**பாதை நெடுகவும்**
**நீ போயிருக்கலாம்**
**ஆனால்.....**
**எனை சகதிக்குள் ஆழ்த்தாமல்**
**நீ போயிருக்கலாம்..**
**நீயோ வேறாகிப் போனாய்**
**நானோ சேறாகிப் போனேன்!'**

என்று யதார்த்தமாய் கவிதை எழுத ஆரம்பித்தேன்.

□□□

விடிந்தது!

நான் காலைக் கடன்கள் அனைத்தையும் முடித்து, சாப்பிட்டு, உடைமாற்றி, 'எக்ஸிகியூட்டிவ்' டயறியைக் கையிலெடுத்து..... மறுகையால் 'டை'யைச் சரிசெய்தவண்ணம் உம்மாவைக் கூப்பிட்டேன். "உம்மா!"

உம்மா வந்து அருகில் நின்றாள்.

"நான் கல்யாணம் பண்ணிக்கிறேம்மா..."

உம்மாவின் முகத்தில் சூரியனின் பிரகாசம் தென்பட்டது.

"உண்மையாகத்தான் சொல்றியா மவன்...?"

"ஓ உம்மா.... ஆனால் பொண்ணு பார்த்து சிரமப்பட வேணாம். ஏன்னா... நானே பொண்ணு பார்த்துட்டேன்மா...."

உம்மா ஆச்சரியமாகப் பார்த்தாள்.

நானே சொன்னேன்.

"கரீமா டீச்சரை நான் கட்டிக்குறேம்மா...."

உம்மா அதிர்ந்துபோய் பின் வாங்கினாள்.

"ஏன்டா உனக்கு ஏதாவது பைத்தியம் பிடிச்சிருக்கா....? கரீமா டீச்சர்... அவள் விதவைப் பொண்ணுடா. மாப்பிள்ளை மவுத்தாகி... இன்னும் அவளோட இத்தாக் காலமாலும் முடியல.... நீ என்னடான்னா அந்த விதவைப் பொண்ணைப் போய்....."

உம்மா பேசமுடியாமல் திணறினாள்.

"ஏன்மா....."

உம்மா மீண்டும் சொல்கிறாள்.

"அவள் விதவைப் பொண்ணுடா....."

நான் மென்மையாகச் சொன்னேன்.

"என் வாழ்க்கையும் அதுமாதிரிதானேம்மா. கணவன் இறந்துபோனதால டீச்சர் வேணுமின்னா விதவையாகியிருக்கலாம். ஆனால் நான்... என் வாழ்க்கையிலும் ஒரு ஸரீனா வந்துபோய்..... ரெண்டு வருஷமாக நானும் அவளையே நெனச்சிட்டு 'இத்தா' வாழ்க்கை மாதிரி தானேம்மா நானும் வாழ்ந்தேன். இன்னமும் அப்படித்தானேம்மா...."

உம்மா புரியாமல் பார்க்கிறாள்.

"மனசாலேயும் உடம்பாலேயும் கணவனோடு வாழ்ந்த கரீமா டீச்சர், கணவன் மவுத்தாகிப்போக விதவையாகிப்போய்...அது அவள் செய்த குற்றமாம்மா? தவிர... டீச்சருக்கு என்ன வயசும்மா.... என்னைவிடவும் ரெண்டு வருஷம் இளையவளும்மா.....அப்படியிருக்க உடம்பால இல்லேன்னாலும் மனசாலயாவது நானும் ஸரீனாவோடு வாழ்ந்துட்டேன்மா. அப்போ... என்னோட வாழ்க்கையும் டீச்சருடைய விதவை வாழ்க்கை மாதிரிதானேம்மா, அவளோட வாழ்க்கையில ஒரு ஆண் வந்து போனதுமாதிரி, என்னோட வாழ்க்கையிலயும் ஒரு பொண்ணு வந்து போயிருக்காளேம்மா...

"டீச்சர் விதவையாகிப் போனதால, அவளைக் கல்யாணம் பண்ணிக்க நீங்க வேண்டாம்னு சொல்றதுமாதிரி ...நான் காதலில தோற்றுப் போனதைத் தெரிஞ்சு.. எனக்கும் ஒரு பொண்ணோட பழக்கம் இருந்திச்சுன்னு தெரிஞ்சா எந்தப் பொண்ணும்மா என்னைக் கல்யாணம் பண்ணிக்க விரும்புவாள்? சொல்லுங்கம்மா....."

சிறுகதை

உம்மா இப்போது கொஞ்சம் தெளிந்திருந்தாள்.

"என்னோட வாழ்க்கையும் 'விதவைத்தமானதாக' அர்த்தமேயில்லாமப்போச்சு. கரீமா டீச்சரும் விதவையாகிப்போய்... அவளது வாழ்க்கையிலும் அர்த்தமில்ல. ஆக... நாங்க ரெண்டு பேரும் சேர்ந்து எங்களுக்குன்னு ஒரு அர்த்தமான வாழ்க்கையை உருவாக்கிக்குறோம்மா...."



**-மாவனல்லை ரிஸ்கி ஷெரீப்-**

நான் வாசல் படிகளில் இறங்கி.....

வெளியேறும் முன் தீர்மானமாய்ச் சொன்னேன்.

"என்னவானாலும்... எப்படியானாலும் சரி, நான் ஒரு விதவைப் பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிறதுன்னா... பண்ணிக்கிறேன். இல்லேன்னா எனக்குக் கல்யாணமே வேணாம்மா...."

வெளியேறினேன். மனதில் நம்பிக்கையோடு....

உம்மா பெருமிதத்தோடு பார்த்துக் கொண்டிருந்தாள்.

# சொல்லத் துடிக்குது மனசு



ஜஹானிக்கு தலையைச் சுற்றியது வெய்யில் வேறு 'எரித்து விடப் போகிறேன்', என்ற வெறியில் கொளுத்திக் கொண்டிருந்தது. அவள் பாடசாலை விட்டு வந்து, வியர்வையில் நனைந்த உடம்பைக் கழுவி, சாப்பிட்டுவிட்டு அநாயாசமாய் முன் விறாந்தையில் சாய்ந்து கொண்டாள். இன்னும் சற்று நேரத்தில் அவள் வீட்டுக்கு அப்பால் சில யார்தூரம் பரந்து கிடக்கும் மைதானம் நிரம்பி விடும். மாலை கரைவது தெரியாமல், வியர்க்க வியர்க்க விளையாடுவார்கள். ஜஹானி எழுந்து அன்றைய பத்திரிகையில் விழிகளை செலுத்தினாள். மனம் முழுக்க சோர்வாய் இருந்தது. தினமும் பல மைல் தூரமுள்ள பாடசாலைக்கு பஸ்ஸில் நெருக்

**கன்ஸியா**

குண்டு, கசங்கி, நொறுங்கிச் செல்வதனால் ஏற்படும் அயர்வாய் இருக்கலாம்.

பத்திரிகைகளை எறிந்து விட்டு, மீண்டும் மைதானத்தை வெறித்தாள்; சுறுசுறுப்பாய் விளையாடிக்கொண்டிருந்தனர். விறுவிறுப்பானது மனம். திடீரென பீறிட்டது உற்சாக வெள்ளம். அந்த மைதானத்திலிருந்து இரண்டு விழிகள் அவளை நோக்குவதும், பின் நகர்வதுமாய் அலைந்தன. அதற்குரியவனை அவள் அடையாளம் கண்டு கொண்டாள். தன் சக தோழியின் நானாதான் அது. தினமும் இவள் போகும் பஸ்ஸில்தான் சாபிரும் பயணம் செய்வான். பாடசாலை விட்டு வருகையில் நண்பர்களுடன் சேர்ந்து கிண்டலும் செய்வான். எனினும் அதனை அவள் பொருட்படுத்துவதில்லை. வாழ்க்கையில் இப்படி சிறிய விடயங்களை அலட்சியப் படுத்துவதால் எழும் பின் விளைவுகளைப் பற்றி எவரும் அலட்டிக் கொள்வதில்லை. பிரச்சனைகள் முற்றும் போதுதான் புத்தியில் உறைக்கும்.

ஜஹானியின் பிறந்த நாளான அன்று அவள் நண்பிகளுடன் அரட்டை அடித்துக் கொண்டிருந்தாள். விழிகளின் வீச்சில் மின்னல் தெறிக்க, இதயமெங்கும் மகிழ்ச்சிப் பிராவகம் குபீரிட்டது. வாழ்த்து மழையில் நனைந்து, அவள் திண்டாடி நின்ற வேளை, "ஜஹானி நல்வாழ்த்துக்கள்" என்ற குரல், ஆச்சரியமாய் திரும்பினாள். அவள் பெரியம்மாவின் மகன். "தாங்ஸ்" என்றாள். அவனுடன் சேர்ந்து பிறந்த நாளைக் கொண்டாடியவளின் கரத்தில் ஒரு கவரைத் திணித்து விட்டு சென்று விட்டான்.

துடிக்கும் இதயத்துடன் அதைப் பிரித்தாள்-உள்ளே ஒரு கடிதம். அதுவும் காதல் ரசம் பிழியப் பிழிய எழுதியிருந்தது. சாபிர் கொடுத்தனுப்பி இருந்தான். காதல் கடிதமொன்றை படிக்கும் முதற் தடவை என்பதால் அவள் நெஞ்சு படபடத்தது. விழிகள் அச்சம் விரவி மிரண்டு கிடந்தன. யாராவது வந்து விடுவார்களோ என்ற கிலியில் படிப்பதும், வாசலைப் பார்ப்பதுமாய், கடிதத்தைப் படித்து முடித்தாள்.

அந்தக் கடிதத்தைக்கூட அவளால் அலட்சியம் செய்ய முடிந்தது. மறுநாள் வழக்கமாக பாடசாலை சென்ற ஜஹானியை நண்பி விஷமம் நிரம்ப கண் சிமிட்டினாள். "ஏன்டி ஒரு மாதிரியா சிரிக்காய்?" "எங்கட நானா ஒன்ன விரும்புறாராம், வூட்டுல சொல்லி சம்மதம் வாங்கிட்டாரு, மதினி ஆகப்போறாய், அதான் சிரிச்சன்." தோழியின் கிண்டலால் முகம் சிவந்தாள் ஜஹானி.

காதலுக்கு யார்தான் விதிவிலக்கு. அது ஒன்றும் கடையில் வாங்கும் சரக்கல்லவே, சாபிரும்- ஜஹானியும் சிறகு முளைத்துப் பறந்தனர். கனவுகளால் குளித்தனர். கடிதங்களால் நனைந்தனர். நட்சத்திரங்களை எண்ணினர். அர்த்தமற்ற விடயங்களும் அவர்களை பரவசப்படுத்தின.

ஆனால் அது பூகம்பத்திற்கு முந்திய அதிகபட்ச மகிழ்ச்சியாய் தான் போகும் பாதையில் பள்ளம் உள்ளதென்று அறியாத குருடனாய் அக்களிப்பும், கனவும் கலைந்து போயின. சாபிரின் குடும்பம் ஜஹானின் வீட்டிற்குப் போய் வந்ததிலிருந்து, சோர்ந்து கிடந்தது. அவன் இதயமெங்கும் வேதனை முட்கள். "உம்மா அவங்க என்னதான் சொன்னாங்க? ஏன் எல்லோரும் 'உம்'மென்னு இருக்கீங்க?" நிலைமை விபரீதமாய் இருக்கும் என்ற ஊகம். சாபிர் பதறினான்.

"மகன் நீ ஜஹானிய மறந்துடு." "ஏம்மா அவன் குரல் பிசிற்றியது. சொற்கள் உடைந்திரிந்தன. விழிகள் கலங்கியிருந்தன. "சின்ன வயசில அவட மச்சானுக்கென்று பெரியவங்க பேசி, சாணகூட போட்டாங்களாம். அத மாத்தேலாதாம்." சாபிரின் கனவில் இடி இறங்கியது. அவன் தலை துகள் துகளாய் வெடித்தது. சதை முழுக்க எரிந்தது. இவ்வளவு சீக்கிரமாய் நினைவுகளில் விஷம் படர்ந்ததை அவனால் ஜீரணிக்க முடியவில்லை.

அங்கே ஜஹானி புழுவாய் துடித்தாள். தனக்கு ஏற்கெனவே மச்சானை பேசி இருப்பது தெரியாமல் மனதால் சாபிருடன் வாழ்ந்து விட்டதை எண்ணி பொருமினாள். அவன் மனதில் இன்ப ஊஞ்சல் கட்டி தன் விரல்களால் பிய்த்தெறிந்ததை நினைத்து வெம்பினாள். அவளின் காதலுக்காய் போராடினாள். கண்ணீர் மல்க கதறினாள். அரக்க குணம் படைத்த அவளின் மாமாமார்கள், சாபிரை மறந்து விடுமாறும், அவன் உயிரோடு இருக்க வேண்டுமெனில் மச்சானை திருமணம் முடிக்குமாறும், அச்சுறுத்தினர். ஜஹானி கலங்கினாள். தன் இதய தீபம் சாபிருக்கு இவர்களால் துன்பம் ஏற்படும் என்று அஞ்சினாள். அவன் உயிர் வாழ வேண்டும் என்று பிரார்த்தித்தாள். முடிவு-காதல் தோற்றது. வசந்தகாலமொன்றின் வசீகரகுளிர்ச்சி தணலானது.

ஜஹானின் இந்நிலை அறியா சாபிர், அவளை 'துரோகி' என்பானா? இல்லை, சிறையில் அடைபட்டு செத்து மடியும் அவளுக்காய் ஒரு துளிக் கண்ணீரை அனுப்பி ஆறுதல் சொல்வானா? இருந்தும் நினைவுகளை துடைத்தெறிய முடியவில்லை. இன்னும் அழுகிறாள். காலத்தைவிட மருத்துவம் யாதுண்டு? நாமும் அவளுக்காய் இறைஞ்சுவோம்!

"பாட்டி வந்திருக்காங்க..." ஞாயிறு காலை கட்டிலை விட்டு எழும்புமுன்னரே தங்கை குரல் கொடுத்தாள். "சீக்கிரமா எழும்பித் தொலை. இல்லாட்டி பொம்பளைப் புள்ள இவ்வளவு நேரம் தூங்கறதான்னு புலம்ப ஆரம்பிச்சுடுவாங்க." எச்சரிக்கை வேறு. எரிச்சலோடு எழும்பியாயிற்று.

"ஹாய்... பாட்டி..." வாயை விட்டு டூத் பேஸ்ட் மணம் போகவில்லை. அதற்குள் பாட்டியை குசலம் விசாரித்துவிட்டு கொண்டு வந்திருந்த பட்சணங்களை அள்ளிக் கொண்டு போயாயிற்று.

ஞாயிறு பத்திரிகைகளை விரித்து வைத்துக் கொண்டு உட்கார்ந்த போது கொண்டிருந்தது.

"இந்தக் காலத்தில பிள்ளைகள் ரொம்பமோசம். பெத்தவங்கள கவனிக்கிறதில்ல. மதிப்பு தர்றதில்ல. பார்த்தீங்களா?" நாடகக் காட்சிகளில் உருகிப்போனார் பாட்டி..

மௌனமாக இருந்தோம். என்ன சொல்ல?

இரவு நீண்டது. எனக்குள் ஏதேதோ கனவுகள். கனவிலும் பாட்டி. என்னென்னவோ அறிவுரை கூறுகிறார், ஏசுகிறார், பேசுகிறார். இடைக்கிடை கனவுக் காட்சிகளில் சஞ்சய் தத்தும் மாதுரி டிக்ஸிட்டும் பாட்டுப் பாடினார்கள். பாட்டி அவர்களை முறைத்துப் பார்த்தாள். கனவுதான் தொடர்பின்றி

**ஷர்மிளா இஸ்மாயில்-கண்டி**



# ஓ! பாட்டி நல்ல பாட்டிதான்

பாட்டி வந்தார்."என்னடியம்மா இதையெல்லாம் வெச்சுக் கொண்டு உட்கார்ந்திட்டியே. அம்மாக்கு ஒதவி ஒத்தாசை பண்றதில்லையோ?" வாதிட்டுப் பலனில்லை. எழுந்து கொண்டேன்.

பொன்மாலை நேரம். டி.வி முன்னிலையில் அமர்ந்த போது பாட்டியும் வந்தார். சினிமா பாடல்கள். ஹீரோக்களும் ஹீரோயின்களும் தனியாக, குழுவாக ஆடினார்கள். பாடினார்கள்.

"சீ... இதென்ன பார்க்கவே அசிங்கமா... ஆட்டமா ஆட்டம்.... டெலிவிசன பேசாம மூடிப்போடு" நெருக்கமான காதல் (அல்லது காதலின் பெயரிலான காமம்) கட்டத்தில் பாட்டி வெறுப்பானார். மறுக்க முடியுமா?

இரவாயிற்று "இதென்ன பார்க்கறீங்க? இந்த நேரத்துக்கு நல்ல நாடகம் போகுமே?" நாம் வேறொரு சானலில் பாடல் நிகழ்ச்சி பார்த்ததை பாட்டி 'கட்' பண்ணிட்டார். ஞாயிறு இரவு நாடகம் போய்க் வந்தது. யாரோ சமையலறையில் புகுந்து களவாட வருவதாக பயம் தரும் காட்சிகள். கத்தியும் கையுமாக. என் பெயரைச் சொல்லி அம்மா பயந்து கத்துவதாக கனவு.

"எழும்பு, எழும்பு" உண்மையில் அம்மாதான். இரவு 1 மணியளவில் தட்டி எழுப்பினார். "என்னம்மா?" கண்களை கசக்கி பயந்தேன். கனவு பலித்ததோ? அம்மா மௌனமாக சமையற்கட்டு பக்கமாக கையை காட்டினார். "மூடிய கதவு திறந்திருக்கு. லைட் கூட போட்டில்ல. ஏதோ சத்தம் வேறு கேட்டது." அப்பா வேறு வீட்டில் இல்லை. நடுங்கியது எனக்கு. ஏதோ சத்தம் தெளிவாகக் கேட்டது. நிச்சயம் கள்வன் தான். என்ன செய்வது? கம்பை எடுப்பதா? கத்துவதா? யோசித்து வியர்த்த போது காலடியோசை. சிரித்துக் கொண்டே பாட்டி. "தாகம் தாங்க முடியல. கொஞ்சம் தண்ணீர் குடிச்சேன்.." என்றவாறு வந்து கட்டிலில் சாய்ந்தார்.

# சொன்னதை மறந்தது ஏனோ?



தருவது
-ரசிகன்-

இன்றோடு சந்தித்த போர்க்களங்கள் நூறு! நூறிலும் விளைந்தது பகைவருக்கு கேடு.

வெற்றி என்ற மூன்றெழுத்து நிரந்தரமான நெற்றித் திலகமாகவே மாறி விட்டது.

பகை சுற்றிவந்த போதும் புகையை ஊதிவிடும் அலட்சியத்தோடு பொருதி வெற்றி கண்ட பரிதிப் படை! உறுதி குலையா மறவர் படை!

வீர இளங்கோவுக்கு பெருமிதத்தால் தோள்கள் விம்மின.

வீர இளங்கோவுக்கு தன் சேனையை நோக்கியபோது நெஞ்சு பூரித்தது.

களம் நூறு! கண்ட விழுப்புண்கள் பல நூறு! கடந்து வந்த தடைகள் நூறு, நூறு!

வெற்றிக்கனியைச் சுவைத்திடும் களிப்பில் காயங்கள் ஆறும்.

வெற்றி என்னும் எல்லையைத் தொட வீர மாயங்கள் செய்த படைக்கு வீர இளங்கோ மனதுக்குள் நன்றி சொன்னான்.

நேராகச் சொன்னால் "நம்மையெல்லாம் வேறாகவோ நோக்குகிறீர்கள்; கடமை செய்வது கைமாறு கருதியோ? கண்ணின் மணியிலும் இனிய பொன்மணித்திரு நாட்டின் நிரந்தர எழுச்சிக்கு நீரூற்ற வேண்டியது கடமையன்றோ?" என்று கேட்டுவிடுவார்கள்.

அதனால் மனதுக்குள் நன்றி சொல்லி தளபதி வீர இளங்கோ விடைபெற்றான்.

□□

வழிமேல் விழியை வைத்திருந்தவள் அவன் வருவதையறிந்ததும் ஓடிவந்து இல்லக் கதவை வெல்லக் கனவுகளோடு திறந்து புன்னைகத்தாள்.

"அட... மாயமோ என்று நினைத்தேன். வருவது நான்தான் என்று உனக்கு எப்படித் தெரியும்?"

"பாசம் மெய் என்றால் பாதச் சுவடுகளின் ஒலியும் இதயத்தில் எதிரொலிக்கும்."

வீர இளங்கோ நகைத்தபடி அவளை அணைத்தான். அணைத்தபடி அவளின் கழுத்துக்குள் உதடுகளை புதைத்தான்.

சிலிர்த்தது தேவதை. அவன் நெஞ்சில் பதிந்து நினைவில் இன்ப வேகத்தை கொடுத்தன இரு கனிகள்.

இருகனிகள் அவன் நெஞ்சில் மோதி நசிந்திட, இன்ப வேதனை அவள் நெஞ்சுக்குள் எழுந்திட அவன் முதுகை இறுக்கினான்.

'மூச்சுத்திணறும் இறுக்கம்தான். ஆனாலும் மூச்சு ஏன் திணறவில்லை, மோக வீச்சு அன்றோ மனதை தாபக் குளத்தில் தள்ளுகிறது.

இனியும் பொறுத்தால் என்னாகும்? மோக வீச்சால் மனது புண்ணாகும்.

அள்ளியெடுத்தான் தன் இரு கரங்களில். மலருடல் சுமந்து துள்ளி நடந்தான், காத்திருந்தது கட்டிலறை.

"இன்று நூறு வேண்டும்."

என்றான் வீர இளங்கோ. இதழ் ஊறும் போதையோடு அவள் கேட்டாள்,

"அது என்ன நூறு?"

"இன்று நான் கண்டது நூறாவது போர்க்களம்! சமர்க் களத்தில் பெற்ற வெற்றிக்கு பரிசாய் உன் சரச இதழ்கள் கொட்ட வேண்டும் நூறு 'இச்' ஒலிகள்!"

வெட்கத்தில் முகம் சிவந்தபோதும் அவள் நெஞ்சுக்குளளும் மோக வெள்ளம்தான்.

வெட்கத்தை அடித்துச் சென்றது மோக வெள்ளம்.

அதனால் அவன் கேட்டதை விட ஒன்று அதிகமாகவே கொடுத்து நிறுத்திவிட்டு,

"போதுமா நூற்றி ஒன்று"

என்று கேட்டாள்.



"போதாது இன்னும் வேண்டும்!
தீராது தீராது எந்தன் மோகம்!
வாராது வந்துதித்த வண்ண மயிலே
மஞ்சம் தாங்காமல் தள்ளாடும்
யுத்தம் வேண்டும்! சித்தம் அதை
சொர்க்கம் என்று எண்ண வேண்டும்!"

அவன் தாவினான், தாங்கித் தழுவி ஏற்றாள்.

கன்னத்தில் கன்னம் வைத்து அவள் காதுக்குள் அவன் கேட்டான்.

"உனக்கும் ஆசை தானே?"

இது என்ன கேள்வி. 'ஆம்' என்றா சொல்ல முடியும்? வெட்கம் தடுக்கும்.

அதனால் வாய்திறந்து சொல்லாமல் 'அவன் முதுகெலும்பு உடையும் என்று நினைக்கும் வண்ணம் இரு கரத்தால் இறுக்கிக் கொண்டாள்.

ஆசையின் வேகத்தை அவள் குறிப்பாய் உணர்த்த, தாபத்தை இனித் தடுத்தால் மோசம் என்று காரியத்தில் குறியாய் மாறி இன்ப களத்தினிலே குதித்தான் காளை.

சரசகளமானது மஞ்சம்!

□□

அவள் விழிகள் இரண்டும் கொவ்வைப் பழங்களாக சிவந்திருக்க, தோழியின் முகத்தில் குறும்பு. இதழ்களில் அரும்பியது கேள்வி,

"தூக்கம் தொலைந்ததோ தோழி. காரணம் சொல்வாயோ கள்ளி!"

"சும்மா போடி! கற்பனை செய்வதும் காரணமின்றி கதையளப்பதும் உன் வேலையாய்ப் போச்சடி."

"கற்பனை என்று கதையை மாற்றாதே. வித்தைகள் புரிந்தாரோ நீ நித்திரையை மறப்பதற்கு?"

தோழி துளைத்தெடுத்தாள்.

"நித்திரை இல்லையென்று உனக்கு சொன்னது யாரடி? போடி அப்பாலே!"

"காட்டிக்கொடுக்கும் விழி. கட்டில் களத்தினிலே காலை வரை தொடர்ந்த மோகக்கதைகளெல்லாம் உன் கோலவிழிகள் சொல்லும்!"

இனியும் மறைத்தால் தோழி ஊரையே கூட்டிவிடுவாள். அதனால் ஒப்புக் கொள்வதே வழி.

"கெட்டிக்காரியடி நீ."

"கெட்டிக்காரி. நான் என்பது இருக்கட்டும். விடியும்வரை கொட்டிதந்தாரோ கோடி இன்பங்களை, வாடி கதை சொல்லடி!"

"போடி, உனக்கு வெட்கமேயில்லை!"

"விடியும்வரை வெட்கமில்லை யாருக்கு? நீ வெட்கத்தைப் பற்றிச் சொல்லாதே பாருக்கு!"

தோழி நகைத்தாள். 'விழிகள் காட்டிக்கொடுத்துவிட்டனவே. பொல்லாத விழிகள்!' என்று அவள் சபித்தாள் தன் விழிகளை! தோழி கேட்டாள்,

"வாக்குத் தவறி விட்டாயடி நீ."

"என்னடி?"

"பட்டினிபோடு! அவர் படுவார் பாடு! என்று உரைத்த மொழி கேட்டு 'நன்று இது' என்று போனாய். அவரைக் கண்டவுடன் அது மறந்து, கண் சிவக்க களித்திருந்து வந்தாய் நீயே! இது முறையோ? இது தகுமோ?"

தோழி கேட்க, அவள் வெட்கி, இதழ் திறந்தாள்.

"உன்னிடம் உறுதிமொழி சொன்னது மெய். ஆனால் உறுதி மட்டும் காற்றில் பறந்ததும் மெய். சொன்ன மொழி மட்டும் மறவாமல் நினைவில் இருப்பதும் மெய்."

"ஆசை செய்த மோசம்தானே!"

"இல்லையடி"

"பொய்யைப்பார். பனையளவு வளர்ந்த ஆசை ஊடல் செய்யும் மன நினைவை வென்றது மெய்."

"அடி போடி"

சிணுங்கினாள். வெட்கித்தாள்.

ஏன் என்னை விரட்டுகிறாய்? மீண்டும் கதை படிக்கும் அவசரமோ?"

"நான் ஒன்றும் விரட்டவில்லை. நீதான் புதுக்கதைகள் சொல்லுகிறாய்!"

"புதுக்கதையல்ல இது. திருவள்ளுவர் சொன்ன குறள்."

"அது என்ன குறள்?"

"பனையளவு ஆசை நெஞ்சில் எழும் போது தினையளவு கூட ஊடல் செய்யும் எண்ணம் எழக் கூடாதாம். வள்ளுவரே சொல்லிவிட்டார். அதனால் நீ வாக்குத் தவறியதை மன்னித்தேன். உன் ஆசை இடறியதை ஊகித்தேன்."

தோழி கேலி செய்தாள். தோழி சொன்ன குறள் அவளுக்கும் தெரியும் தான். அதனை மனதுக்குள் சொல்லிப் பார்த்தாள்.

"தினைத் துணையும் ஊடாமை வேண்டும் பனைத் துணையும்
காமம் நிறைய வரின்"

அதிகாரம் 129–குறள்–1282

## குறுக்கெழுத்துப் போட்டி இல–99

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | ■ | 2 | ■ | 3 | | 4 |
| 5 | | | ■ | | ■ | |
| | ■ | 6 | | | | ■ |
| | ■ | | ■ | | ■ | 7 |
| ■ | 8 | ■ | 9 | | 10 | |
| 11 | | | | ■ | | |
| ■ | 12 | | | ■ | | |

### இடமிருந்து வலம்

03. முத்தமிழில் ஒன்றான இதனை கிராமப்புறத்தவர்கள் இப்படி அழைப்பர்.
05. இருவருக்கு மத்தியில் ஏற்படும் பிணக்கு.
06. மாணாக்கர்களுக்கு ஆசிரியர் கொடுக்கும் பயிற்சிகளில் ஒன்று.
09. இன்று பரவலாக நம்நாட்டில் சகலருடைய வாயிலும் உச்சரிக்கப் படுவது.
11. அன்றாடக் கடமையை இவன் ஒழுங் காகச் செய்யாவிட்டால் உலகம் இயங்காது.
12. தானியங்களிலிருந்து தூசு அகற்றுவதற்கு பெண்கள் பயன் படுத்தும் ஒரு கருவி.

### மேலிருந்து கீழ்

01. ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று உருவாகக் காரணமானது இது.
02. இவற்றின் விலை கட்டுக்கடங்காமல் ஏறிக்கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.
03. மக்களின் நன்மைக்காக தோற்றுவிக்கப்பட்ட ஓர் அமைப்பு.
04. இரும்பில் இது பிடிக்கும்.
07. காளிதாசனின் காவியத்தின் மூலமாக அமையும் ஒரு அணிகலன்.
08. ஒரு செல்வந்தரின் திரண்ட சொத்துக்கு இது இல்லாவிட்டால் சிக்கல்தான்.
10. எந்த இயற்கை அனர்த்தங்களாலும் அழிக்க முடியாத சொத்து.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 13.05.1995க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-99
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல-97ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ■ | 1 வி | 2 த் | தை | ■ | 3 பே | னா |
| 4 நி | லா | ■ | 5 ல | வ | ன் | ■ |
| சி | ங் | 6 க | ம் | ■ | ■ | 7 த |
| ■ | கு | டி | ■ | 8 க | வ | லை |
| 9 து | ■ | கா | ■ | ரா | ■ | ப் |
| 10 பா | த | ர | ச | ம் | ■ | பா |
| ய் | ■ | ம் | ■ | பு | ■ | கை |

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 97இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்.**

1. செல்வி. என்.ஆர். யாழினி, கிருலப்பனை.
2. பாத்திமா நிரோஷா, வாழைச்சேனை.
3. எஸ். புஸ்பராஜா, மண்டூர்.
4. முஹமட் வபான், மாத்தளை.
5. செல்வி.பாத்திமா சானாஸ் வாபா, துல்ஹிரிய
6. செல்வி. ரி. பத்மலோஜனி, கொழும்பு-15.
7. பி. ஜெயகுமார். வவுனியா
8. திருமதி. வி. சுந்தரலிங்கம். ராஜகிரிய
9. செல்வி. தமயந்தி தங்கையா, கொழும்பு-13
10. ஏ. அப்துல் காதர், பேருவளை.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

## சிந்தியா பதில்கள்



**தரம் குறையும் ரி.என்.எல் தொலைக்காட்சி!**

பிரசாந்தின் 'ஆணழகன்' பற்றி சில வரிகள் கூறுங்களேன்?

என். நிரோஷா-நானுஓயா.

'ஆணழகி' என்று பெயரிட்டிருக்கலாம்.

□□

செஞ்சோற்றுக்கடன் தீர்த்தவர்களில் சிறந்தவன் கும்பகர்ணனா? கர்ணனா?

என்.எல்.முஸம்மில்-புதிய காத்தான்குடி-06.

கர்ணன்தான்.

□□

முதல் இரவில் எதைப்பற்றி முதலில் பேசக்கூடாது-

எச்.எம்.எம்.எம்.புத்தளம்.

எதைப்பற்றியும் அதிகம் பேசக்கூடாது. நேரம் பொன்னானது! ஹி...ஹி..ஹி.......

□□

பாரிஸில் நிதி உதவி கிடைத்திருப்பது பற்றி?

எம்.சங்கர்-கொழும்பு-06

எதிர்பார்த்தளவு கிடைக்கவில்லை. கிடைத்ததும் கட்டம் கட்டமாகத்தானாம் கையில் வரும்.

□□

சமீபத்தில் கொல்லப்பட்ட விநோதன் பற்றி என்ன நினைக்கிறீர்?

சா.கணேசநாதன்-வெள்ளவத்தை.

கொல்லப்பட்டமை கண்டனத்திற்குரியது தான். செத்த பின்னர் அவரை தமிழ் மக்களது தலைவராகப் பட்டம் கட்டும் சிலரது முயற்சியும் கண்டிக்கப்படவேண்டியது.

□□

காதலன் இனிப்பது ஏன்?

நிஸானா வனீர்-சீனன்கோட்டை

கரும்பாக நினைப்பதாலாக்கும்.

□□

டியர் சிந்தியா! உங்களை சோமாலியாவுக்கு நாடு கடத்தினால் என்ன செய்வீர்கள்?

செல்லையா ஸ்ரீகாந்த்-ஹட்டன்.

எல்லாம் ஒன்றுதான். இப்போது மட்டும் என்ன சொர்க்கத்திலா இருக்கிறோம்.

□□

தாய்க்கு இணையாக யாரை ஒப்பிடலாம்?

செல்லையா ரோமன்-இறக்குவானை.

ஈடு சொல்ல முடியாதவள்தான் ஈன்றெடுத்த தாய்!

□□

ரோஜாவை காதலிக்க என்ன வேண்டும்?

சே.சத்தியசொரூபன்-மட்டக்களப்பு.

பூக்களை இரசிக்கும் சோக்கான இரசனை வேண்டுமய்யா. (முறைக்க வேண்டாம்)

□□

மீனாவின் திருமணம் முடிந்துவிட்டதா?

மூர்சிதாப் பிரியன்-பொத்துவில்.

இல்லை. அதுசரி மூர்சிதா இருக்க உமக்கேன் மீனாவைப் பற்றிய கவலை? யாரது மூர்சிதா? வா இங்கே! உன் பிரியனை உடனே சிறையில் அடை. இதயச் சிறையில்! ஹா...ஹா....ஹா.....

□□

சிந்தியா! யுத்தம் எப்படி?

ஆர்.சிவகுமார்-கண்டி.

ஆரம்பமே பலத்த சத்தம்!

□□

டியர். சிந்தியா! ஐ.ரி.என்.இல் ஒளிபரப்பப்படும் படங்களையே ரி.என்.எல். ஒளிபரப்புவது ஏன்?

செல்வி நஸீராஜ்-சம்சுதீன்.

ரி.என்.எல். தொலைக்காட்சியில் உள்ள தமிழ் தெரிந்தவர்களுக்கு நிகழ்ச்சிகளின் தரம் காக்கத் தெரியவில்லையா, அல்லது ஐ.ரி.என். இடம் கசட் கடன்வாங்கிப் போட்டு மாதத்தில் இத்தனை தமிழ் படம் போட்டோம் என்று கணக்குக் காட்டுகிறார்களா? குழப்பமாக இருக்கிறது.

□□

ஈழப் போர் 3 யாருக்கு வெற்றி மாலை?

எஸ்.சேந்தன்-நீர்கொழும்பு.

யாரது தோளுக்கும் அந்தப் பாக்கியம் கிடைக்கப்போவதில்லை. இது யாருக்குமே வெற்றி கிடைக்காத விரய யுத்தமய்யா!

□□

பொதுத் தேர்தல் எதிர்வரும் ஜூன், ஜூலையில் நடைபெறுமா?

வீ.விக்னவினாயகம்-மட்/கன்னன்குடா.

உள்ளூராட்சி சபைத் தேர்தல்களையே தள்ளிவைக்கப்போவதாகப் பேசிக்கொள்கிறார்கள். நீர் என்னடா வென்றால்....

□□

அரசின் பொருளாதார தடை தளர்வும், தடையும் புலிகளுக்கா, வடபகுதி மக்களுக்கா?

பிறேமானந்தன்-கல்முனை-01.

போர் ஆரம்பித்த சூட்டோடு தடைவிதித்த வேகத்தைப் பார்த்தால் இரண்டுமே புலிகளை மனதில்வைத்தே செய்தது போலத்தான் இருக்கிறது.

□□

கையேந்தி சீதனம் வாங்கும் ஆண்கள் பற்றி உங்கள் கருத்து?

மொஹமட்டீன்-ஹுனுபிட்டிய.

"கூலிக்காரன் நான் கூலிக்காரன்-கணவன் என்னும் தொழில் பார்க்கும் கூலிக்காரன் "என்று அவர்கள். பாடலாம் நன்றாக இருக்கும்.

□□

போனால் போகட்டும் என்ற பாடலைப் பாடியவர் யார்.

எஸ்.இஸ்ஸதீன்-பொலனறுவ.

ரி.எம்.சௌந்தரராஜன். படம், 'பாலும் பழமும்'.

□□

நீங்கள் மிகவும் ரசித்த ஒரு ஜோக் சொல்லுங்கள் ப்ளீஸ்?

க. பாஸ்கரன்-கண்டி.

கரும்புலித் தாக்குதல் செய்தி வந்த யாழ் பத்திரிகைகளை யாழ்ப்பாண மக்கள் பகிஷ்கரித்துவிட்டதாக இலங்கை வானொலி வெளியிட்ட செய்தி. அந்த செய்தி எழுதியவருக்கு நகைச்சுவை உணர்வு அதிகம் என்பது என் அபிப்பிராயம்.

□□

# மகாபாரதம்

அங்கம் 77

இவ்வாரம் (07.05.95 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரீ.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்



காலத்தின் குரல்:

காலைக் கதிரவனும் கீழ்வானில் தான் தோன்றி
மாலை மறைகின்றான் மேலை விளிம்பினிலே;
உண்மைக்கும் பொய்மைக்கும் உற்றெழுந்த போரதுவும்
எண்ணற்ற வீரர்களின் இன்னுயிரை மாய்க்கிறது;
ஒன்றன்பின் ஒன்றாய் நாளோடி மறைந்தாலும்
குருச்சேத்திரப் போரின் குரூரம் மறையவில்லை!

போர்க்காட்சிகள்.....சங்கொலி முழங்க அன்றைய போர் முடிவடைகிறது.

காலத்தின் குரல்:

ஒன்றன் பின் ஒன்றாக ஒன்பது நாள் போரின்று
நின்ற பின்னர் கதிரவனும் நிழலை மறைத்துவிட்டான்.
மன்று புகழ் காந்தாரி வயிற்றுதித்த மைந்தர்களில்
இன்றுள்ளோர் ஏழுபத்தும் ஈரிரண்டும் மட்டிலுமே!
பாண்டவரின் பாசறையில் பரந்தாமன் முன்னிலையில்
பார்த்தனுடன் சோதரர்கள், பாராளும் வேந்தர்களும்
சேர்ந்துள்ளாராங்கே சிறந்ததோர் முடிவெடுக்க
ஆர்வம் அரசோச்ச அவ்விடத்தில் புகுந்தேன் யான்!

-காட்சி தொடக்கம்-

குருச்சேத்திரம்–யுதிஷ்டிரரின் பாசறை.

**யுதிஷ்:** மத்ஸய நாட்டதிபதியே! எமது வெற்றிக்கு ஏது வழி?

**மத்.மன்:** மகாராஜா! கங்கை மைந்தர் உயிருடனுள்ளவரை இந்தப் போரில் நாம் வெற்றி பெற முடியாது!

**திரௌ:** ஆனால், அவர் விரும்பினால் தானே அவர் தன் முடிவினை எய்த முடியும்!

**திஷ்ட:** அதே தான் சிரமமாக இருக்கிறது! அத்தகைய வரம் மட்டும் அவரிடமில்லையானால் அவரை எப்போதோ நானே ஒழித்துக் கட்டியிருப்பேன்!

**அர்ச்:** அவரைப் பற்றி இத்தகைய வார்த்தைகளை உதிர்ப்பது சரியல்ல, சகோதரர் திஷ்டத்துய்மன் அவர்களே!

**திஷ்ட:** அப்போ அவருடைய காலடியில் விழுந்து, "இந்தப் போரினில் தங்களால்தான், இந்த ஒன்பது நாட்களிலுமே எங்களால் வெற்றிபெற முடியவில்லை" என்று கூறட்டுமா?

**கிருஷ்:** இது சத்திரிய வீரனுக்குரிய பேச்சுத்தான்!

**திஷ்ட:** அவர் காலில் விழ வேண்டும் என்கிறீர்களா?

**கிருஷ்:** அத்தகைய ஒரு மகானின் பாதங்களில் விழுந்து ஆசிபெறுவது பெரும் பேறாகும். ஆனால் அதனை நீர் செய்வதில் அர்த்தமில்லை. பாண்டவரில் மூத்தவர் அதனைச் செய்ய வேண்டும்! ஆம்! கங்கையின் மைந்தரே 'வெற்றி பெறுவாயாக' என்றொரு வரத்தை யுதிஷ்டிரருக்கு அளித்துள்ளார் அல்லவா? அத்தகைய ஆசியைத் திரும்பப் பெற்றுவிடுமாறு அவரிடம் வேண்டிக்கொள்ள வேண்டும்!

**யுதிஷ்:** என்ன...? அவரளித்த வாழ்த்தினை அரிடம் திரும்பிக் கொடுக்க வேண்டுமா வாசுதேவா?

**கிருஷ்:** ஆமாம் மூத்தண்ணா! அவரே வெற்றிக்கான வாழ்த்தினை அளித்துவிட்டு அத்தகைய வெற்றிக்கும் உங்களுக்குமிடையே வில்லில் நாண் பூட்டியவாறு நிற்கலாமா? பசித்திருப்பவன் முன்னால் புசிக்க எதுவுமற்ற தங்கத் தட்டை வைப்பதில் என்ன பயன்? அவரளித்த ஆசி அர்த்த முள்ளதாய் அமைய அவரே வழி சமைக்க வேண்டாமா? இந்த தர்மயுத்தத்தில் அதர்மத்தின் பக்கமே தான் சார்ந்திருப்பதையும், கவுரவப் படைத்தலைவராக தானே பொறுப்பேற்றிருப்பதையும், தான் விரும்பினால் மட்டுமே சாவை அணைத்துக்கொள்ள முடியும் என்பதனையும் தெரிந்து வைத்துள்ள அவரே உங்களுக்கு வெற்றி பெற வாழ்த்துக் கூறியது எதற்காக?

**அபிமன்யு:** இந்தப் புதிருக்கு தாங்கள் விடைகாண முடியாதா மாமா?

**கிருஷ்:** இது முப்பாட்டனுக்கும் கொள்ளுப் பேரனுக்குமிடையிலுள்ள சொந்தப் பிரச்சனை மகனே! அவர்களே தீர்த்து வைக்க வேண்டிய சிக்கல்!

-காட்சி மாற்றம்-

பீஷ்மரின் பாசறை–யுதிஷ்டிரரும் அர்ச்சுனனும் பீஷ்மரைக் காண வருகிறார்கள்.

**யுதிஷ்:அர்ச்:-** வணக்கம் பிதாமர் அவர்களே!

**பீஷ்ம:** வாருங்கள் மக்காள்! வெற்றி உண்டாகட்டும்!

**யுதிஷ்:** வாழ்த்துக்களைப் பெற நாங்கள் இங்கு வரவில்லை பிதாமகரே! பரசுராமரின்பிரதான சீடரான தாங்கள் போர்க்களத்தில் போர் புரிவதைக் காண எங்கள் கண்கள் பாக்கியம் செய்துள்ளன; எங்கள் உடல்கள் தங்கள் பாணங்களால் காயங்களைப் பெறும் பேறு பெற்றுள்ளன. இவற்றின் சார்பில் நன்றி கூறவே இங்கு வந்தோம். தங்கள் ஆசிகள் எங்களுக்கு வேண்டாம்!

**பீஷ்ம:** என்ன கூறுகிறீர்கள் மக்காள்? உங்கள் எதிரிகளில் ஒருவனாக என்னையும் கணித்து விட்டீர்களா!

**யுதிஷ்:** எங்களுக்கு வெற்றிபெற வாழ்த்தினை வழங்கிய தாங்களே வெற்றிக்கும் எங்களுக்கும் இடையில் தடையாக நிற்கிறீர்களே! தங்கள் வாழ்த்து எங்கள் முன் குற்றவாளிபோல் தலை தாழ்த்தி நிற்கிறதே!

**பீஷ்ம:** உண்மைதான் மக்களே! உங்கள் வெற்றிக்குக் குறுக்கே நான் நிற்கிறேன். ஆனால், அது தவிர்க்க முடியாததொன்று. நான் தோல்வி அடைய முடியாது; அதேபோல் என்னை வதைப்பதும் இலகுவானதல்ல!

**யுதிஷ்:** அதனால் தான் போர் தொடங்குவதற்கு முன்னர் தாங்கள் அளித்த வெற்றி வாழ்த்தினை தங்களிடம் திரும்பிக் கொடுத்துவிடும்படி வாசுதேவன் கூறி அனுப்பிவைத்தார்!

**பீஷ்ம:** ஓஹோ! அப்படியா? அவரிடம் கூறுங்கள்: நான் கொடுத்த எதனையும் திரும்பப் பெறும் பழக்கம் என்னிடமில்லை என்று. அது வாழ்த்தாக இருந்தாலும் சரியே...! எனது வில்லையோ பாணங்களையோ உடைக்க சம்மதிப்பேனே ஒழிய, எனது வார்த்தைகளை உடைக்க ஒரு போதும் சம்மதிக்க மாட்டேன்! அது துரியோதனனுக்குச் சரிவரலாம்!

**யுதிஷ்:** எங்களை மன்னித்தருளக் கோருகிறோம் பிதாமகரே!

**பீஷ்ம:** நீடூழி வாழ்க மக்காள்! கிருஷ்ணனுக்கு நன்கு தெரியும்.... அவன் சார்ந்துள்ள பக்கம் வெற்றி பெறும் என்பதை அவன் நன்கு அறிவான். அவனே சகலமும் அறிந்தவன். உங்கள் வெற்றிக்கும் உங்களுக்குமிடையில் நிற்கும் இந்த கங்கையின் மைந்தனை அப்புறப் படுத்தும் மார்க்கமும் அவன் அறிவான்! பெண்ணொருத்தி என்னுடன் போரிட முன் வருவாளானால், வீர பரசுராமரின் சீடனான நான் எந்த ஆயுதத்தையும் தீண்ட மாட்டேன். அதன் பின்னர்... அன்பு அர்ச்சுனா....! நிராயுதபாணியான என்னை முறியடிப்பதில் தடங்கல் எதுவும் ஏற்படப்போவதில்லையே!

**யுதுஷ்:** சத்திரியர்களுக்குரிய போர்க்களத்தில் பெண் ஒருத்தி எங்கே வரமுடியும் பிதாமகர் அவர்களே!

**பீஷ்ம:** யுதிஷ்டிரா! வாசுதேவ கிருஷ்ணன் விடுத்த புதிரினை விடுவித்து விட்டேன். இந்தச் சத்திரியன் கூறியவற்றை அந்த கிருஷ்ணனிடம் கூறுங்கள்!

**யுதிஷ்:** போய் வருகிறோம் பிதாமகரே! வணக்கம்!

**பீஷ்ம:** நீடூழி வாழ்க...!

அர்ச்சுனன் தனியாக பீஷ்மர்முன் நின்று தலை தாழ்த்தி வணங்குகிறான்.

**பீஷ்ம:** வெற்றிபெறுவாயாக மகனே!

-காட்சி மாற்றம்-

யுதிஷ்டிரரின் பாசறை– யுதிஷ்டிரருடன், கிருஷ்ணர், அர்ச்சுனன்,மற்றும் திரௌபதி.... கிருஷ்ணர் பழங்களைக் கொடுக்கிறார். யாரும் அவற்றைப் புசிக்க விரும்பவில்லை.

**அர்ச்:** கேசவா! மூத்த அண்ணன் கேட்ட கேள்விக்கு தங்கள் பதில் என்ன? பிதாமகரை எதிர்த்துப் போரிடத் துணிந்த பெண் எங்கே இருக்கிறாள்?

**திரௌ:** ஏன்? அதற்கு நான் முன் வரலாகாதா?

**கிருஷ்:** பார்த்தாயா பார்த்தா? திரௌபதி துணிந்து விட்டாள். பிரச்சனை சுலபமாகத் தீர்ந்துவிட்டது!

**யுதிஷ்:** சத்திரியர்களின் பெருமைக்கு அது இழுக்கல்லவா வாசுதேவா?

**கிருஷ்:** உங்கள் கூற்றும் நியாயமானதே! ஆண்கள் இருக்கும் போது ஒரு பெண் ஏன் போர் முனை செல்ல வேண்டும்?

**திரௌ:** வாசுதேவா! இங்கே உள்ள இந்த ஐந்து பெரு வீரர்களும் தங்கள் சகோதரர்களான காந்தாரி மைந்தர்களைக் கொல்லத் துணிய மாட்டார்கள். நான் அவர்களுக்கு உறவினள் அல்லவே? நான் தானே பாதிக்கப் பட்டவள்! கேவலப்படுத்தப்பட்டவள்!

**கிருஷ்:** நீதிக்குப் புறம்பான வார்த்தைகளை உதிர்ப்பது உன்போன்ற பெண்ணுக்கழகல்ல! உண்மையில் அவர்கள் பெருவீரர்கள்தான்! உன்னுடைய அவிழ்ந்து கிடக்கும் கூந்தலுக்காக இலட்சோப இலட்சம் மக்கள் பலியிடப்பட்டனர் என்று வரலாறு உன்னைத் தூற்ற வேண்டுமா? நீ சாதாரண பெண்ணல்ல கல்யாணி! பெண் உலகத்துக்கே பெருமைக்குரியவள் நீ! அடிப்படைப் பிரச்சனைகள் பற்றிய முக்கியமான பேச்சுக்கள் இடம் பெறும் போது, உன்னுடைய கூந்தலைப் பற்றிப் பிரஸ்தாபிப்பதைத் தவிர்த்துக்கொள்! பெரியண்ணன் யுதிஷ்டிரரின் கூற்று சரியானதே! நீங்கள் எல்லோரும் உயிருடன் இருக்கும் போது பாஞ்சாலி போர்க்களம் போக முடியாது. ஆனால் சகோதரர் சிகண்டி போர்முனை செல்வதை யாராலும் தடுக்க முடியாதே!

**அர்ச்:** சிகண்டி இணையற்ற தேர்ச்சாரதிதான். ஆனால் பிதாமகர் ஒரு பெண்ணைத்தானே குறிப்பிட்டார். சிகண்டி பாதி பெண்ணாக இருக்கலாம்!

**கிருஷ்:** பார்த்தா! உனது பார்வைக்கு அவ்வாறு தோற்றமளிக்கலாம். ஆனால் பிதாமகர் நிச்சயமாக சிகண்டிக்கு எதிரில் ஆயுதங்களை ஏந்த மாட்டார்!

**சகா:** காரணம் என்ன வாசுதேவா?

**கிருஷ்:** சகாதேவா! பீஷ்மரை பொறுத்தவரை சிகண்டி ஒரு பெண்தான். தெரிந்தோ தெரியாமலோ பீஷ்மர், காசி நாட்டு இளவரசி அம்பாவை முன்பு அவமதித்து விட்டார். எத்தனை பிறவி எடுத்தாலும் கங்கா புத்திரரின் மறைவுக்கு தானே காரணமாக இருப்பேன் என்று அம்பா அன்று சபதமிட்டாள். இன்று அதே அம்பாவே சிகண்டி உருவில் காணப்படுகிறாள்! இதோ குருச்சேத்திரத்திலும் சிகண்டியை காண்கிறோம்!

**யுதிஷ்:** ஆனால் பீஷ்மரால் அம்பாதான் சிகண்டி என்பதை அறிந்து கொள்ள முடியுமா?

**கிருஷ்:** அவர் சாதாரணமானவரல்லவே! அவர் கங்கையின் மைந்தரல்லவா? அவர் முன் சிகண்டி போய் நின்றதும் அம்பாவே சிகண்டி என்பதை அவர் உடனடியாகப் புரிந்து விடுவார்.

-காட்சி மாற்றம்-

குருச்சேந்திரத்தின் ஒருபுறம்–பீஷ்மர் தன் தாய் கங்கையைக் காண்கிறார்.

**பீஷ்ம:** வணக்கம் அம்மா!

**கங்கை:** மகனே! உன்னை எவ்வாறு வாழ்த்த வேண்டும்?

**பீஷ்ம:** சொர்க்க வாழ்வு கிட்டும்படி வாழ்த்துங்கள் தாயே! கடந்த காலத்தை சீர்தூக்கிப் பார்த்தேன் அம்மா! எனது வாழ்வில் நான் கண்டது நட்டமா அல்லது இலாபமா என்பதனை அளவிட முடியவில்லை!

**கங்கை:** தனக்கென எதையும் செய்யாத எவனுடைய வாழ்வும் நட்டமடையாது மகனே!

**பீஷ்ம:** ஆனால் அம்பாவுக்கு நான் தர வேண்டிய கடன் ஒன்று பாக்கி இருக்கிறது. யுதிஷ்டிரனுக்கு வெற்றி கிட்ட வேண்டும் என்று நான் வழங்கிய வாழ்த்தினைத் திருப்பி எடுத்து விட வேண்டும் என்று வாசுதேவ கிருஷ்ணன் யுதிஷ்டிரனை என்னிடம் அனுப்பிய போதே எனக்குத் தெரிந்து விட்டது- அம்பாவுக்குரிய கடனை அடைக்கும் காலம் வந்து விட்டது என்று! சிகண்டியை முதன் முதலில் பார்த்த அன்றே அவனுருவில் அம்பாவை நான் கண்டு கொண்டேன்! அது சரி தாயே! தாங்கள் இந்த வேளையில் இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?

**கங்கை:** இந்த நிலத்தைக் கூட்டிப் பெருக்கித் துப்புரவு செய்து கொண்டிருக்கிறேன்!

**பீஷ்ம:** இதனை துப்புரவு செய்ய வேண்டிய காரணம் யாதோ தாயே?

**கங்கை:** நாளை இது உனது படுக்கையாகப் போகிறது மகனே! மகனே நீ நன்றாகக் களைப்படைந்து விட்டாயடா? இனி உனக்கு ஓய்வு தேவை!

-காட்சி மாற்றம்-

பீஷ்மரின் பாசறை– பீஷ்மர் தனது உதவியாளர்களை அழைத்து–அவர்கள் தொடர்ந்து பணி புரிய வேண்டியதில்லை என்று கூறி வெகுமதிகளை அளித்து அனுப்பி வைக்கிறார். பிரிய மனமின்றி வேதனையுடன் அவர்கள் செல்கின்றனர்.

-காட்சி மாற்றம்-

குருச்சேத்திரம்– அர்ச்சுனனும் சிகண்டியும்.

**அர்ச்:** வணக்கம் சோதரர் சிகண்டி அவர்களே!

**சிக்ண்:** வாழ்த்துக்களைப் பெறும் எல்லையைத் தாண்டி உயர்ந்தும் வெற்றிகளைப் பெறும் வாய்ப்பினை நெருங்கியும் வந்துவிட்ட உம்மை எவ்வாறு வாழ்த்துவது குந்தி மைந்தனே!

**அர்ச்:** வாழ்த்துப் பெற நான் இங்கு வரவில்லை சோதரரே! கோரிக்கை ஒன்றுடன் வந்துள்ளேன்! இன்று பிதாமகருடன் மோதவிருக்கின்றேன். இதில் வெற்றி பெறுவதானால் தங்கள் உதவி அவசியம் தேவைப்படுகிறது. எனது தேர்ச் சாரதியாக தாங்களே பொறுப்பேற்க வேண்டும்!

**சிகண்:** நிச்சயமாக வருகிறேன்! பீஷ்மரை எதிர்த்துப் போர் புரிய நான் எத்தகைய ஆர்வத்துடன் இருக்கிறேன் என்று உமக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை!

-காட்சி மாற்றம்-

அஸ்வத்தாமன் தன்தந்தை துரோணாச்சாரியாரிடம் வருகிறான்.

**அஸ்வ:** வணக்கம் அப்பா! போர்க்களத்தில் வெற்றிபெற வேண்டும் என்ற வாழ்த்தினையே தங்களிடம் எதிர்பார்க்கிறேன்!

**துரோ:** ஆசி வழங்குபவர் அளிக்கும் ஆசியினை, ஆசி பெறுபவர் ஏற்றுக் கொள்ளுவதுதான் மரபு! இத்தகைய ஆசிதான் வேண்டுமென்று கோரி ஆசி வழங்குபவரை இக்கட்டான நிலைக்குள்ளாக்கக் கூடாது மகனே அஸ்வத்தாமா!

**அஸ்வ:** அப்படியானால் துரியோதனனின் தலையைக் கொய்தெறிய உத்தரவு தாருங்கள்! பீஷ்மர், மாமா கிருபாச்சாரியார் மற்றும் தங்கள் மீது அபாண்டமும் பழியும் கூறுவதை என்னால் சகிக்க முடியவில்லை அப்பா!

**துரோ:** சந்திரனுக்கும் நெருப்புக்கும் வித்தியாசம் தெரியாத அந்த அறிவிலியின் வார்த்தைக்கு மதிப்பளிக்க வேண்டாம் மகனே!

**அஸ்வ:** என்னால் அவனுடைய தூஷணைகளைக் கேட்டு சும்மா இருக்க முடியவில்லை அப்பா! ஒருண்மையைக் கூறுங்கள்! நீங்கள் யாருடைய பக்கத்திலுள்ளீர்கள்?

**துரோ:** நாங்கள் இப்போ அஸ்தமனமாகும் சூரியனுக்குச் சமமானவர்கள்; புதிய சூரியன் எழுவதற்கு வழிவிட வேண்டிய நிலையிலுள்ளோம்! கங்கையின் மைந்தரும் நாங்களும் படும் வேதனை சொல்லிலடங்காது மகனே! எமது கடமையை மட்டும் செய்கிறோம். உன்னால் இயன்றவரை உன் கடமையைச் செய்! இந்தப் போரில் வாழ்த்துக்களால் மட்டும் வென்று விடமுடியாது!

-காட்சி மாற்றம்-

அஸ்தினாபுரம்– திருதாட்டிரரும் சஞ்சயனும் போர்க்களத்தில் நடைபெற்ற சம்பவங்களை ஞானதிருஷ்டி மூலம் கண்டு அவற்றுக்கான வியாக்கியானங்களை சஞ்சயன் திருதாட்டிரரிடம் கூறுகிறான்.

-காட்சி மாற்றம்-

குருச்சேத்திரம்–துரியோதனனிடம் குதிரையில் ஒரு வீரன் வருகிறான்.

**குதி.வீ:** இளவரசரே! இன்று அர்ச்சுனனுடைய இரதத்தின் சாரதியாக இளவரசர் சிகண்டி வருகிறார்.

**துரி:** சிகண்டியா?... (சகுனி பக்கம் திரும்பி) மாமா! அர்ச்சுனனின் இரதச் சாரதியாக இன்று சிகண்டி வருகிறானாம்!

**துச்சா:** ஆணும் பெண்ணுமற்ற ஒருவரைப் பற்றி ஏன் கவலைப் படவேண்டும் மாமா?

**அஸ்வ:** இருப்பினும், ஒரே தேருக்கு இரு சாரதிகளா?

**சகுனி:** கங்காபுத்திரரிடம் இக் கேள்வியைக் கேட்டுப்பார் மருமகனே! கடந்த இரவு பிதாமகரைக்காண்பதற்கு யுதிஷ்டிரன் வந்திருந்தான். ஏதோ மர்மம் இருக்கிறது போல் தெரிகிறது!

துரியோதனன் தனது இரதத்தை பீஷ்மரின் இரதத்தின் அருகில் கொண்டு செல்கிறான். இருவரும் இரதத்திலிருந்து கீழ இறங்குகின்றனர்.

**துரி:** வணக்கம் பிதாமகரே! அண்ணன் யுதிஷ்டிரன் இரவு தங்களிடம் வந்தாராமே?

**பீஷ்ம:** வந்திருந்தார்! நிச்சயமாக உன்னுடைய அணியை விட்டு விலகி தன்னுடைய அணியில் வந்து சேரும்படி அவர் கேட்கவில்லை மகனே! நான் அவருக்களித்த ஆசியினைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கவே வந்திருந்தார்!

**துரி:** எத்தகைய ஆசியோ?

**பீஷ்ம:** யுத்தம் தொடங்குவதற்கு முன்னர் நான் அவர்களுக்கு வெற்றி கிடைக்கட்டும் என்று வாழ்த்தினேனல்லவா? அதற்கு நீயும் ஆட்சேபம் தெரிவித்தாயே! அதே ஆசியைத்தான் திரும்பப்பெறக் கோரினார் யுதிஷ்டிரர். என்னை போரில் எவராலும் வெல்ல முடியாது என்பதனால் அத்தகைய ஆசியும் அர்த்தமற்றதொன்று தானே மகனே?

**துரி:** அதற்கு தங்கள் பதில் என்னவோ?

**பீஷ்ம:** கொடுத்த எதனையும் திரும்பப் பெறுவது என் வழக்கமில்லை என்று கூறி முடியுமானால் என்னை ஒழித்துக் கட்டுமாறும் கூறி அனுப்பினேன்!

**துரி:** பிதாமகரே! தாங்கள் பாண்டவர் பக்கமா அல்லது என் பக்கமா என்பதை என்னால் கண்டறிய முடியாதிருக்கிறது!

**பீஷ்ம:** அது ஒன்றும் பெரிய விடயமில்லை மகனே! யுதிஷ்டிரரின் பிரச்சனைக்கு தீர்வு- என்னைக் கொல்வது தான் என்று கூறிவிட்டேன். ஒரு பெண் போர் முனையில் என்னை எதிர்த்தால் நான் அவளுக்கெதிராக ஆயுதம் ஏந்த மாட்டேன் என்று கூறி அனுப்பினேன். உன் சகுனி மாமா உட்பட அதைத்தான் எந்தச் சத்திரிய வீரனும் செய்வான்!

**துரி:** அது சரி- சிகண்டி இன்று அர்ச்சுனனின் தேர்ச்சாரதியாக ஏன் வருகிறானாம்?

**பீஷ்ம:** ஓஹோ...... அப்படியா? நான் தொடர்ந்து சண்டை செய்ய வேண்டுமானால் சிகண்டி என் எதிரே வராமல் பார்த்துக் கொள்ளுங்கள்! ஏனென்றால் சிகண்டி ஒரு பெண்!

துரியோதனன் சகுனியிடம் இரதத்தில் செல்கிறான்.

**சகுனி:** மருமகனே! ஏதாவது புதுத்தகவலுண்டா?

**துரி:** மாமா! பிதாமகரை சிகண்டி எதிர்த்தால், அவன் முன் தனது ஆயுதங்களை ஏந்தப் போவதில்லை என்று பிதாமகர் கூறிவிட்டார்! சிகண்டியின் பின்னால் பதுங்கியிருந்து அந்தக் கோழை அர்ச்சுனன் பீஷ்மர் மீது பாணங்களைப் பொழியப் போகிறான்.

**சகுனி:** அப்படியானால் அர்ச்சுனனின் இரதம் பிதாமகரின் அருகே நெருங்கவொட்டாமல் தடுத்துப் பாதுகாக்கும்படி நமது படைத் தளகர்த்தர்களுக்கும் பிரதானிகளுக்கும் கட்டளையிடு!

<u>பின்னணிப் பாடல்:</u>

எத்தனை பிறவிதனை ஏற்றாலு மோர் நாளில்
உத்தமராம் பிதாமகரின் உயிரதனைப் பறிப்பதென்று
சத்தியமதாய்ப் பகன்ற பத்தினியாம் அம்பாவின்
ஒத்துருவே சிகண்டி யெனும் சத்துருவாயாகுமென
கங்கைமைந்தர் தானுணர்ந்து காலனவன் பிடியினிலே
சங்கமிக்கத் துணிந்து விட்டார்; கங்கையும் தன்
மைந்தனவன் படுத்துறங்க ஏற்ற தொரு தனியிடத்தை
தேர்ந்தெடுத்துத் தூசகற்றி துப்புரவு செய்த நின்றாள்!

(தொடர்ந்து வரும்)

எம்.ரீ.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்ற மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.





தருவது வியோடெ

# களமான கடல்

அரசு-புலிகள் பேச்சுவார்த்தை ஆரம்பித்த போது 'தி ஐலண்ட்' வெளியிட்ட கருத்தோவியம் இது. அமெரிக்காவின் 'ஏசியா வீக்' சஞ்சிகை அதனை மறுபிரசுரம் செய்திருந்தது.








வெளியில் இருந்து நோக்கினால் கடலின் ஆழம் கண்ணுக்குத் தெரியாது.

புலிகளின் யுத்தமும் அப்படித்தான். 'இரண்டாம் கட்ட ஈழப் போர்' ஆரம்பித்த பின்னர்தான் 'கடற்புலிகள்' அமைப்பு முக்கியத்துவம் பெற்றது.

வடக்கில் நடைபெறும் போரில் மட்டுமல்ல, வடக்கு-கிழக்கு போக்குவரத்து தொடர்புக்கும் கடல் ஒரு பிரதான அம்சம்.

இரண்டாம் கட்ட ஈழப் போரின் பின்னர் கடற்புலிகள் நடத்திய தாக்குதல்.

வல்வெட்டித்துறை - 10.07.1990 -கடற்படை ரோந்துப் படகு

வல்வெட்டித்துறை - 04.05.1991 -கட்டளைக் கப்பல்.

நாகதேவன்துறை - 25.08.1993 -வோட்டர் ஜெட்.

பருத்தித்துறை - 29.08.1993 -டோரா படகு.

காங்கேசன்துறை - 16.08.1994 -டோரா படகு

கற்பிட்டி - 19.09.94 -சாகரவர்த்தனா கப்பல்

வெற்றிலைக்கேணி - 08.10.1994 -ஓசன் டிரேடர் கப்பல்.

மூன்றாம் கட்ட ஈழப் போர் கடற் தாக்குதல் மூலமே ஆரம்பமானது.

திருமலையில் 19.05.1995- சூரயா, ரணசுரு.

கடற் கரும்புலிகளை எதிர்கொள்ள கடற்படை புதிய உத்திகள் பற்றி யோசிக்க வேண்டியிருக்கிறது.

இல்லாவிட்டால் கடற்போரில் புலிகளின் கைகளே மேலோங்கும்.

ஆனால், படகுகளில் வரும் கரும்புலிகளோடு, புதிதாக 'நீரடி மீட்புப் பிரிவு' என்ற பெயரில் உருவாகியுள்ள கடற் கரும்புலிகளையும் எதிர்கொள்வது இலகுவான காரியமல்ல.

புலிகள் என்ன சொல்கிறார்கள்? "தமிழீழ விடுதலை கிட்டும்வரை கடற்புலி இருக்கும்"

மூன்றாம் கட்ட ஈழப் போரில் கடலில் கொந்தளிப்பான நிலை உருவாக அலை மட்டுமல்ல, இரு தரப்பின் போர்க் கலையும் காரணமாக இருக்கப்போகிறது.



எத்தனையோ கதாநாயகிகள் எம்.ஜி.ஆரோடு நடித்தபோதும் ஜெயலலிதாவைத்தான் எம்.ஜி.ஆர்.ரசிகர்கள் 'அண்ணி' என்றழைத்தனர்.

அந்த ஜோடிப் பொருத்தமே எம்.ஜி.ஆருக்குப் பின்னர் ஜெயலலிதாவுக்கு யோகமானது.

ஜெயலலிதா புத்திசாலிதான். எழுத்தாற்றல், பேச்சாற்றல் உள்ளவர்தான், 'தாய்' உட்பட உலக இலக்கியங்களை படித்தவர்.

'நடிகை' என்று சொல்லி அவரது தனிப்பட்ட வாழ்வை விமர்சித்து வீழ்த்தலாம் என்று நினைத்தவர்கள் தோற்றுப் போயினர்.

ஆனால், ஒரு அரசியல் தலைவி என்ற வகையில் இன்று தனக்குத்தானே குழி தோண்டிக் கொண்டிருக்கிறார் ஜெயலலிதா.

அளவுக்கு மிறிய தனிநபர் வழிபாடு, தனிப்பட்ட நட்புகளை முதன்மைப்படுத்துவது, பொதுப் பணத்தை விரயமாக்கும் பகட்டு போன்றவை ஜெயலலிதாவால் ரசிக்கப்பட்டாலும் அவைதான் அவருக்கு எதிரிகள்.

எனினும், கிராம மக்களிடம் எம்.ஜி.ஆர் விட்டுச் சென்ற மாபெரும் செல்வாக்கு ஜெயலலிதாவை பாதுகாக்கும் கவசமாக இருப்பதுதான் பலம்.

காங்கிரஸ்-தி.மு.க. கூட்டு சேர்ந்தால் அந்த பலம் மட்டும் ஜெயாவுக்கு போதாது. ஆனால் கூட்டுச் சேருவார்களா? ஜெயாவின் அரசியல் எதிர்காலத்தை தீர்மானிக்கப்போகும் கேள்வி அதுதான்.






## வேகமான பெண்

டென்னிஸ் விளையாட்டுப் போன்றதொரு விளையாட்டு 'ஸ்குவாஷ்'

பந்தினை ரக்கற்றினால் அடித்து சுவற்றில் மோதவைத்து விளையாடுவது இது.

தூள்கிளப்புகிறார் இந்திய வீராங்கனை மிஸ்ஸா கிரெவால்.

பம்பாய் ஜிம்கானா அரங்கத்தில் பயிற்சி பெற்று புது டெல்லி ஜீனியர் சாம்பியன் பட்டம் வென்றார். பயிற்சியின் போது 'காரியத்தில் கண் வைத்தது போல்' தனக்குகந்த துணைவனையும் கண்டு காதல் கொண்டார். நிதி நிறுவனமொன்றின் தலைவராக துபாயில் பணிபுரியும் ரசிட் ஜெகாஞ்சிர் என்பவர் தான் இவரின் விளையாட்டு வழிகாட்டியும் எதிர்கால வாழ்க்கைத் துணைவரும்.

தன்னம்பிக்கை, கம்பீரம், ஆர்வம், வேகம் எல்லாம் கலந்த பெண் மிஸ்ஸா கிரெவால்.

இதுவரை நூறு முரசுகள்-அத்தனை முரசுகளையும் பத்திரமாய் சேகரித்துவைத்துள்ள அன்பு நெஞ்சங்கள் ஒருமுறை அனைத்தையும் புரட்டிப் பார்க்கலாம்.

பேச்சுவார்த்தை பற்றி முன்னுக்கு பின் முரணாக பல பக்கங்களில் இருந்து செய்திகள் விமர்சனங்கள் வந்தன.

ஆனால்-முரசு மட்டுமே பிரமைகளுக்கு இடம் கொடுக்காமல் துல்லியமாக கணிப்புக்கள்-கருத்துக்கள் தந்தது. நிச்சயமாக இது சாதனைதான். வெறும் புகழ்ச்சியில்லை.

முரசின் பணி தொடரும். பொறுப்புணர்வோடு வாசகர் நம்பிக்கைக்கு விசுவாசமாக 'முரசு' என்றுமிருக்கும்.

